Reg. No. 245

ஆங்கீரஸ-ஆவணி
1932-ஸூ ஆகஸ்டு-செப்டெம்பர்மீ

# பாரதி




4 OCT 193

மாலை 4. மணி 5.

ஓர் செந்தமிழ்

## மாதப் பத்திரிகை.

ரா. நாராயணஸ்வாமி,
ஆசிரியர்.

ரா. சுப்ரமண்யம்,
பொறுப்பாசிரியர்.

பிரசுராலயம்:
உத்தமபாளையம்
மதுரை ஜில்லா.

N32.4.5
197882

வெளிவந்துவிட்டது!      வெளிவந்துவிட்டது!!

# சுப்ரமண்ய பாரதியார்

அல்லது

## தமிழ் நாட்டின் தேசிய கவி.

வாழ்க்கை வரலாறு கவிதா விலாசம் தேசாபிமானம்
முதலியவற்றைப்பற்றிய

## அரிய ஆராய்ச்சி நூல்.

திரு. சுத்தானந்த பாரதியாரால்
இனிய எளிய ஆவேச நடையில் எழுதப்பெற்றது.

இதுபரியந்தம் இம்முறையில் தமிழில்
வேறொரு நூலும் வெளிவரவில்லை.

இதில் பாரதியாரைப் பிணித்திருந்த ஆசா, பாச, வாழ்க்கை வரலாறு ஆகிய அவசியமான ஆனால், இன்றுள்ளவரை அச்சேறாத புதிய விஷயங்களையும், அவர்தம் கவிதையின் போக்கையும், நூல்களின் கருத்தையும், நடையின் சிறப்பையும் போதிய வாறு மிகத் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது.

பாரதியார் நூல்களனைத்தையும்
இதில் ஆராய்ச்சி செய்யப்பெற்றிருக்கிறது.

பெரியோர்களின் சிறப்புரைகளும் பத்திரிகைகளின்
மதிப்புரைகளும் அதிகமாகப் பெற்றிருப்பதொன்றே
இதன் உயர்வையும் அவசியத்தையும் காட்டுகின்றது.

இன்றே இந் நூலை வாசித்து உண்மைகளை
அறிய முயலுவீர்களாக.

கிளேஸ் பேப்பர்; அழகான அச்சு; படத்துடன்
**240** பக்கங்கள் கொண்ட புத்தகம் 1-க்கு விலை ரூ. 1.

மானேஜர்,
"பாரதி" புத்தகாலயம், உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

## ராட்டூர் வீரன்-துர்க்காதாஸ்.

வங்காளகவி சம்ராட் துவிஜேந்திர லால் ராய்
எழுதிய தேசீய-சரித்திர நாடகம்.
க்ஷத்ரபதி சிவாஜி, ரஜபுத்திர சிங்கம் பிரதாப சிம்மங்கள்
வீர விளக்கு க்ஷத்திரஸால் முதலிய இந்திய வீர
தெய்வங்களுடன் இணையான வெற்றி வீரன்
துர்காதாஸ் ஒருவனே.
ஆரம்ப முதல் இறுதிவரை வீரம்! வீரம்!! வீரம்!!!
தேச பக்தி ததும்புகிறது; சத்தியம் ஜெயிக்கிறது.
திலேர் கானின் தீரம், மஹா மாயாவின் மாய சக்தி,
ரஸியாவின் கவிதா விலாசம், காஸிமின் பிரமாணிக்க [illegible]
எல்லாம் அற்புதம்! ஆச்சர்யம்!! இன்பம்!!!
ஆவேச நடை! அலங்கார பாஷை! மயிர் சிலிர்க்கும் செயல்கள்!
விலை ரூபாய் ஒன்றே.


OCT 1932


பாரத நாட்டின் வீரப் புதல்வி
## ஜான்ஸி மகாராணி லக்ஷ்மீ பாய்
ஜீவிய சரித்திரம்.
பிரதி 1-க்கு விலை அணா 0—2—0.
வேண்டுவோர் தபாற் செலவிற்கும் சேர்த்து இரண்டரையணா
ஸ்டாம்பு அனுப்பி வைக்கவும்.
10 பிரதிகள் வாங்குவோருக்குத் தபாற் செலவு இனாம்.
வியாபாரிகளுக்குத் தகுந்த கமிஷன் கொடுக்கப்படும்.
"பாரதி" புத்தகாலயம், உத்தமபாளையம், மதுரை ஜில்லா.


## விளம்பர விகிதம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சாதாரண | பக்கம் | 1-க்கு | மாதம் 1-க்கு | ரூ. | 10—0—0 |
| ,, | ,, | ½-க்கு | ,, | | 5—8—0 |
| ,, | ,, | ¼-க்கு | ,, | | 3—0—0 |
| கவர் | ,, | 2 & 3 | ,, | | 15—0—0 |
| ,, | ,, | 4 | ,, | | 20—0—0 |

விளம்பரத்திற்கு எப்பொழுதும் முன்பணம் அனுப்பவேண்டும்.
நீண்டகால விளம்பரஞ் செய்வோர் மானேஜருக்கு எழுதவும்.



19,7882
சென்னை-600 028

சிறந்த செந்தமிழ் மாலிகை.

## பொருள் அடக்கம்.

மாலை 4. ஆங்கீரஸ—ஆவணி. மணி 5.


தொடர் எண். பக்கம்.

1. காதல் கனவு:—பாரதியார் ... ... 266
2. ஒன்பது மாதங்கள் ... ... ... 268
3. "நீலத் திரைகட லோரத்திலே":—
திரு. ஆ. வ. பதுமநாப பிள்ளை அவர்கள் ... 281
4. பிஜியர்களின் நலவிதி:—திரு. தினகரன் அவர்கள் ... 286
5. நாளந்தா சர்வகலாசாலை:—
திரு. சி. கு. நாராயணசாமி முதலியார் அவர்கள் ... 292
6. தனவைசிய வாலிபர்களுக்கு:—
திரு. A பழனியப்பா அவர்கள் ... 303
7. பர்மாவும் பர்மியரும்:—
திருமதி. C. K. தமயந்தி அவர்கள், B. A. ... 304
8. ஓர் நினைப்பு:—("தினமணி") ... ... 308
9. தேச ஊழியம்:—
பண்டித திரு. இராம சுப்ரமண்ய நாவலரவர்கள் ... 316
10. இந்தியாவும் பாரசீக தேசமும்:—
திரு. வெ. ஸ்ரீநிவாஸய்யங்கார் அவர்கள், எம். ஏ. ... 320
11. ஆராய்ச்சி மேடை ... ... ... 327
12. ஆசிரியர் குறிப்புகள் ... ... ... 331


---


ஓர் செந்தமிழ் மாதப் பத்திரிகை.


எல்லாரும் ஓர் குலம், எல்லாரும் ஓர் இனம்,
எல்லாரும் இந்தியா மக்கள்;
எல்லாரும் ஓர் நிறை எல்லாரும் ஓர் விலை,
எல்லாரும் இந்நாட்டு மன்னர்.


ரா. நாராயணஸ்வாமி, ஆசிரியர். ரா. சுப்ரமண்யம், பொறுப்பாசிரியர்.

| மாலை 4 | ஆங்கீரஸ-ஆவணி<br>1932-ஆ ஆகஸ்டு-செப்டெம்பர்மீ | மணி 5 |
|---|---|---|


# காதற் கனவு.

கவியரசன் சி. சுப்ரமண்ய பாரதி.

"பொய்யாய்ப் பழங்கதையாய்க் கனவாய் மெல்லப் போனதுவே."

1. வாழ்வுமுற்றுங் கனவெனக் கூறிய
மறைவலோர்தம் உரைபிழை யன்றுகாண்!
தாழ்வு பெற்ற புவித்தலக் கோலங்கள்
சாதமன்றெனல் யானும் அறிகுவன்
பாழ்கடந்த பரநிலை யென்றவர்
பகருமன்னிலை பார்த்திலன் பார்மிசை.
ஊழ் கடந்து வருவது மொன்றுண்டோ?
உண்மைதன்னி லோர்பாதி யுணர்ந்திட்டேன்.

2. ஆண்டோர்பத்தினி லாடியும் ஓடியும்
ஆறுகுட்டையி னீச்சினும் பேச்சினும்
ஈண்டுபன்மரத் தேறியி றங்கியும்
என்னொடொத்த சிறுவ ரிருப்பால்
வேண்டுதந்தை விதிப்பினுக் கஞ்சியான்
வீதியாட்டங்க ளேதினுங் கூடிலேன்!
தூண்டுநூற்கணத் தோடு தனியனாய்த்
தோழமைப்பிறி தின்றி வருந்தினேன்.

3. ஒன்பதாய பிராயத்த ளென்விழிக்
கோது காதைச் சகுந்தலை யொத்தனள்
என்பதார்க்கும் வியப்பினை நல்குமால்
என்செய்கேன்! பழி யென்மிசை யுண்டுகொல்?
அன்பெனும் பெருவெள்ள மிழுக்குமேல்
அதனை யாவர் பிழைத்திட வல்லரே!
முன்புமாமுனி வோர்தமை வென்றவில்
முன்ன ரேழைக் குழந்தையென் செய்கனே!

4. நீரெடுத்து வருவதற் கவள்மணி
நித்திலப்புன் னகைச்சுடர் வீசிடப்
போரெடுத்து வருமதன் முன்செலப்
போகும்வேளை யதனிற்றி னந்தொறும்
வேரெடுத்துச் சுதந்திர நற்பயிர்
வீழ்ந்திடச் செய்தல் வேண்டிய மன்னர்தம்
சீரெடுத்த புலையியற் சாரர்கள்
தேசபக்தர் வரவினைக் காத்தல்போல்.

5. காத்திருந்தவள் போம்வழி முற்றிலும்
கண்கள் பின்னழ கார்ந்து களித்திட
யாத்ததோர் உருளைப்படு மேழையான்
யாண்டத்தோர் செல்வழி யிழுப்புற்றெனக்
கோத்த சிந்தையோ டேகியதில் மகிழ்
கொண்டுநாட்கள் பலகழித் திட்டனன்.
பூத்த ஜோதி வதனந் திரும்புமேல்!
புலனழிந் தொருபுத்துயி ரெய்துவேன்.



6. கானகத்தில் இரண்டு பறவைகள்
காதலுற்றது போலவு மாங்ஙனே
வானகத் தியக்கர் இயக்கியர்
மையல் பூண்டு மயங்குதல் போலவும்
ஊனகத்ததும் உவட்டுறு மன்புதான்
ஒன்றுமின்றியே யுயிர்களி லொன்றியே
தேனகத்த மணிமொழி யாளொடு
தெய்வ நாட்கள் சிலகழித் தேனரோ.

7. ஆதிரைத்திரு நாளதிற் சங்கரன்
ஆலயத்திலோர் மண்டபம் தன்னில்யான்
ஜோதிமாதொடு தன்னந் தனியனாய்
சொற்களாடி யிருப்ப வனிதையும்
பாதிபேசி மறைந்துபின் றோன்றித்தன்
பங்கயக்கையில் மைகொணர்ந் தொரு
சேதிநெற்றியிற் பொட்டுவைப் பேனென்று
திலதமிட்டனள் செய்கை யழிந்தனன்.

குறிப்பு:— கவியரசன் பாரதியின் இக் காதற் கனவு இன்னும் இயந்திரமேறவில்லை. விவேகானந்தன் விழா, திலகன் திருநாள் முதலிய தினங்களிலே பாரதியாருடன் பழகியபோது பாடக் கேட்ட இப் பாடல்களின் கவியழகையும், காதல் ரஸத்தையும்தான் இங்கு தருகிறோம். பண்ணழகைச் சொல்ல பாஷைக்கு சக்தியில்லை. எம் இருதயம் மாத்திரம் இன்னும் அவைகளை பாடியவண்ணமா யிருக்கின்றன. இத்துடன் பகுதி பெற்ற ஆங்கிலக் கண்டனம் பதிப்பாகிவிட்டது. இக் கனவில் பாரதியார் தமது வாலிபப் பருவத்தை—பொறுப்பறியாத பள்ளிப் பிராயத்தை—காதற் புதுக் காலத்தைத்தான் வர்ணிக்கின்றார்.

—ஆசிரியர்.

# ஒன்பது மாதங்கள்.

ஆங்கிலக் கணக்கின்படி இப்பொழுது மகான் கிறிஸ்து பிறந்து 1932-வது வருடம் நடக்கின்றது. எட்டுத் திங்கள் எண்ணி ஒன்பதாவதும் முடியப் போகிறது. இந் நவமதிகளுக்கிடையில் இந்தியாவிலே என்னென்ன வெல்லாம் நடந்திருக்கின்றன என்பதை ஒரு மேற்பார்வையாகப் பார்த்துவிட வேண்டும் என்கிற ஆசை எமக்கு ஏன் ஏற்பட்டது? பசித்தவன் பழங் கணக்கைப் பார்த்த மாதிரியா? இல்லை. சென்றுபோன செய்திகளை மீண்டும் மீண்டும் சிந்திப்பதால்—ஒரு மொத்தமாக நினைத்து உருவகப்படுத்துவதால் ஏதாவது பிரசார பலன் கிடைக்கமாட்டாதா? என்ற ஒரே காரணத்தாலன்றி வேறில்லை. அந்தச் சிறு சமாதானத்தோடேயே விஷயத்தை ஆரம்பிக்கின்றோம்.

## வருடப் பிறப்பு

இந்த வருஷம் எந்த லக்கினத்தில், எந்த நட்சத்திரத்தில், எந்தத் திதியில் பிறந்தது என்பது எமக்குத் தெரியாது; தெரிய வேண்டிய அவசியமும் இல்லை. அது ஜோதிடர்கள் வேலை; அவர்களே பார்த்துக் கொள்ளட்டும். ஆனால் 1931 டிசம்பர் 31-ம் நாள் நடு நிசியில் 12 மணி யடித்த அடுத்த நிமிஷத்தில்தான் இந்த ஆண்டு பிறந்தது என்பதை மாத்திரம் நாம் திட்டமாய்—தீர்க்கமாய் சொல்லுவோம். அப்பொழுது இந்தியா எவ்வாறிருந்தது என்பதை அரசியல் திருஷ்டியால் பார்த்தாக வேண்டும். இல்லாவிட்டால் விஷயம் விளங்காது.

## இந்திய அரசியல்

1931 டிசம்பர் 28ல் இந்தியாவின் சர்வாதிகாரி காந்திஜீ லண்டன் வட்ட மேஜைக்கு வாழ்த்துச் சொல்லிவிட்டு பம்பாய் வந்திறங்கினர். அன்று முன் தினம் எல்லைப்புற காந்தியும், இளஞ் சிங்கம் ஜவஹரும் இஸ்லாத்தின் தவப்பயன் ஷெர்வாணியும் சிறைப்பட் டிருந்தார்கள். அவசரச் சட்டங்களும் பிறந்திருந்தன. ஒரு சாரார் சண்டைக் கொடியேற்றி போர்வேண்டி யுத்த சன்னத்தராய் நிற்கிறார்கள். இன்னொரு சாரார் சமாதானக் கொடியைச் சூழ்ந்து நிற்கின்றனர். சேனாதிபதியின் கட்டளைக்காகவும் அவனது கைவிரல் அசைப்பிற்காகவும் நாடு



காத்திருந்தது. காந்திஜீ எப்பொழுது தமது இடக் கையைத் தூக்கி ஒல்லிய விரலால் ஒரு தரம் சமிக்ஞை செய்வாரென்று பாஸ், வேண்டும் சேய் தாய் முகத்தை நோக்குவது போல சுதந்திரக் கண்கள் மணி பவனத்தை நோக்கிக்கொண் டிருந்தன. ஏனெனில் அது சமாதான காலம். இந்தியாவுக்காக காந்திஜீயும், பிரிட்டனுக்காக இர்வின் பிரபுவும் ஒரு ஒப்பந்தத்தைப் பேசி ஏதோ சில சமாதான ஷரத்துக்களை இறுக்கி அதனடியில் ஒல்லிக் கையையும் ஒற்றைக் கரத்தையும் நாட்டியிருந்த சமயம். ஆனால் அந்த ஒற்றைக் கையை உதறித் தள்ளிவிட்டு இரட்டைக் கரத்தோடு வில்லிங்டன் பிரபு இந்தியாவில்—சிம்லா சிகரத்திலிருந்தார்.

## ஒப்பந்தம் உடைந்தது

சாந்த மூர்த்தி காந்தியோ சமாதானப் பிரியர். சமாதானத்தை ஞாபகப்படுத்தியும் பேட்டி வேண்டியும் லார்ட் வில்லிங்டனுக்கு ஸ்ரீமுகம் ஒன்று அனுப்பியிருந்தார். ஏரோப்ளேன் வைஸ்ராய் அதை யேற்காமல் போர் முனைந்துவிட்டார். அந்த நிருபமும் சரியாய் நமது இந்த வருடம் பிறந்த நேரத்திலேதான் காந்திக்குக் கிடைத்தது. அப்பொழுது மணி பவனத்தில் சகல சாமந்தகர்கள் மத்தியில் காந்திஜீ காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டத்தை நடத்திக்கொண் டிருந்தார். எல்லோரும் அக் கடிதத்தை காந்திஜீக்கு வைஸ்ராயனுப்பிய புது வருஷ வாழ்த்தென்று சொல்லிக்கொண்டார்கள். அப்புறமென்ன? காங்கிரஸ் தரப்பிலும் போர் திட்டங்கள் போடப்பட்டன!

## சத்தியப் போர்

நாடெங்கும் தலைவர்களும், தொண்டர்களும் கைதி செய்யப்பட்டார்கள். ஆணும், பெண்ணும், குழந்தைகளும்கூட சிறையாயினர். ஜனவரி 3-ம் நாள் இரவு (4உ) நடு நிசியில் இயேசு கிறிஸ்து ஏரோதாசனால் கைது செய்யப்பட்டதே போல் காந்திஜீயும் கைது செய்யப்பெற்றார். அப்பொழுது அவருக்கு நல்ல நித்திரை. நாடெல்லாம்—ஹிமய முதல் குமரி வரை இராஜரீகக் கடல் 'கொல்'லெனக் குமுறிக்கொண் டிருக்கையில் அதன் சர்வாதிகாரி நிம்மதியாய் நித்திரை போகிறாரென்றால் எவ்வளவு நெஞ்சழுத்தம்! எத்தனை மனவமைதி!! இந்தியாவின் ஏகத்தலைவன்—ஒற்றைப் பிரதிநிதியினுடைய முகத்திலே ஒரு வெளிச்சங் காட்டப்பட்டதும் 'நீர்தானா மோஹன் தாஸ் கரம்சந்த் காந்தி?' என்றொரு ஓசை பிறந்தது. 'ஓம்' என்றார் பகவான். வாரண்டு அவரது கையில் வைக்கப்பட்டதும் அதில் கைச்சாற்றிட்டார். "சிறிது நேரம் பிரார்த்தனை செய்வதற்கு அவகாசம் அளிப்பீர்களா?" என்று அவரை காந்திஜீ இந்திய மரியாதையில் கேட்டார். அளிக்கப்பட்டது; எல்லோரும் எழுந்து பிரார்த்தனை செய்தார்கள். அப்புறம் அவர் தமது மனைவி கஸ்தூரி, மகன் தேவி

தாஸ், ஸ்வீகாரப் புதல்வி மீராபாய் முதலியோரிடம் விடை பெற்றுக் கொண்டு எரவாடாவுக்குப் போய்விட்டார். இப்பொதும்கூட அங்கு தான் கம்பிகளுக்கிடையே கிடக்கின்றார். "கட்டுண்டோம், பொறுத் திருப்போம், காலம் மாறும்."

அன்று முதல் இன்று வரை பத்திரிகைகளில் வேறு செய்தியே யில்லை. பதிவு எண் முதல் பதிப்பாளர் வரை இந்தியாவின் சண்டை தான். சிறைப்படுவோர் தொகை கொஞ்சமா! அடிபடுவோர் எண்ணுக்கும் அளவுண்டா! பறிமுதலுக்கும் பஞ்சமா! மகா நாடுகளுக்கும் கணக்கா! சிறைப்பட்டார் ஒரு லட்சத்தைத் தொடலாம். சட்டத்தை மறுப்போர் பல லட்சங்களாகலாம். அவர்கள் எல்லோருமே கைதி செய்யப்பட்டிருந்தால் இப்பொழுதிருக்கும் சிறைகள் கொள்ளாமல் கட்டிடம் பலப் பல கட்டப்பட்டாக வேண்டும். ஆனால் அவ்வாறு நிகழவில்லை.

## பணப் பஞ்சம்

இத்துடன் நின்றதா இந்தியாவின் கஷ்டம்! தீப்பற்றிய வீட்டில் காற்றுங் கலந்தது போல் பணப் பஞ்சமும் கூடிக்கொண்டது. அக விலை மலிவு. அதனால் விவசாயிகள் தங்களுக்கு விளைந்த தானியமணிகளை மிகமிகக் குறைந்த விலைக்கு—மனித வாழ்க்கை மலிவில் நடந்த 40, 50 வருடங்களுக்கு முன்னிருந்த விலைக்கு விற்று இப்பொழுதைய கிராக்கி வாழ்க்கையை ஈடுசெய்ய முடியாமல் விழி பிதுங்கும் நிலைமையி லிருந்தார்கள். வரிகட்ட வகையில்லை; வயிறு கழுவவும் வழி கிடையாது. இது பொதுவாய் உலகப் பிரச்னையேயாயினும் வறுமை நாடுகளிலேதான் அதன் முழு பாரமும் பொறுத்தது. இந்தியா விவசாய தேசம். ஏதாவது சாகுபடி செய்து வயிற்றுக்கு வைத்தது போக மிச்சத்தை நாலு காசுக்கு விற்று நடைமுதல் செலவு செய்வது விவசாயிகளின் வழக்கம். இவ் வருடத்தில் அதற்கிடமில்லை. அமெரிக்கா, பிரான்ஸு முதலிய பணக்கார தேசங்களையே பணப் பஞ்சம் பிடுங்கித் தின்கையில் செல்வமிழந்த இந்தியாவைப்பற்றி என்ன சொல்லலாம்! வர்த்தக நாடாகிய இங்கிலாந்தின் செல்வ நிலையும் மோசம். அதை நிர்வகிக்க முடியாமல் பழைய அரசாங்கம் கவிழ்ந்து புதிய அரசாங்கம் அமைக்கப்பட் டிருக்கிறது. தொழில் கட்சி சர்க்காரால் நிறுத்த முடியாத செல்வ நிலையை கன்ஸர்வேட்டிவ் (கவர்ன் மெண்டார்) நிறுத்திவிடுவார்களா? பார்ப்போம். ஜெர்மனியால் யுத்தக் கடன் கொடுக்க முடியவில்லை. நேர்மையுடன் ஒற்றை வரியில் முடியாதென்றும் சொல்லிவிட்டது. இவ்வாறே இப் பிரபஞ்சத்தின் ஒவ்வொரு நாடும் பணப் பஞ்சத்தால் தத்தளிக்கின்றது. ஆனால் ருஷியா? ருஷியா மாத்திரம் இச் சுழற்சியில் அகப்படவில்லை! அதன் விவசாயம் பூர்வபக்ஷத்துப் புது நிலவைப் போல் ஒளி பரப்பி வருகிறது. தொழி



லுக்கும் குறைச்சலில்லை. வேற்று நாடுகளிலிருப்பது போன்று வேலையில்லாத் திண்டாட்டம் ருஷியாவுக்குக் கிடையாது. உற்பத்திப் பொருள்கள் அங்கு குவிந்தவண்ண மிருக்கின்றன. குறைந்த செலவில் உயர்ந்த சரக்கை உண்டாக்கி உலகச் சந்தைகளில் மலிந்த விலைக்கு விற்று ருஷியா தனது செல்வ நிலையை, யுத்த காலத்துக்கு முன்னிருந்த நந் நிலைக்குக் கொண்டுவந்திருக்கிறது. பயிர்த் தொழிலிலும் நல்ல லாபம். ஆனால் அங்கு நடப்பது சோவியத் குடியாட்சி!

'இப் பஞ்சத்தை நிவிர்த்திக்க ஏதாவதொரு வழி கிடைக்க மாட்டாதா?' என்று ஒவ்வொரு நாட்டின் பொருளாதார நிபுணர்களும் சதா சர்வ காலமும் சிந்தனையிலேயே மூழ்கிக் கிடக்கின்றனர். இங்கிலாந்தில் இறக்குமதியாகும் பிற நாட்டுப் பொருள்களின் மீது அதிக வரி விதித்து பலமான சுங்கச் சுவர் சமைத்து பிரிட்டிஷ் பொருள்களை பிரிட்டனில் செலாவணி செய்வதில் பிரிட்டிஷ்காரர்கள் பெரும் பிரயத்தன மெடுத்து வருகின்றனர். அதுவும் ஒரு நல்ல முறைதான். அயல் நாட்டுச் சரக்குகள் அதிகத் தீர்வை விதிக்கப்படுவதால் அவைகளை அதிக விலை கொடுத்து வாங்காமல் வரி யில்லாத உள் நாட்டு உற்பத்திப் பொருள்களைத்தான் குறைந்த விலைக்கு ஜனங்கள் வாங்குவார்கள். அதனால் உள் நாட்டு உற்பத்தி அதிகரிக்கவும் பலருக்குத் தொழில் கிடைக்கவும் ஜனங்கள் மலிவாய் வாழவும் ஹேதுவாகிறது. இம் முறையைப் பிரசாரஞ் செய்வதில் இங்கிலாந்தில் இளவரசன் முதல் பலரும் ஈடுபட்டிருக்கிறார்கள். துருக்கியிலும் இதே பிரசாரம் பிரகாசிக்கிறது. அயர்லாந்திலும் அப்படியே. ஆனால் இந்தியாவிலோ! இந்தியச் சரக்குகளுக்கு இந்திய சர்க்காரின் ஆதரவு ஒரு சிறிதும் கிடையாது! ஏன்? இந்தியா இங்கிலாந்தின் சந்தையா யிருப்பதாலா?

## சுதேசி இயக்கம்

இந்தியாவுக்கு இவ் வருடம், இன்னொரு வழியில் பார்த்தால் நல்ல நேரத்தில் பிறந்திருக்கிற தென்னலாம், ஏனெனில் அதன் அடிவானத்தில் மின் வெட்டுப் போன்ற ஒரு தேசீயக் கோடு காணப்படுகிறது. சுதேசிப் பிரசாரம் அகன்ற வான வெளியில் ஒரு சிறு நட்சத்திரம் போல் ஒளி பரப்புகிறது. ஆனால் அடிமைகள் அதைக் காணவில்லை. அவர்களது கண்களில் அடிமைத் துரு—அடிமை மாசு அழுத்தமாய்ப் படிந்திருக்கிறது. அதைத் துடைத்துப் பார்வை கொடுக்க சுதந்திர தேவியாலேதான் முடியும்; வேறு எந்தக் கண் வைத்தியர்களாலும் இயலா. "அரசன் அன்று கேட்பான், தெய்வம் நின்று கேட்கும்" என்பது பழமொழி. சுதந்திர தெய்வம் நின்று தான் கேட்கிறது. அவளது அருள் ஒளி இந்தியர்களிடை அசைந்தோடும் நதியின் அலைகளைப் போல் மெதுவாகவே பாய்கிறது. அத

னாலேதான் இந்திய சுதேசி யியக்கம் அத்தனை தீவிர கெதி பெறவில்லை. நம்மவர் வாங்கும் சரக்குகள் இந்தியாவில் செய்யப்பட்டதா அல்லது அன்னிய நாடுகளில் செய்யப்பட்டதா என்பதை அதிகம் கவனிப்பதில்லை. பிற தேசங்களில் சர்வ சாதாரணமான ஒரு கூலிக்காரன்கூட ஒரு பொருளை வாங்குகையில் அது உள்ளூர்ப் பொருளா அல்லது அயலூர்ப் பொருளா என்று நன்றாய்த் தெரிந்தே வாங்குகிறான். சர். சாப்ரூ ஒரு சமயம் துருக்கிக்குச் சென்றிருந்தார். அங்கு அவர் வைத்திருந்த சிகரெட்டுகளை வாங்கிக்கொண்டு துருக்கியில் செய்யப்பட்ட சிகரெட்டுகள் அவருக்களிக்கப்பட்டன. "ஏன்?" என்றார். இது துருக்கி; இங்கே துருக்கிப் பொருள்கள்தான் உபயோகிக்கப்பட வேண்டும் என்ற பதில் வந்தது. எவ்வளவு நாட்டுப் பற்று பாருங்கள்! அவ்வாறே ருஷியாவிலும் ருஷியர்கள் உள் நாட்டுச் சரக்குகளையே உபயோகிக்கின்றனர். பொதுவுடைமைக் கட்சியின் காரியதரிசியாயிருக்கும் ஸ்டாலின் என்பவருக்கு ஒரு சமயம் எவரோ ஒருவர் அழகிய அன்னியச் சிகரெட்டை யளித்தார். ஸ்டாலின் அதை மறுத்து தம்மூர் முரட்டு சிகரெட்டே தமக்குப் போதுமென்றார். இம்மாதிரி நாமும் செய்யாத வரை இந்தியாவில் சுதேசி இயக்கம் என்ன பலனை யளித்துவிடப்போகிறது? இருந்தாலும் 'எறும்பூரக் கல்லும் குழியும்' அன்றோ?

## தங்க நிலை

இனி இந்தியாவின் நாணய நிலை—தங்க விலை. இந்த வருஷத்தில் தங்கம் விலை யேறி விற்றதைப்போல் அது ஸ்ருஷ்டிக்கப்பட்டதிலிருந்து வேறெந்தக் காலத்திலும் ஏற்பட்டிருக்க முடியாது. திடீரென பதின்மூன்று சில்லரையிலிருந்து பதினெட்டு ரூபாய் சில்லரைக்கு உயர்ந்ததை நாம் இதுவரை கண்டதில்லை; கேட்டதில்லை. தவறிருந்தால் திருத்தலாம். இஃதேன் இவ்வாறு தலைகால் தெரியாமலேறியது? என்னும் கேள்விக்கு இந்திய சர்க்கார்தான் பதிலளிக்க வேண்டும். ஏனெனில் ஒரு நாட்டின் நாணயத்தை விலை மதிப்பில் ஏற்றுவதும் இறக்குவதும் அந் நாட்டு அரசாங்கத்தின் வேலையல்லவா? இவ்வாண்டின் ஆரம்பத்திலிருந்து இன்றுவரை இந்தியாவிலிருந்த தங்கமெல்லாம் வெளி நாடுகளுக்குக் கப்பல் கப்பலாய்ச் சென்றுகொண்டிருக்கின்றன. இந்தியர்களும் தங்களுக் கேற்பட்டிருக்கும் பணப் பஞ்சத்தை ஈடு செய்ய வேறு வழி யில்லாமல் தங்களிடமுள்ள தங்க நாணயங்களையும், தங்க நகைகளையும் விற்று வருகின்றனர். இதனால் நாளுக்கு நாள் நாடு வறுமைப் படுகுழியில் வீழுகிறதே யொழிய மீளுகிறதில்லை. ஏனெனில் தங்க நகைகள் ஒரு குடும்பத்தின் பெட்டிப் பணம் போலவும் க்ஷேமநிதி போன்று மிருக்கிறது. வருவாய் மிஞ்சிய போது நகை செய்தோம். செலவு அதிகரித்தால் நகையை



விற்றுச் சரிக்கட்டுகிறோம். இம் முறையில் பார்த்தால் இந்தியாவின் பெட்டிப் பணமெல்லாம் இப்பொழுது வற்றிக்கொண்டு வருகிறது.

## நாணயச் செலாவணி

இந்தியாவில் ஐந்துவித நாணயங்கள் அமுலிலிருக்கின்றன. தங்கத்தால் செய்யப்பட்ட பவுன், வெள்ளி ரூபாய்கள், நிக்கல் அணாக்கள், செப்புக் காசுகள், காகித நோட்டுகள். இவைகள் செலாவணியிலன்றி உண்மையில் உலோக விலைப்படி மதிக்கப்படுகிறதில்லை. உதாரணமாக ஒரு ரூபாயில் பதினாறு அணாப் பெறுமானமுள்ள வெள்ளியுண்டா? அல்லது நடப்பிலிருக்கும் வெள்ளி விலைப்படி ஒரு ரூபாயை ஒரு ரூபாய் விலைக்கு எவராவது வாங்குவார்களா? அதே மாதிரியே நிக்கல் அணாவும், செப்புக் காசுமாம். இனித் தங்கப் பவுனைப் பார்த்தாலோ, தீப் பாய்கிறது. அநேகமாய் இந்தியாவில் சாதாரண நடைமுறையில் பவுன் நாணயமானது செலாவணியிலில்லை; நகைகள் செய்வதற்காகவே உபயோகிக்கப்படுகின்றன. ஆனால் நாணய மாற்று விகிதத்தில் பவுன் விலையானது பலகாலும் மாறிக்கொண்டே யிருக்கிறது. 16 பென்ஸ் விகிதமென்றும் 18 பென்ஸ் விகிதமென்றும் நாணய மாற்றத்தில் ஏறியும் இறங்கியும் இருந்திருக்கின்றன. இதனாலும் இந்தியா வருடா வருடம் எத்தனையோ கோடிக் கணக்கான ரூபாய்களை இழந்து வருகிறது. இதுவுமல்லாமல் இவ் வருடத்தில் இந்திய ரூபாயைத் தங்கப் பவுனிலிருந்து பிரித்துக் காகித ஸ்டார்லிங்குடன் பிணைத்திருப்பதாலும் இந்தியா எவ்வளவோ நஷ்டத்தை யடைந்துகொண்டிருக்கிறது.

## வரி உயர்வு

இவைகளல்லாமல் இன்னொரு பேரிடியும் இந்தியர்களின் தலையிலே இவ்வாண்டிலே விழுந்திருக்கிறது. அதுதான் அதிக வரி. சமீப காலத்து இந்திய அரசியலைத் துருவிப் பார்த்தால் தானியங்களின் விலைவாசி எவ்வளவுக்கெவ்வளவு உயர்ந்து விற்றதோ அதன் விகிதாச்சாரத்தில் வரியும் உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த ஆண்டில் இந்நியதி தலைகீழாய் மாறித் தானிய விலை குறையவும் வரி விகிதம் அதிகரிக்கவும் ஆகியது. இதன் காரணம் சர்க்காரின் வரவு செலவில் விழுந்திருக்கும் துண்டென்று சொல்லப்படுகிறது. இருக்கலாம். ஆனால் ஏழை இந்தியர் இதை எவ்வாறு பொறுப்பார்கள்? வரவு செலவைச் சரிக்கட்ட சர்க்காருக்கு வேறு வழியில்லையா? வரவுக்கேற்றவாறு செலவைக் குறைத்துக்கொள்ளக்கூடாதா? குறைந்த விலைக்கு, விளைந்த தானியத்தை விற்று அதிக வரியைச் செலுத்த விவசாயிகளால் முடி

யாது. இது சம்மந்தமாக சிறை செல்லுமுன் மஹாத்மா காந்தி வெளிப்படுத்திய புள்ளி விபரத்தை ஈண்டு தருகிறோம்:—

| வருஷம் | | நெல் முதலிய தானியங்களின் ஒரு மணங்கு விலை | | |
|---|---|---|---|---|
| | | ரூ. | அ. | பை. |
| 1880 | ... ... | 1 | 8 | 0 |
| 1881—85 | ... ... | 1 | 11 | 0 |
| 1886—90 | ... ... | 2 | 1 | 3 |
| 1891—95 | ... ... | 2 | 3 | 6 |
| 1896—1900 | ... ... | 2 | 12 | 0 |
| 1901—05 | ... ... | 2 | 5 | 6 |
| 1906—10 | ... ... | 3 | 9 | 0 |
| 1911—15 | ... ... | 3 | 5 | 0 |
| 1916...20 | ... ... | 4 | 10 | 0 |
| 1921—25 | ... ... | 4 | 11 | 0 |
| 1926...28 | ... ... | 4 | 14 | 6 |
| 1931 மே மாதத்தில் | ... | 2 | 4 | 9 |

இவ்வாறாக இப்போதுள்ள அகவிலை 1886-ம் வருஷத்திலிருந்த விலைக்குப் போயிருக்கிறது. அந்தக் காலத்தில் குடியானவர்கள் ஏக்கரின்மீது 8 அணாவோ 12 அணாவோதான் வரிச் செலுத்தினர். ஆகவே இவ் வருடத்திலும் நியாயபூர்வமாகப் பார்த்தால் ஜனங்கள் அவ்வளவு வரிதான் கொடுக்கவேண்டும். ஆனால் நிலைமை அப்படியில்லை; வெகுதூரம் மாறிப்போய்விட்டது. ஒரு மணங்கு நெல் ரூ. 4—14—6-க்கு விற்ற காலத்தில் வாங்கியதற்கும் அதிகமாக வசூலிக்கப்படுகிறது.

## சத்தியாக்கிரஹம்

இவ் வருட ஆரம்பத்தில் ஆரம்பித்த இந்தியாவின் விடுதலைப் போர்—சத்தியாக்கிரஹ யுத்தம் இன்றளவும் அன்று கண்ட மேனியாகவே யிருக்கிறது. தளரவுமில்லை; வேகம் பெறவுமில்லை. இதற்கும் இற்றையப் பொருளாதார நெருக்கடியைக் காரணமாய்க் காட்டலாம். ஏனெனில் குடும்ப வாழ்க்கை அதிகச் செலவில் நடப்பதால் அதிகம்பேர் இயக்கத்தில் ஈடுபட முடியவில்லை. சம்பாதிக்கும் இயல்புடையார் தமது குடும்பத்தின் நித்திய வாழ்க்கையை நடத்துவதற்காக ஏதாவது ஒரு பிரவிர்த்தியில் சென்று பொருளீட்டவேண்டிய நிர்ப்பந்தத்திலிருக்கின்றனர். என்றாலும் தளரவில்லை. புத்தம் புதிய முறைகளில் நாடெங்கும் போர் நடந்துகொண்டே யிருக்கிறது. வழக்கம்போல் செய்த அன்னியத் துணி மறியல், கள்ளுக்கடை மறி



யல், வரி மறுப்பு, வன சத்தியாக்கிரஹம், உப்பு வாறல் முதலிய பலரகங்களுடன் தபால் மறியல், கோர்ட்டு மறியல், இரயில் வண்டிப் பிரசாரம், பறிமுதல் செய்யப்பட்ட கட்டிடங்களை முற்றுகையிடல் போன்ற நூதன வேலைகளும் செய்யப்படுகின்றன. இவற்றுள் சில பொதுஜன வெறுப்பையுண்டாக்குகின்றன. என்றாலும் ஏராளமான கிளர்ச்சியைச் செய்ததில் சந்தேகமில்லை. தொண்டர்கள் சிறை செல்லுவதும், அடிபடுவதும், விடுதலையடைவதும் யாவும் வழக்கம்போலவே நடந்துவருகின்றன. ஆனால் இங்கிலாந்தில் வேறு விதமான கயிறு திரிக்கப்படுகிறது. இந்தியா மந்திரி சாமுயலும் பலரும் இந்தியாவில் சட்ட மறுப்பு என்ற நாற்றமே கிடையாது; எல்லாம் சாந்தி, சாந்தியென்று பிரசாரஞ் செய்கின்றனர் அதைப்பற்றி நமக்கு அக்கறையில்லை. அவர்கள் வீட்டில் அவர்களே என்ன வேண்டுமானாலும் சொல்லிக்கொள்ளட்டும். நமக்காவதென்ன? அவர்கள் சாந்தி சாந்தியென்றால் நாம் காந்தி காந்தியென்போம்.

## காங்கிரஸ் மஹா நாடுகள்

இனி எடுத்துக்கொள்ள வேண்டிய அம்ஸம் காங்கிரஸைப்பற்றியது. 1929-ல் லாகூரில் கூட்டப்பட்ட காங்கிரஸின் வருஷாந்திரக் கூட்டத்தில் "பூரண சுயராஜ்யம்"தான் இந்தியாவின் லட்சியம் எனக் கூறப்பட்டது. இந்தியர்களனைவரும் கொஞ்சங்கூடப் பற்றுதலற்ற விடுதலை விரதத்தை மேற்கொண்டார்கள்; சுதந்திர சபதமும் எடுத்துக் கொள்ளப்பட்டது, காந்திஜீயே அவ் வழியில் சுதந்திர சைன்யத்தை நடத்திச் செல்லுவதென அவருக்குச் சர்வாதிகாரப் பட்டம் கட்டப்பட்டது. அதுமுதல் காங்கிரஸ் வேறு காந்தி வேறு என்ற எண்ணம் இந்தியாவில் இல்லை. காங்கிரஸ் கட்டளையிட்டால் அது காந்தி வாக்கு; காந்தி சொன்னால் காங்கிரஸ் ஆணை. அந்த அதிகாரத்தில்—வெறும் மிருக அதிகாரமில்லை, ஆத்மாதிகாரம்—அன்பு ரீதியில் காந்திஜீ 1930 ஏப்ரலில்—தேசீய வாரத்தில்—ஜாலியன் வாலா பாக்கத்தில் படுபாவி டையர் பாஞ்சாலப் படுகொலையைச் செய்தானே அந்த வாரத்தில் தண்டிக்குத் தண்டெடுத்துச் சென்று ஒரு பிடித்த பிடி உப்பையள்ளினார். நாடெல்லாம் உப்பு வாறிற்று. அப்புறம் சிறை சென்றார். 1930 முழுதிலுமே காங்கிரஸ் கூடவில்லை. 1931 ஜனவரியில் சமாதானம் ஏற்பட்டது. பிப்ரவரி-மார்ச்சில் சுதந்திரக் கைதிகளெல்லாம் விடுதலை யானார்கள். உடனே அந்த மார்ச்சு மாதக் கடைசியில் கராச்சியில் காங்கிரஸ் கூடி காந்திஜீயை வட்ட மேஜைக்கு காங்கிரஸின் ஏகப் பிரதிநிதியாக அனுப்பிற்று. லண்டன் சென்றார்; சென்றது போல் வெறுங் கையராகவே வந்தார்; சிறைப்பட்டார். காங்கிரஸும் சிறைப்பட்டது. 1932 மார்ச்சில் புண்ணிய க்ஷேத்திரம் பூரிஜெகன்னாதத்தில் நடத்தப்பட வேண்டிய மஹா நாடு நடைபெறவில்லை.

அதில் ராஷ்டிரபதியாக முடிசூட்டப்பட வேண்டிய ராஜேந்திரனோ (ராஜேந்திர பிரசாத்) சக்கிரவர்த்தியோ (சக்கிரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்) ஸ்ரீராமன் பட்டாபிஷேக தினத்தில் வனவாசம் போனதே போல் சிறைவாசமானார்கள். வளர்த்துவானேன்? நாம் முடிவு கட்டியிருந்தபடி மார்ச்சில் மகாநாட்டை நடத்த முடியவில்லை. இச் சம்பவம் காங்கிரஸின் 46 வருட வாழ்க்கையில் என்றுமே ஏற்படாதது. ஏனெனில் காங்கிரஸ் மஹா நாட்டை சர்க்கார் இவ்வாறு தடைப்படுத்தியதே கிடையாது. ஆனால் தடைப்படுத்தப்பட்ட காங்கிரஸை நடத்தியே தீரவேண்டும் என்ற ரோஷம் பிறந்து பண்டிதரும் (மாளவியா) தேவியும் (சரோஜினி) பகீரதப் பிரயத்தனஞ் செய்து டில்லியில் அடுதத மாதத்தில் வெட்ட வெளியில்—வான வளையத்தின் கீழ் நடத்தி முடித்தார்கள். இதை இந்தியாவின் வெற்றி யென்று சிலர் சொல்லிக்கொள்ளுகின்றனர். அப்படியானால் அதன் பின் இந்தியாவெங்கும் நடத்தப்பட்ட மாகாண மஹா நாடுகளும், ஜில்லா மஹா நாடுகளும், தாலுகா மஹா நாடுகளும்கூட இந்தியாவின் எண்ணற்ற வெற்றிகள் தானே?

## இந்து-முஸ்லீம் இணக்கம்

இந்தியா ஒரு பரந்த கண்டம். உலகத்திலுள்ள மனிதத் தொகையில் ஆறில் ஒரு பங்கு (100-க்கு 18) ஜனங்கள் இங்கிருக்கின்றனர். நடைமுறையிலிருக்கும் எல்லா மதஸ்தரும் உண்டு. இவர்களுள் இந்துக்கள் ஒரு சாரார்; இஸ்லாமியர் ஒரு ஜாதியார். என்றாலும் இருவரும் இந்தியர் தான்—இந்தியாவிலே பிறந்து இந்தியாவிலே வளர்ந்து, இந்தியாவின் லாப நஷ்டங்களையும், சுக துக்கங்களையும் எவ்வித ஏற்றத்தாழ்வுமில்லா தனுபவித்து இந்திய மண்ணிலேயே மரித்து மக்கிப் போக வேண்டியவர்கள். இதனால் இந்தியன் என்பான் எங்கிருந்த போதிலும், எந்த ஜாதி, எந்த மதத்தைத் தழுவியிருந்த போதிலும் இந்தியன் தான். மதத்தை மனிதன் மனிதனுக்காகவே ஸ்ருஷ்டித்துக் கொண்டான்—மதத்திற்காக மனிதனில்லை; மனிதனுக்காகவே மதம். மனிதன் தன் தன் சௌகரியத்துக்கும் விருப்பத்திற்கும் ஏற்றவாறு எந்தவொரு மதத்திலிறங்கிய போதிலும் அவன் ஏகக் கடவுளின் படைப்பு என்பதை மனித வர்க்கம் மறந்தபோதுதான் மாற்சரியம் உண்டாகிறது. ஆண்டவன் படைப்பை அழிக்கத் தலைப்படுகிறார்கள். இந்துவாயிருக்கும் ஒருவன் இந்து என்ற கெர்வத்தாலோ துவேஷத்தாலோ இஸ்லாமியனை ஏன் வெறுக்க வேண்டும்? அதே மாதிரி இஸ்லாமியனும் ஏன் இந்துவைப் பகைக்கிறான்?

சென்ற ஜன சங்கியையின்படி இந்தியாவில் 35 கோடி சொச்சம் பிரஜைகளிருக்கின்றனர். இதில் 8 கோடிக்கு மேல் முஸ்லீம்களாவர்.



(சுமார் ஐந்தில் ஒரு பகுதியினர்.) என்றாலும் இந்துக்கள் தான் பெரும்பான்மையோர். இந்த இரு ஜாதிகளும் அடிக்கடி மோதிக்கொள்ளுகின்றன. காரணங்கள் பலப்பல இருக்கலாம். என்றாலும் அவற்றுள் முக்கியமானது இந்து-முஸ்லீம்களின் மாறுபட்ட மனப்பான்மையும், அன்னிய அரசாங்கத்தின் பிரித்தாளும் கொள்கையுமாம். இவையிரண்டும் இல்லாமற் செய்யும்வரை இந்து—முஸ்லீம் இணக்கம் சாத்தியமானதில்லை. இதுபற்றி ஸ்வர்க்கீய முகமதலி, முதல் வட்ட மேஜையில் "பிரிட்டிஷ் ஆட்சி இந்தியாவில் இருக்கும்வரை இந்து—முஸ்லீம் பிணக்கும் இருந்துதான் தீரும். அப்பால் சுயராஜ்யம் கிடைத்த அடுத்த நிமிஷமே இணக்கம் ஏற்பட்டுவிடும்" என்று கூறியுள்ளார். ஊரை யிரண்டுபடுத்திக் கூத்தாடி கொண்டானடிப்பதை உணராமல் இவ்விரு சாராரும் சண்டையிட்டுக்கொள்ளுவதை இந்தியாவின் துரதிர்ஷ்டமென்றுதான் சொல்லலாம்.

காஷ்மீரத்தில் இந்து மன்னனுக்கு விரோதமாக முஸ்லீம் பிரஜைகள் கிளம்பினார்கள். பம்பாயில் இந்துக்களும் முஸ்லீம்களும் இரத்தக் களரி கொண்டாடினர். இவற்றை யெல்லாம் எண்ணினால் நடுமனப்பான்மையுடைய எந்த இந்திய நெஞ்சம் பகீரெனாது! அந்தோ! எத்தனை இந்தியத் தலைகள் பம்பாய்த் தெருவில் உருண்டன! எவ்வளவு இந்திய இரத்தம் இறைக்கப்பட்டது! இதை ஒவ்வொரு இந்து இந்தியனும், ஒவ்வொரு முஸல்மான் இந்தியனும் எண்ணிப் பார்ப்பானானால் இரத்தவெறி பிடித்த அந்தக் காளி பூதங்களை எவ்வளவு கோபத்துடன் சபிப்பான்! என்றாலும் என்ன? ஒருவரையொருவர்—முஸல்மானை இந்துவும், இந்துவை முஸல்மானும் தங்கள் தங்களின் சொந்த இரத்தத்தைப்போலவும், சொந்தச் சதையைப்போலவும் சிந்தித்து சகோதர பக்தி செலுத்தாதவரை பிரயோஜனமில்லை—இணக்கமும் ஏற்படாது.

சகோதரருள்ளும் சண்டையேற்படுவது சகஜம். "சண்டை செய்தாலும் சகோதரனன்றோ?" மாற்றானுக்கிடங் கொடுக்கலாமா? ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து தாராளப் பான்மையில் வாழ வேண்டும். ஆதியில் இந்தியா இந்துக்களுக்கே சொந்தமாயிருந்தது. வடக்கே ஆரியவர்த்தத்தில் ஆரியர்களும், தெற்கே தக்காணத்தில் திராவிடர்களும்தான் வாழ்ந்தார்கள். அவ்விருவரும் இந்துக்கள். பின்னால் கைபர் கணவாய் வழியே பாரஸீகம், ஆப்கானிஸ்தானம், அரேபியா முதலிய இஸ்லாமிய தேசங்களிலிருந்து முஸல்மான்கள் இந்தியாவுக்குள் நுழைந்தனர். மொகல் சாம்ராஜ்யம் ஸ்தாபிதமாயிற்று. இந்துக்கள் அவ்வாட்சியை அத்துணையாய் வெறுக்கவில்லை. ஏன்? மொகலாயர்கள் இந்தியாவை இந்தியாவின் க்ஷேமத்திற்காகவே ஆண்டனர். இந்தியாவின் ஒப்பற்ற செல்வம் இந்தியாவை விட்டு வெளிச் செல்லவில்லை. இந்தியர் செலுத்திய வரிப்பணம் இந்தியர்களின் நன்மைக்

காகவே செலவிடப்பட்டது. இதனாலேதான் சீக்கிரத்தில் இந்துக்கள் இஸ்லாமியருடன் கலந்துறவு கொண்டாடலாயினர். இப்பொழுதும் கூட கிராமாந்தரங்களில் இவ்விரு ஜாதியாரும் முறை (மாமன், மைத்துனன், அண்ணன், தம்பி) சொல்லி வாழவில்லையா? ஆனால் நகரங்களிலேதான் பீடையெல்லாம். ஏனெனில் சர்க்காரின் பட்டம் பதவிக்கு ஆசைப்பட்டுப் படித்தவர்கள் சிலர் அரசாங்க பொம்மைகளாக ஆடுகின்றனர். இது வொழிந்தபோதுதான் இணக்கம் நிச்சயம்.

இப் பிரச்சினை சம்மந்தமாக நாம் பிற நாடுகளிலிருந்து சில பாடங் கற்றுக்கொள்ளவேண்டும். நமக்குப் பக்கத்திலிருக்கும் ருஷியாவையும் சீனாவையும் இந்தியாவின் இந்து—முஸ்லீம்களின் கவனத்தில் வைக்கின்றோம். அங்கும் முஸ்லீம்களும் முஸ்லீம்களல்லாதவர்களும் இந்தியாவைப்போல் விரவியே யிருக்கின்றனர். ஆனால் மாற்சாயம் மாத்திரமில்லை. ருஷியாவின் சோவியத் குடியாட்சியில் முஸல்மான்கள் தனித்தொகுதி கேட்கிறார்களா? சீனாவில் இந்து—முஸ்லீம் சச்சரவு என்றைக்காவது ஏற்பட்டதா? ருஷியாவில் நடக்கும் இராணுவ ஆட்சியிலும்—போல்ஸ்விக்கர்களின் வல்லரசாங்கத்திலும்—சீனத்தின் தேசீய இராணுவ சர்க்காரிலும்கூட முஸ்லீம்கள் பிணங்காமல் இணங்கியே வாழுகின்றனர். இந்தியாவிலும் அத்தகைய தேசீய அரசாங்கம் அமையும்போதுதான் இந்துக்களும் முஸல்மான்களும் பிறரும் இணங்கி வாழ்வார்கள்போலும். அதுவரை நாம் என்ன செய்யவேண்டும் என்பது இரு கட்சித் தலைவர்களும் கலந்தாலோசிக்கவேண்டிய விஷயம். இந்துக்களுக்காக காந்திஜீயின் உத்தரவாதமும் இருக்கிறது. முஸ்லீம் சகோதரர்களும் சிறிது ஆலோசனையோடு சிந்தித்து ஓர் நன் முடிவு காண முன்வரல் அவஸ்யம்.

## வகுப்புத் தீர்ப்பு

கடைசியில் "வகுப்புப் பரிசு" வந்துவிட்டது. பிரிட்டிஷ் மந்திரிகளிடம் கொடுக்கப்பட்டிருந்த வழக்கில் தீர்ப்புச் சொல்லிவிட்டனர். அதைப்பற்றி இங்கே அதிகம் வியாக்கியானஞ் செய்து விலையுயர்ந்த நமது நேரத்தை விருதாவாக்க விரும்பவில்லை. நமது பத்திரிகையின் பக்கங்களும் விலையேறப்பெற்றவை. ஆனால் ஒன்றுமாத்திரம் சொல்லாமல் முடியாது இத் தீர்ப்பை இந்தியா ஏற்கெனவே எதிர்பார்த்ததுதான். காந்திஜீயும், இவ் வழக்கை முதல் மந்திரி மெக்டொனால்டிடம் சமர்ப்பிக்கப்பட்டபோதே "குரங்குப் பஞ்சாயத்து"ப் போன்றுதான் முடியுமெனக் கூறியுள்ளார். உண்மையில் அவ்வாறே ஆகியிருக்கிறது. என்றாலும் எமது பார்வையில் இத் தீர்ப்பு இந்தியாவின் புதையல் (பொக்கிஷம்) என்று படுகிறது. "வகுப்புப் பரிசை" இந்தியாவின் பரிசு என்று நாம் ஏற்கின்றோம். ஏனெனில் இப் பரி



சால் இந்தியா பெருத்த இலாபத்தை யடைந்திருக்கிறது. பிரிட்டிஷாரின் மனப்பான்மை—பிரித்தாளும் சூழ்ச்சி—இத் தீர்ப்பில் கொட்டையெழுத்துக்களில் குறிக்கோடிடப்பட்டிருப்பதைக் காணுகிறோமல்லவா? அம் முடிவை சுயமதிப்புள்ள ஒரு இந்தியன்கூட ஏற்கவில்லை. நாடெங்கும் அதிருப்தி. இதுவரை சர்க்காரின் இரும்புத் தூண்களாயிருந்த மிதவாதிகளையும்கூட திருப்தி செய்யமுடியவில்லை. அவர்களெல்லாம் நிர்தாக்ஷிண்யமாய்க் கண்டிப்பதுடன் ஒத்துழைக்கவும் மறுத்துவிட்டனர். சர் சாப்ரூ, ஜெயகர், சாஸ்திரி, சிந்தாமணி முதலியவர்களின் ஆதரவும் இனி இவ் வரசாங்கத்திற்கில்லை. சவுக்கத்தலியும் கண்டிக்கின்றார். முஸ்லீம் லீக்கும் "இந்தியாவின் அரசியல் அமைப்புக்கு முட்டுக்கட்டையாயிருந்த ஒரு பிரச்னை தீர்ந்துவிட்டது. இனிமேல் இந்தியா சுயராஜ்யம் பெறுவதற்கான ஒரு திட்டத்தை இதர வகுப்புப் பிரதிநிதிகளுடன் சேர்ந்து தயார்செய்ய வேண்டியதுதான்" என்று தீர்மானித்துவிட்டது. அகாலியர்களும் ஏற்கவில்லை. டாக்டர் கிச்லு, டாக்டர் அன்சாரி முதலியவர்களும் கண்டித்துவிட்டனர். கவியரசன் ரவீந்திரனும் "இத் தீர்ப்பு இந்திய சமுதாயத்தைக் கூறு கூறாய்ச் சிதைத்துவிட்டது. இனிமேல் நாம் இதை லட்சியம் செய்யாமல் ஒதுக்கித் தள்ளிவிடவேண்டியதுதான். மேலும் சமூகப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு மருந்து நமது கையிலேதானிருக்கிறது. நாமனைவரும் ஒன்று சேர்ந்து நமது தேசீய மரியாதையை நாமே காப்பாற்றிக்கொள்ளுவோம்" என்று கூறுகிறார். சர் பிரபுல்ல சந்திர ராயரும் "மெக்டொனால்டின் வகுப்புப் பரிசு விஷமத்தனமானது. ஒரு வகுப்பாரை இன்னொரு வகுப்பார்மீது பாயச்செய்து இந்தியர்களுக்குள் சிண்டு முடிந்துவிடுவதைத் தவிர வேறொன்றும் இதில் இல்லை. அதன் கூரிய முனை இந்தியாவை மர்ம ஸ்தானத்திலே குத்திவிட்டது. இனிமேலும் இந்தியர்கள் தூங்கிக்கொண்டிருக்கமாட்டார்கள்—இந்தியா விழிப்படைந்தது" என்கிறார். "இப் பரிசு பெருத்த அநீதமான"தென்று அம்பேத்கார் சொல்லுகிறார். மஹா பண்டிதர் மாளவியாவோ இப் பிரச்னை சம்மந்தமாக சமூகத் தலைவர்கள் பலருடன் கலந்து பேசி வருகிறார். கல்கத்தா, காசி, லாகூர் முதலிய பலவிடங்களுக்கும் சென்று சமூகப் பிணக்கை நமக்குள்ளேயே தீர்த்துக்கொள்ள வழி காணுகிறார். அதுவும் அனேகமாய் நற்பயனளிக்குமென நம்பப்படுகிறது. எப்படியாயினும் தன் கைதான் தனக்குதவி!

## நம்பிக்கை

இவ்வாறெல்லாம் இந்தியா நாலா பக்கங்களிலும் கஷ்டப்படுகிறதே இதற்கு ஏதாவது விமோசனமில்லையா? என்றால் உண்டு என்ற நம்பிக்கையை நாமளிக்கின்றோம். அது என்ன? நாட்டு விடுதலை! நமது நாட்டின் பொக்கிஷத்தை நாமே நிர்வகித்தல்!

நமது நாட்டரசை நாமே நடத்தல்! எல்லாவற்றிலும் எளிய வாழ்க்கையையும், சிக்கன சாஸ்திரத்தையும், சுதேசியத்தையும் தழுவுதல். மனித வாழ்க்கைக் கவசியமான எந்தெந்தப் பொருள்கள் உண்டோ அவைகளை, அவைகள் நமது நாட்டு முதலால்—நாட்டுத் தொழிலாளிகளால் தயாரிக்கப் பெற்றவைகளா வென்பதை நன்கு விசாரித்து கூடுமானவரை குறைந்த விலைக்கு வாங்கி உபயோகிக்க வேண்டும். உணவும், உடையுந்தான் அத்தியாவசியமானவை. சுத்த சுதேசியான ஆடை கதர் ஒன்றுதான். ஏனெனில் இந்தியப் பருத்தியால் இந்தியர்களே நூற்று நெசவு நெய்தது. இந்தியப் பருத்தியால் இந்திய மில்களில் நூற்று நெய்யப்பட்டவையும் சுதேசியே யாயினும் இந்திய மில்களின் இயந்திரங்கள் அன்னிய நாட்டவை யாகையால் அவைகள் சுத்த சுதேசியாக முடியாது. ஆகையால் ஆடை விஷயத்தில் 'கதர்'' ஒன்றுதான் சுதேசியாகும். கதர் கட்டி காந்தியைப் போற்றினால்—பின்பற்றினால் இந்தியாவின் நடுவில் நம்பிக்கைச் சூரியன் சமீபத்திலேயே நிச்சயமாய் உதயமாவான்.

## சம்பூர்ணம்

அரசியல் சூறாவளி ஓயுமா? என்பதும் ஒரு சந்தேகம். பலர் பயப்படுகின்றனர். என்றாலும் அடக்குமுறையின் வேகம் தணிந்துவிட்டது, கை சலிக்க அடித்துப் பார்த்தார்கள்; சுட்டுப் பார்த்தார்கள். இயக்கம் தளரவே யில்லை. இது கண்டு இங்கிலாந்திலிருந்து பலர் இந்தியாவுக்கு வந்து நேருக்கு நேராய்க் கவனித்து வருகின்றனர். இங்கிலாந்திலும் காங்கிரஸின் சார்பில் பிரசாரம் நடக்கின்றது. சிறை சென்றவர்களும் ஒருவர் பின்னொருவராய் வெளிவந்துகொண் டிருக்கிறார்கள். இம் மாத முடிவுக்குள் சமாதானம், வெளிச்சத்தைக் காண்பினும் காணும். இங்கிலாந்து பார்லிமெண்டில் கன்ஸர்வேட்டிவ் அங்கத்தினரா யிருக்கும் ஹேல்ஸ் என்பவர் இந்தியாவில் சுற்றுப் பிரயாணஞ் செய்கிறார். அவர் சமீபத்தில் சென்னையில் "இந்தியாவிலே ஏற்பட்டுள்ள உபத்திரவங்களை யெல்லாம் முடிவு செய்துவிடப் போகிறேன். டில்லியிலோ அல்லது வேறிடத்திலோ இந்தியத் தலைவர்களை யெல்லாம் கூட்டி சமரஸமானதோர் முடிவை யுண்டாக்க வேண்டும். நான் ஜாலவித்தைக்காரன்; செய்தே முடிப்பேன்" என்று கூறினார். இதில் உள்ளார்ந்த அர்த்தமிருக்கிறது; ஏதோ இரகசியமும் உண்டு. பிரிட்டிஷ் மந்திரி சபையில் மனமாற்ற மேற்பட்டிருப்பதற்கு இது வோர் அறிகுறியுமாகும். எல்லாம் இம்மாத முடிவுக்குள் தெரிந்துவிடும்.

---

# "நீலத் திரைக் கடலோரத்திலே"

திரு. ஆ. வ. பதுமநாப பிள்ளை அவர்கள்.

"நீலத் திரைக் கடலோரத்திலே." சின்னஞ் சிறு மொழி! ஆனால், அது தன்னுள் அடக்கிக் கொண்டுள்ள அரும் பொருள்களை என்னென்பது! அச் சொல்லைச் சொல்லும் ஓசையே, நமது அகத்தில் மோதி, எழுந்து, விழுந்து, மீண்டும் எழுந்து வரும், கடல் அலைகளின் காட்சியை தோற்றுவிக்கின்றதன்றோ! புனிதம் மிகுந்த புண்ணிய பூமியாம் இப் பாரத நாட்டின் தென்கோடி முனையிலே—இந்து சமுத்திரமும் வங்காளக் குடாக்கடலும் சந்திக்கும் இடத்திலே—க்ஷேத்திர யாத்திரைக்காரர்கள் பெரிதும் போற்றும் புனித தலத்திலே—செந்தமிழ் நாட்டின் சீர் நலத்தைக் குறிக்கொண்ட செவ்விய தவத்தை மேற்கொண்டு விளங்கும் செல்வியாம் 'கன்னியா குமரி'யை, தமிழ் நாட்டு தேசிய கவீந்திராகிய திரு. சுப்ரமண்ய பாரதியார் "நீலத் திரைக் கடல் ஓரத்திலே நின்று நித்தம் தவம் செய் குமரி!" என்று போற்றுகின்றார்! 'என்றும் உள தென்றமிழ்' என்று கம்பர் கூறுமாறு, என்றும் இறவாது இருப்பவளும் உலகிலேயே தலை சிறந்த தனிப்பெரும் பெருமையைப் பெற்றவளும் இறைவனையும் தான் ஏவியவாறு நடக்க வைக்கும் அற்புத சக்தி பெற்றவளுமாகிய தமிழ்த் தாயின் வட வெல்லையாகிய வேங்கடம், கண்ணுக்கினிய நீல மலையாகக் காட்சி யளிக்க—தென் எல்லையாகிய கன்னியா குமரி முனை நீலக் கடலாகக் காட்சி அளிக்கிறது. 'குல மலை—கோல மலை—குளிர்மா மலை—கொற்ற மலை—நில மலை—நீண்ட மலை' என்று பெரிதும் வியந்து போற்றுமாறு திருவேங்கட மலை ஆழ்வாருக்குப் பேரின்பம் ஊட்டியதே போல், குமரிக் கடல் பாரதியார் மனதிற்கு வருணித்தற்கரிய பேரின்பம் ஊட்டுவதாயிற்று. குமரிக் கடற்கரை தமது மனக் கண்ணுக்குத் தோற்றுவித்த அற்புதக் காட்சியை, பாரதியார் "நீலத் திரைக் கடல் ஓரத்திலே" என்னுஞ் சின்னஞ் சிறு மொழியால் சொற் சித்திரமாக அமைத்து, குமரிக் கடலின் இயற்கைப் பெரு வனப்பைச் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கின்றார்!

மாலை வேளை. நோக்கும் பக்கங்கள் எல்லாம் இன்பக் காட்சிகள்! பச்சைப் பசேலெனத் தழைத்துச் செழித்தோங்கி நிற்கும் பலவகை மரங்கள்! பளிங்குத் தூள் பரப்பியதுபோன்ற வெண் மணல்! ஒரே சமயத்தில் உடலுக்கும் உள்ளத்துக்கும் உவகை ஊட்டும் இன்பக் காற்று! மிக உயரமாக எழுந்து ஊஞ்சலாடிவரும் பெரிய அலை! அதனைப் பின்தொடர்ந்து மோதி விழுந்து எழுந்து வரும் சிறிய அலை. சிறுமிகள் கட்டிய சிறு மணல் வீட்டைச் சிதைத்துவிட்டுச் சிரித்தோடிவிடும் சிறுவர்களைப்போல, கரையில் நனையாதிருந்த நல்விடத்தை நனைத்துவிட்டு ஓடிவிடும் குறும்புச் செயலால் குதூகலிக்கும் அலைகள். ஒரு நிலையில் நில்லாது மாறி மாறி அலையும் மனிதர்களது மனதைப் பரிகசிப்பதுபோல், அடிக்கடி வருவதும் போவதுமாயிருக்கும் அலைகள். வெகுண்டு எழுந்து வேகமாக ஓடிவரும் போர் வீரர் முழக்கம்போன்ற அலைகளின் ஓயாத ஓசை. அவ்வலை வீரர்களிடம் சிக்கிக்கொண்டு படாத பாடு பட்டுக் கரையில் வந்து விழும் அழகிற் சிறந்த கிளிஞ்சல்கள்—சித்திர நிபுணர்களாலும் சித்திரிக்க முடியாத பலவகைப்பட்ட அற்புதச் சித்திரக் கோடுகளைப் பெற்ற கிளிஞ்சல்கள். சின்னஞ்சிறு வெண்ணிறச் சங்குகள். மண்ணுலகும் தன்னையொத்துத் தூய்மையாக இருந்தால், விண்ணுலகத்தோடு வேற்றுமையற்று விளங்கும் என்னும் உண்மையை உணர்த்துவதுபோல், கடலைத் தழுவி நிற்கும் நீல நெடுவானம். பூமியிலே பொய் கொலை களவு முதலிய கொடுமைகள் எவ்வளவு இருந்தாலும், கைம்மாறு கருதாத தனது கருணையில் குறைவின்றி, மக்களையும், மாக்களையும், மரங்களையும், மண்ணையும் ஒருங்கே குளிர்விக்கும் வள்ளலாகிய வெண்முகில், தனது அரும் பெரும் பணிக்குப் பெருந்துணையாக இருந்து உதவும் கடலைத் தழுவி நிற்பதுபோன்ற இன்பத் தோற்றம். எங்கணும் பரந்து நிற்கும் இறைவனும் திருமாலின் எழில் வண்ணத்தை உலகத்தாருக்கு உணர்த்தும் பணியில் வெற்றி பெற்றிட வானமும் கடலும் ஒன்றோடொன்று போட்டிபோட்டு நிற்பதுபோன்ற காட்சி. இத்தகைய அற்புதக் காட்சியை அளிக்கக்கூடியது எது? "நீலத் திரைக் கடல் ஓரமே" யல்லவா?

அன்பும் அருளும் அறமும் செழித்தோங்கி வளருமானால்—'பரோபகாரத்திற்காகவே படைக்கப்பட்டோம்' என்ற நல்லுணர்ச்சி மண்ணுலகத்து மக்களிடையே பரவி நிற்குமானால்—கடவுள் ஆணை கடவாத சீரிய நன்னெறியில் வாழ்நாட்களைக் கழிக்க உறுதிகொள்ளும் அன்பர்கள் பெருகுவார்களானால்—ஒருவரோடொருவர் பொறாமைகொண்டு சூழ்ச்சிகள் பற்பல செய்யும் வஞ்சகர்கள் குறைந்து, எவ்வுயிரிடத்திலும் அன்பு செலுத்தும் அன்பர்கள் பெருகுவார்களானால்—சோம்பலை உதறித் தள்ளி, சீரிய நற்பணிகளில்



சிறிதும் அயர்வின்றி உற்சாகத்துடன் தலைப்பட்டு, பிரதிபலன் எதிர்பாராது உழைக்க முன்வரும் சத்திய வீரத் தொண்டர்கள் பெருகுவார்களானால்—விண்ணுலகோடு மண்ணுலகை வேற்றுமையற்றதாகச் செய்துவிடக்கூடும் என்னும் உண்மையை விளக்கிக் காட்டுவதுபோல், பரந்த வானம் தனது நீல நிறத்தால் விண்ணையும் மண்ணையும் ஒன்றுபடுத்திவிட முயல்வதுபோன்று தோன்றுகின்றது! மண்ணுலகத்து மாக்கள் பண்ணுங் கொடுமைகளைக் கண்டு, கடலரசியின் மனம் புண்ணாகிறது. நினைத்தவளவில் அனைத்தையும் அழிக்கும் ஆற்றல் பெற்றிருந்தும் தனது தலைவனது அனுமதியின்றி எதுவும் செய்ய மனங்கொள்ளாது இலங்கையில் இடுக்கண் உற்ற சீதையைப்போல, மனம் மட்டும் கொண்டுவிட்டால் அனைவரையும் அழித்துவிடக்கூடிய பேராற்றல் பெற்றிருந்தும் தனது தலைவனது அனுமதியின்மையால் கடலரசி எதுவும் செய்வதற்கின்றி கலங்குகிறாள்; தடையைக் கடக்கத் துணிவின்றி அடங்கிக் கிடக்கிறாள். 'அயர்வறும் அமரர்கள் அதிபதி'யாய் விண்ணில் விளங்கும் விமலனுக்குக் கேட்கும் வண்ணம் உரத்த குரலில் ஓலமிடுகிறாள். இரவு பகலாக உறக்கமின்றி, எவ்வேளையிலும் பித்து பிடித்தவளைப்போல் இடையறாது அலறுகிறாள். மண்மீது அனுபவிக்கும் உரிமைகளோடு திருப்திப்பட்டு நில்லாமல், தன்மீதும் ஆணை செலுத்த ஆசைகொண்டு சண்டையிட வந்துவிடும் கொடியவர்களது கொடுமைகளை எண்ணி எண்ணி ஆறாத் துயருறுகிறாள். அவ்வாறு கலங்கி நிற்கும் அக் கடலரசியை, அவளது தாயாகிய நீலவானத் தேவி அன்போடு அணைத்து முத்தமிட்டுத் தன் மகளது மனத் துயரை மாற்ற முயல்வதுபோல் தோற்றுகிறது. அவ்வாறு நீலத்திரைக் கடலை நீல்நெடு வானம் தழுவி நிற்கும் கண்ணுக்கினிய காட்சி, கவிகளது நெஞ்சில் பற்பல நினைவுகளைத் தோற்றுவிப்பதாக விளங்குகிறது. நமது தேசீய கவீந்திரராகிய பாரதியாரது கண்களுக்குத் தோன்றிய அத்தகைய காட்சியை, அவர் வருணித்திருப்பதைப் பாருங்கள்:—

"மாலைப் பொழுதில் ஒரு மேடை மிசையே
வானையும் கடலையும் நோக்கியிருந்தேன்;
மூலைக் கடலினை அவ் வான வளையம்
முத்தமிட்டே தழுவி முகிழ்த்தல் கண்டேன்.

நீல நெருக்கிடையில் நெஞ்சு செலுத்தி
நேரங் கழிவதிலும் நினைப்பின்றியே
சாலப் பலபல நற் பகற் கனவில்
தன்னை மறந்த லயம் தன்னில் இருந்தேன்."

மனதைக் கவர்ந்து மகிழ்ச்சி ஊட்டும் மணம் மிக்க மலரிலும், எங்கும் பரந்து இலங்கும் மனோகரமான நீல வானத்திலும், அன்பும் அருளும் நிரம்பப்பெற்று வெண்ணிலவு இன்னமுதம் பொழியும் பிறைத்திங்களையும் செவ்விய கோவைக் கனியையும் தூய வெண் முத்துக்களையும் செந்தாமரை மலரையும் நினைவூட்டி நிற்கும் பெண் தெய்வங்களின் முகத்திலும் இயற்கைப் பேரழகைக் கண்டு இன்பக் கடலாடும் நெஞ்சினராகிய பாரதியார், "மலரினில் நீல வானில் மாதரார் முகத்தில் எல்லாம் இலகிய அழகை ஈசன் இயற்றினான்"—என்று பாடுகிறார் அவரது மனதைக் கவர்ந்த பேரழகுடைய அம் மூன்றில், மலரின் அழகும் வானத்தின் அழகும் மாதரார் முகத்தின் பேரழகில் ஐக்கியமாகிவிடுகிறது. ஆண்டவன் படைத்தருளிய அழகுத் தெய்வமாகிய பெண்ணின் முழு முகமும் மலர்களில் தலைசிறந்த செந்தாமரையையும் பற்கள் இனிய மணம் வீசும் முல்லை மொட்டுகளையும் நினைவூட்ட, நீண்ட கருங்குழல் நீல முகிலையும், நெற்றி காலை இளங் கதிரையும் யாலைப் பிறை மதியையும், வானவில்லையும், நீலவிழிகள் வானக் கருமையையும் அவ் விழிகளினின்றும் வீசும் ஒளி வெங்கதிர்ச் சுடரையும் தண்மதிச் சுடரையும் நினைவூட்ட, இயற்கை யின்பத்தில் தோய்ந்து தன்னை மறந்துவிடும் கவியின் மனத்திற்கு மாதரார் முகம் மலராகவும் மதியாகவும் காட்சியளிக்கிறது. அத்தகைய சிந்தனையின் பயனாக இயற்கையின்பத்தில் தோய்ந்து நிற்கும் இதயத்தினரான பாரதியார்,

"சுட்டும் விழிச்சுடர் தான்—கண்ணம்மா!
சூரிய சந்திரரோ?
வட்டக் கரிய விழி—கண்ணம்மா!
வானக் கருமை கொல்லோ?"

"எங்கள் கண்ணம்மா முகம் செந்தாமரைப் பூ;
எங்கள் கண்ணம்மா நுதல் பால சூர்யன்"

என்று பெண் தெய்வத்தின் பேரழகைப் பெரிதும் வியந்து போற்றுகிறார்.

அத்தகைய அழகுத் தெய்வங்களாகிய பெண்மணிகள் எண்ணிலரைப் பெற்ற புண்ணிய பாரத தேவியின் திருவடிக் கமலங்களிலே இருந்து பெண்ணுலகு உய்யும்வண்ணம் தவம் பண்ணும் குமரியின் கோயிலருகில் அமர்ந்து, நீலத்திரைக் கடலின் அற்புதப் பேரழகாகிய செந்தேனை ஆர்வம் தீரும்வரை பருகிக் களிக்குமாறு பாரதியார் தமது மனவண்டைச் செலுத்திவிடுகிறார். அக்கடலின் அலைகள் அணங்கின் மன அலைகளை நினைவூட்டுகின்றன. கடலைத் தழுவி நிற்கும் நீல வானம் காதலியின் நீண்ட குழலை நினைவூட்டுகின்றது. கடலையும் வானையும் ஒருங்கே அழகுபடுத்தும்



பூர்ண சந்திரன், காதலியின் இன்னொளி திகழப் புன்முறுவல் பூத்து நிற்கும் தன்முகத்தை நினைவூட்டுகிறான். எனவே, அவர் வாய் பின்வருமாறு பாடத் தொடங்கிவிடுகிறது:—

"நீலக் கடல் அலையே—உனது
நெஞ்சில் அலைகளடீ!"
"நீலக் கடலினிலே—நின்றன்
நீண்ட குழல் தோன்றுதடீ!"
"கோல மதியினிலே—நின்றன்
குளிர்ந்த முகம் காணுதடீ!"

பின்னும் அவர் தமது மனக்கண் எதிரில் காட்சியளிக்கும் காதலியை நோக்கி,

"நெரித்த திரைக் கடலில் நின்முகம் கண்டேன்!
நீல விசும்பினிடை நின்முகம் கண்டேன்!
திரித்த நுரையினிடை நின்முகம் கண்டேன்!
சின்னக் குமிழிகளில் நின்முகம் கண்டேன்!"

என்று பாடுகிறார்! இவ்வாறு, நீலத் திரைக் கடல் ஓரம் இயற்கையின்பத்தில் தோய்ந்து நிற்கும் இதயத்தினரான பாரதியாரது அகக்கண்களுக்கு, நெஞ்சைக் கவர்ந்த செஞ்சொல் மடந்தையின் இனிய காட்சியைத் தோற்றுவிக்கும் இன்ப இடமாக இலங்குகின்றது. அதன் பயனாக அவர், பெண்மணிகளை மாயையென்றும், பேய்களென்றும், பேதைமையை அணிகலனாகக் கொண்டவர்களென்றும், மன உறுதியற்றவர்களென்றும், போக லீலைக்கும், பாக சாலைக்குமே தக்கவர்களென்றும் பலவாறு பழித்துரைக்கும் பேதையரை நோக்கி,

"உயிரைக் காக்கும்; உயிரினைச் சேர்த்திடும்;
உயிரினுக்கு உயிராய் இன்பமாகிடும்;
உயிரினும் இந்தப் பெண்மை இனிதடா!
ஊது கொம்புகள்! ஆடு களி கொண்டே!"

என்று பாடுகிறார். அவ் வருள் மொழியின் பொருளை உணர்ந்து பெண் தெய்வங்களின் பெருமைகளை அறிந்து அவர்களது முன்னேற்றத்தை முன்னிட்டு பயன் கருதாத பணிசெய்ய முன்வரும் அன்பர்கள் இத் தமிழ் நாட்டில் நகரங்கள்தோறும் கிராமங்கள் தோறும் விளங்குவது எக்காலமோ, அக்காலமே நமது நாட்டு விடுதலைக்கேற்ற நற்காலமாகும். பாரதியின் திருவருள் துணை செய்வதாக. பெண்மை வாழ்க.

வந்தே மாதரம்.

# பிஜியர்களின் தலை விதி.

திரு தினகரன் அவர்கள்.

சாந்த மஹா சமுத்திரம் எனப் பொருள்படும் பஸிபிக் சமுத்திரத்தின் தென்பாரிசத்திலே, ஆஸ்திரேலியாக் கண்டத்திற்கு நேர் கிழக்கிலே சிறுசிறு தீவுகள் பல சிதைந்து கிடக்கின்றன. மார்ஷல், கில்பர்ட், எல்லிஸ், சாலமோன், புதிய அயர்லாந்து, புதிய ஹெப்ரீது, புதிய காலிடோனியா, டோங்கா, சாமா முதலிய தீவுகளின் மத்தியில், இந்தியாவுக்குத் தென்கிழக்கில் சுமார் 7,000 மைல்களுக்கு அப்பால் பிஜி எனப்படும் தீவுகள் சில இருக்கின்றன. அவைகளையெல்லாம் ஒன்று சேர்த்துப் பார்த்தாலும் 40,000 சதுர மைல் விஸ்தீரணந்தானிருக்கும். ஜனத்தொகை சுமார் இரண்டே லட்சம். பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்திய காலம்வரை—இற்றைக்கு ஏறக்குறைய எண்பது ஆண்டுகளுக்கு முன் அத் தீவுகளை அவைகளுக்குச் சொந்தமான பிஜியர்களின் அரசன் தாகோம்பு என்பவன் ஆண்டுவந்தான். அதற்குப் பின் அவர்களின் தலைவிதி வேறுவிதமாய் மாறிவிட்டது. சுயாதீனமிழந்து, சொந்த நாட்டைப் பறிகொடுத்துப் பராதீனத்தில் அடிமைகளானார்கள். அந்தக் கதையை—சரித்திரத்தை ஈண்டு "பாரதி"யின் சில பக்கங்களில் பேசிவிடுகிறேன்.

பிஜித் தீவுகள் மத்திய ரேகைக்குத் தெற்கிலும் காப்பிரிக்கார்ன் கோட்டிற்கு (Tropic of Capricorn) சிறிது வடக்கிலுமிருப்பதால் உஷ்ணப் பிரதேசங்களில் விளையக்கூடிய பொருள்களெல்லாம் அங்கு ஏராளமாய் விளைகின்றன. பிஜியர்களும் நல்ல கிருஷிகர்கள். ஆடு மாடுகள் வளர்ப்பதிலும் அவர்களுக்கு இணை கிடையாது. பொதுவாகப் பேசுவதானால் பிஜியர்களின் பிரதானமான தொழில் கிருஷித் தொழிலும், கிடைத் தொழிலுமாம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஐரோப்பாவெங்கும்—ஏன்?—வெள்ளை ஜாதியாரனைவரையுமே ஒரு கொடிய நோய் தொத்திக்கொண்டது. 'திரைகடலோடியுந் திரவியந் தேட'வேண்டுமென்னும் அமோகமான ஆசைதான் அந்த நோய். இங்கிலாந்து,



பிரான்ஸு, உலாந்து தேசத்தவர்களும், அமெரிக்கர்களும் வர்த்தகப் பித்துப் பிடித்தலைந்தார்கள். போர்ச்சுகல்லிலிருந்து புறப்பட்ட வாஸ்கோ-டி-காமா ஆப்பிரிக்காவின் நன்னம்பிக்கை முனையைக் கடந்து இந்தியாவுக்கு வழி காட்டிய பின்னால் இவ்வாசை இன்னும் அதிகமாகப் பரவிற்று. போட்டிபோட்டுக்கொண்டு வேட்டையாடினர். இதில் பிஜித் தீவுகள் அமெரிக்கர்களின் அதிர்ஷ்டத்தில் விழுந்தது. அவர்களது சனிப் பார்வை பிஜியர்களின்மீது பாய்ந்து பிச்சை நிலைமைக்குக் கொண்டுவந்து விட்டது.

திருடனும், கொள்ளைக்காரனும்கூட தனது தீத் தொழிலை ஆரம்பிக்கும்போது தனக்கிஷ்டமான ஒரு தெய்வத்தை உடந்தையாக இட்டுக்கொள்ளுகிறான். அதே மாதிரி வெள்ளைக்காரர்களும் தங்களது வியாபார வேட்டையில் கிறிஸ்து மதத்தை முன்னோடியாகக் கூட்டிக்கொண்டே போகிறார்கள். எந்த நாட்டில் காலடி வைத்தாலும் இந்த வர்த்தகர்களுடன் பாதிரிமார்களும் நுழைவது வழக்கம். இவ்விடத்தில் எனக்கொரு சின்ன சிந்தனை பிறக்கிறது. கிறிஸ்து பிரானின் படங்கள் பலவற்றை நான் பார்த்திருக்கிறேன்—பூஜித்திருக்கிறேன். அவைகளில் ஒன்றில் இயேசு மகான் நீதியாகிய தராசை வைத்திருப்பதாக ஞாபகம். ஆனால் கிறிஸ்துவின் கையிலிருப்பது நீதித் தராசு என்ற எண்ணம் இப்பொழுது எனக்கு ஏற்பட்டிருப்பது போல் கிறிஸ்துவைப் பின்பற்றும் கிறிஸ்தவர்களின் எண்ணத்தில் அக் காலத்தில் உண்டாகாமல் போய்விட்டது. மஞ்சள், மிளகு நிறுக்கும் பித்தளைத் தராசாக நினைத்து மதாச்சாரியார்களான பாதிரிமார்களையும் வியாபாரஞ் செய்யப்போகுமிடமெல்லாம் கூட்டிக்கொண்டே போனார்கள். தப்பிருந்தால் மன்னித்துவிடுங்கள். மதத்தை நான் தூஷிக்கவில்லை.

இந்தத் தீவுகளைப் பார்த்த வுடனே அமெரிக்கர்களுக்கு ஆனந்தக் கண் திறந்தது. அத் திருஷ்டி யொன்றினாலேதான் பிஜியர்கள் முதன்முதலாக திருஷ்டி தோஷத்திற்காளானார்கள். பிஜியின் மலை வளம், மழை வளம், மண் மாண்பு, மற்ற மாண்புகளெல்லாம் பிற நாட்டாரின் பீழைக் கண்ணில்—அக் கண்ணிலே தீப்பாய—பட்டதும் பிஜியர்களின் சுதந்திரம் எரிந்து நீந்துவிட்டது. விவசாய மார்த்தவத்தால் வியாபார லாபமடையலாமென எண்ணினார்கள். பிஜியர்களோ! ஸ்வபாவத்திலேயே சிறிது வெள்ளை மனமுடையவர்கள்; கள்ளங் கபடு தெரியாது. ஏதோ நாடு விட்டு நாடு பஞ்சம் பிழைக்க வந்திருக்கிறார்களே என்ற தயாள எண்ணத்தில் சில நிலங்களை அவர்களுக்கு விட்டுக்கொடுத்தனர். நாளா வட்டத்தில் நயத்தாலும் பயத்தாலும் நல்ல பூமிகளை சுதேசிகளிடமிருந்து வாங்கிக்கொண்டு விட்டார்கள். பிஜியில் பிறந்து வளர்ந்த பிஜியர்

கள் சிலருக்கு உழுது பிழைக்க நிலமில்லாமல் போய்விட்டது. என்ன செய்வர் பாவம்! வெள்ளையர் பயிர் செய்த பருத்தி, தேயிலை, கரும்பு, காப்பித் தோட்டங்களில் கூலிக்கமர்ந்து வயிறு வளர்க்க வேண்டியதாயிற்று. கூலியாவது போதியது கொடுத்தார்களா? குறைந்த கூலிக்கு ஒப்பந்தச் சீட்டெழுதிக்கொண்டு நிறைய வேலை வாங்கினர். ஆனால் அந்த மனிதப் பிராணிகளுக்கு ஒப்பந்தச் சீட்டென்றால் என்னவென்றே தெரியாது. அடிமையின் சாஸனம் என்று அர்த்தஞ் செய்துகொள்ள அவர்கள் அறிவார்களா? ஏதோ வயிற்றுக்குக் கொஞ்சம் கஞ்சியோ, காடியோ கிடைத்தால் போதும் என்கிற சித்தாந்தம் அவர்களுக்குச் சரிப்பட்டு வந்தது. பின்னால் அதிலும் ஒரு பேரிடி விழுந்தது. இயற்கையிலேயே இப் பிரகிருதி உலகத்தில் ஏற்பட்டிருக்கும் தொழிற் றகராறு விளைந்து முதளாளித் திமிரும், தொழிலாளர் துயரமும் ஒன்றையொன்று மோதிக்கொள்ளலாயின. ஆங்காங்கு சிற்சில சில்லரைச் சண்டைகளும் உண்டாயின.

உடனே அமெரிக்க அரசாங்கத்திற்கு அவசரத் தபால் அனுப்பப்பட்டது. திடீரென அமெரிக்கப் பட்டாளமொன்று பிஜியில் வந்திறங்கிற்று. சண்டைக்கு முன்னால் சமாதானத் தூதுவனை அனுப்புகிறதென்கிற சம்பிரதாயமிருக்கிறதே அந்த முறையில் தாகொம்பு அரசனின் அரமனைக்கு ஒரு ஆள் வந்தான். அவனது முகத்தில் சூழ்ச்சியின் சுவடுகள் அப்படியே படிந்திருந்தன. வஞ்சகமும், வஞ்சந் தீர்த்துக்கொள்ளும் சிந்தனையும் தெக்கத்தெளிவாய் படம் பிடித்தது போலிருந்தது. "அமெரிக்கர்களை சுதேசிகள் (Natives) துன்புறுத்தியதற்கு தாகொம்பு ஈடு—நஷ்ட யீடு தந்தாக வேண்டும். இல்லாவிட்டால் அமெரிக்கப் பீரங்கிகளுக்கு பாடங் கற்றுக்கொடுக்கத் தெரியும். நாற்பத்தைந்து ஆயிரம் (45,000) டாலர்கள் தந்தாலாச்சு, தவறினால் ஊரை யெல்லாம் சுட்டுப் பொசுக்கி விடுவோம்" என்று உறுமினான். தாகொம்புக்கு பதில் சொல்லத் தெரியவில்லை. நாற்பத்தையாயிரம் டாலர்—இந்திய ரூபாயில் ஒன்றரை லட்சம். இவ்வளவு பெரிய தொகையை தாகொம்பு பாட்டன் பூட்டன் தலைமுறையிலேகூடப் பார்த்திருக்க மாட்டான். மேலும் பிஜித் தீவுகளிலே பணம் என்ற நாற்றமே இதுவரை கிடையாது. அரசனுக்கு வரி செலுத்துவது முதல் சாதாரண செலாவணிவரை பண்டங்களைக் கொண்டுதான். உப்புக்குப் புளியும், புளியைக் கொடுத்து மிளகாயும், பருத்தி கொடுத்து துணி வாங்குவதுமாக அவர்களது வாழ்க்கை நடந்து வந்தது. தாகொம்புவின் கஜானாவில் ஒரு சல்லிக் காசுகூட இல்லை. களஞ்சியங் களஞ்சியமாய்த் தானியங்களிருக்கும். பண்டகசாலைகள் நிறையப் பண்டங்களிருக்கும். இவற்றையாவது கொட்டித் தொலைக்கலாமென்றாலோ



செல்லாக் காசுமில்லாமல் எல்லாம் அமெரிக்க டாலர்களாய்த்தான் வேண்டுமாம். அடபாவமே! தாகொம்பு, டாலருக்கு எங்கு போவான்? தானியத்தை விற்றுக் காசாக்கலாமென்றாலோ எந்த அமெரிக்கன் வாங்குவான்?

இவ்வாறு பிஜி யரசன் பிரலாபித்துக்கொண் டிருக்கையில் அவனுடைய நிலங்களில் நன்றாய்ச் செய் நேர்த்தியாகிப் பண்ணைடைந்திருந்த பல நிலங்கள் ஈட்டுப் பணம் செலுத்தப்பட வேண்டிய தவணைவரை கொதுவையாயிருக்கட்டுமென்று எடுத்துக்கொள்ளப்பட்டன. அவைகளை அமெரிக்க சைன்யம் முற்றுகை போட்டிருந்தது.

தாகொம்பும் அவனது மந்திரி பிரதானிகளும் என்ன செய்யலாமெனப் பலவாறு சிந்தித்தார்கள். ஒன்றும் விளங்கவில்லை. ஏதோ பிரிட்டிஷ்காரர்களென்று ஒரு ஜாதியாரிருப்பதாகவும் அவர்கள் இந்த உலகத்தை யெல்லாம் கொடிக் கட்டி யாளுவதாகவும் பிரமாதமாய் அளக்கிறார்களே, அந்தப் புண்யவான்களின் காலில் விழுந்தாவது பார்க்கலாமென முடிவுகட்டினார்கள்.

அப்படியே அப்பொழுது பிரிட்டிஷ் சிம்மாசனத்திலிருந்த விக்டோரியா ராணிக்கு விண்ணப்பம் விடுக்கப்பட்டது. காபினெட் சபையார் இவ் விண்ணப்பத்தை நன்றாய் விவாதித்து பிஜிப் பிரச்னையை வெகு சாதுர்யமாகக் கையாள வேண்டுமென்று தீர்மானித்தார்கள். அதன்படி ஒரு கமிஷன் தயாரிக்கப்பட்டது. இரண்டொரு டிம்மிகளையும், டாமிகளையும் அந்தக் கமிஷனில் மெம்பர்களாக்கி பிஜியிலே போய் அமெரிக்கக் கடனுக்குப் போதுமான சொத்து பிஜித் தீவுகளில் உண்டா என்று பார்த்து வரும்படியனுப்பி வைத்தார்கள். இவ்வாறு, காலங் கடத்துவதற்குக் கமிஷனையனுப்புகிறது என்ற கொள்கை பிரிட்டிஷ்காரர்களுக்கு இற்றைக்கு நேற்றுப் பாடமென்றெண்ணுகிறீர்களா? அக் காலத்திலும் அப்படித்தான்; இக் காலத்திலும் அப்படித்தான்.

பிரிட்டிஷ் தூதுவர்கள் பிஜித் தீவுகளைச் சாரியடித்துப் பார்ப்பதற்குள் உண்மையிலேயே தவணையுந் தாண்டிவிட்டது. இனி எப்படியும் பணம் வந்துவிடும்; வட்டியும் முதலுமாய் வாங்கிவிடலாமெனக் கண்ட அமெரிக்கர்கள் தொகையை யிரட்டித்து தொண்ணூறு ஆயிரம் (90,000) ஆக்கிவிட்டார்கள். ஆங்கில—வெள்ளையனுக்கு அமெரிக்க—வெள்ளையனென்ன இளைத்தவனா? 45,000 கொடுக்க மாட்டாதவன் 90,000 த்தை யெங்கிருந்து கொடுப்பான்? ஐயோ! தாகொம்பு பாடு 'வறுவல் சட்டியிலிருந்து நெருப்பில் விழுந்த' கதையாய் முடிந்தது.

தூது வந்த வெள்ளையர், "பாலினேஷன் கம்பெனி" யென்னும் ஒரு கூட்டு வர்த்தகக் கூட்டத்தை யுண்டாக்கி தாகொம்பு மன்னனோடு ஒப்பந்தமொன்று செய்துகொண்டார்கள். அதன் ஷரத்துகள் மஹா விபரீதமானவை. அமெரிக்கருக்குக் கொடுக்க வேண்டிய அபராதத் தொகையை 'பாலினேஷனே கொடுத்துக் கொள்ளுகிறது. அதற்கு ஈடாக நல்ல நிலங்களாய் இரண்டு லட்சம் ஏக்ராக்களை எந்தவிதமான வரிவப்புமில்லாமல் சாஸ்வதமும் சாஸனம் செய்து தந்துவிடுகிறதுடன் பிஜித் தீவுகளில் எந்த இடத்தில் வேண்டுமானாலும் பாங்கிகள் வைத்துக்கொள்ளவும், வேண்டுபட்டும் காகித நோட்டுகள் அச்சடித்துக்கொள்ளவும் உரிமை யளிக்கிறது' என்ற நிபந்தனைகளில் 1868ல் தாகொம்பு வேறு விதியில்லாமல் கையொப்ப மிட்டுவிட்டான்.

அன்று முதல் அரச கஜானா வறண்டு போய்விட்டது; வருமானமில்லை. பெரும்பான்மையான—அதுவும் நல்ல நல்ல நிலங்களாய்ப் பார்த்துக் கம்பெனியார் கைப்பற்றிக்கொண்ட பின்னர் வருமான மெங்கிருந்து வரும்? சுங்கத் தீர்வையும் அக் கம்பெனியாருக்கில்லை. அதனால் 'ஆயமும்' அரசனுக்குக் கிடையாது. இந் நிலைமையில் அரசன் பாடு தன செலவுக்குக் கூடத் திண்டாட்டத்தில் முடிந்தது. இப் பிரச்னையைச் சிக்கறுக்கத் தாகொம்பு வெள்ளை தர்மாத்மாக்களைத தானே யோஜனை கேட்டான். அவர்களும் அரசனுக்கு ஒரு முடிவான உபாயத்தைச் சொல்லிக் கொடுத்தனர். பிஜியில் பிறந்து வளர்ந்த ஒவ்வொரு நாட்டு மகனிடமும் (Citizen) ஒவ்வொரு பவுனும் ஒவ்வொரு நாட்டு மகளிடமும் ஒரு கால் பவுனும் 'தலைவரி' வசூலிப்பதுதான் அந்த வுபாயம். உடனே தாகொம்பு உத்திரவு போட்டுவிட்டான்.

'தலைவரி' செலுத்தப் பிஜியர்களிடம் பணமேது? விளைந்த தானியமும், வளர்ந்த மாடுகளுந் தானுண்டு. அவைகளும் இல்லாத பிரஜைகளுமிருந்தனர். இராஜ கட்டளையை மீறமுடியுமா? மாடு கன்றையும் வீடு வாசல்களையும் விற்றுவது 'தலைவரி' கட்டித் தானாக வேண்டும். பஞ்சத்துக்கு பிள்ளை விற்ற கதையாய் அருமையாய் வளர்த்த ஆடு மாடுகளை, வன்பாடுபட்டு விதைத்தறுத்த தானியமணிகளை, வெள்ளை வர்த்தகர்களுக்கு மிக மிகக் குறைந்த விலைக்கு விற்றனர் சிலர். சிலர் நிலபலன்களை அடகு வைத்தனர். இனிமேல் விளையப்போகிற விளைச்சலைச் சொல்லி வட்டிக்கு வாங்கினர் இன்னும் சிலர். ஒன்றுமில்லாதவர்கள் உடல் வருந்தி உழைத்தாகிலும் கொடுக்கிறது என்ற எண்ணத்துடன் கம்பெனித் தோட்டங்களுக்கு ஓடினார்கள். ஒரே சமயத்தில் ஏராளமான ஆட்கள் வந்துவிடவே கம்பெனிக்காரர்கள் கூலியை வெகுவாகக் குறைத்துவிட்டனர். ஒரு வார முழுதும்—ஏழு நாட்களும் மாடாய் உழைத்து மண் வெட்டியாய்த் தேய்ந்தாலும் 1 ஷில்லிங் (12 அணா) கூலிதான் கிடைக்கும். இதைக்கொண்டு தன் வயிற்றையும் தனது பெண்டு பிள்ளைகளின் வயிற்றையும் நிறப்புவதா? வரி செலுத்துவதா? ஒன்றும் முடியாமல் பலர் ஓடிப்போனார்கள். தற்கொலை செய்துகொண்டவர்களின் தொகையும் கொஞ்சமல்ல. இவ்வாறு பிஜியர்கள் பட்டபாடு சொல்லிடப்படாது. பிஜியர்களின் ஜனத் தொகையும் நாளுக்கு நாள் நகன்றுவிட்டது.



அரசனது கெதியோ அடிமாளலாயிற்று. இரண்டு லட்சம் பிஜியர்களிடமிருந்து வெறும் 6,000 பவுன்கள்தான் அவனால் வசூலிக்க முடிந்தது. இவ்வளவு சொற்பத் தொகையை வைத்து ஒரு அரசாங்கத்தை என்னமாய் நிர்வஹிப்பது? முடியாமல் இராஜாங்கத்தையே வெள்ளைக்காரர்களிடத்தில் தானே ஒப்படைத்துவிடலானான்.

சட்டங்கள் வகுக்கப்பட்டன. வரி செலுத்ாதவன் கோர்ட்டுக்கு இழுத்துவரப்பட்டான். விசாரணை! விசாரணைக்குப் பின் தண்டனை! தண்டனைக்குப் பிறகு செலவு தொகையோடு தண்டல்!

கோர்ட்டு வாசலில் கங்காணி (வெள்ளை வர்த்தகன்) காத்திருப்பான். தண்டனை காலமட்டும் அவனிடம் அக் கைதி வேலை செய்வதா யிருந்தால் தான் அவனது தலைவரியைச் செலவு தொகையோடு கட்டிவிடுவதாகக் கூறி மீட்டிக்கொண்டு போவான். தலைவரி செலுத்தத் தவறியவனுக்கு 18 மாதங்கள் சிறை தண்டனை யென்ற சட்டப்படி ஒரு வருஷத் தலைவரிக்கு ஒன்றரை வருஷம் உழைத்துத் தொலைய வேண்டும். இவ்வாறு பிஜியர்கள் பிழைப்பு பிச்சைப் பிழைப்பாய் முடிந்தது.

இனிமேல் முடியாது என்ற நிலைமையில் 'எங்களது கஷ்டங்களைக் கொஞ்சமாவது குறைக்கக் கூடாதா?' வென்று பிரிட்டிஷ் சர்க்காருக்கு 'மகஜர்' அனுப்பினார்கள். கமிஷன் வந்தது. விசாரணை செய்தது. பிஜியர்கள் கஷ்டப்படுவது வாஸ்தவந்தான் என்று எழுத ஏதோ அவர்களுக்கு தயவும் பிறந்தது. அதன்மேல் 1874-ம் ஆண்டில் பிஜித் தீவுகள் பிரிட்டிஷ் காலனி (குடியேற்ற நாடு) களுடன் சேர்க்கப்பட்டன. இன்னும்கூட அத் தீவுகள் பூகோள படத்தில் சிவப்பு வர்ணத்திலேதான் வரையப்பட்டிருக்கின்றன.

---

# நாளந்தா சர்வ கலாசாலை. *

## (NALANDA UNIVERSITY.)

திரு. சி. கு. நாராயணசாமி முதலியார் அவர்கள்.

### தோற்றுவாய்

பாரத கண்டத்தில் பிரசித்தி பெற்ற புராதீன தேசங்களில் மகத நாடும் ஒன்று. ஜராசந்தனும் அவன் குமாரன் சகாதேவனும் பர்வதங்களால் சூழப்பட்ட "கிரிவிரஜம்" என்னும் மகத நாட்டை இராஜதானியாகக் கொண்டு அரசு செய்து வந்தார்கள். இவர்கட்குப் பின்னர் மகத நாட்டின் வரலாறு நன்றாக அறியக் கூடாமல் அந்தகாரப் பட்டிருக்கிறது. ஆயின், கி. மு. ஐந்தாம் நூற்றாண்டு முதல் இந் நாடு, சிறிது முன்னேற்றமடையத் தொடங்கி கி. பி. 12-ம் நூற்றாண்டில் மகம்மதியர்கள் படையெடுப்பால் முழுதும் நாசமடையும்வரை சிறுமையும், பெருமையுமான தசையில் இருந்து வந்தது. மத்ய காலத்தில் சைசுநாகர்கள், மௌரியர்கள், சங்கரர்கள், பிராமணர்கள், குப்தர்கள், வர்ம வமிசத்தர்கள், பாலவமிசத்தர்கள் ஆகிய ஏழு வமிசத்து அரசர்கள் மகத நாட்டிற்கு அதிபதிகளாகி அதிகாரத்தைக் கைக்கொண்டிருந்தார்கள். இவர்களில் மௌர்ய வமிசத்து சந்திரகுப்தனும், அசோகனும் பிரசித்தி பெற்று இந்து தேசம் அனைத்திற்கும் ஏகச்சக்ராதிபதிகளாக விருந்து ஆட்சி புரிந்தார்கள். சந்திரகுப்தன் ஆட்சியில் கிரேக்கர்கள் இந்து தேசத்தினின்றும் துரத்தியடிக்கப்பட்டனர்.

ஜராசந்தனது தலைநகராகிய 'கிரிவிரஜம்,' கி. மு. 450-ம் ஆண்டு முதல் 500-ம் ஆண்டுவரை "இராஜக்கிருகம்" என்று பெயர் சிறந்து மகத நாட்டிற்குத் தலைநகராக விளங்கி "அஜாதசத்துரு" என்னும் அரசன் காலத்தில் (அஜாதசத்துரு—விரோதமே யில்லாதவன்) பாடலீபுத்திரத்திற்கு மாற்றப்பட்டது.

கி. மு. 5-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மகத நாட்டிற்கு "பிம்பசாரன்" எனப் பெயரிய அரசன் முடிசூடப் பெற்றான். அவன் புத்த தேவருக்குச் சமகாலத்தவன். பௌத்த மதத்தை அனுஷ்டித்த

* மொழிபெயர்ப்பு.



அரசர்களில் பிம்பசாரனே முதலாமவன். இதனால், பௌத்த மதம், அரச மதமாய் அரசனது ஆதரவை மிகுதியாகப் பெற்று விருத்தியடைந்து எங்கும் பரவி விளங்கியது. இங்ஙனம் பௌத்த மதப் பரவியதனால், மகதத்தில் பௌத்த தேவாலயங்களும், பள்ளிகளும். உன்னத மேடைகளும், உலாவு சோலைகளும் மிகுதியாகக் கட்டப்பட்டு எவ்விடத்தும் காண முடியாத அதிசய அழகு, அங்கு காணப்பட்டு யாவர் கண்ணையும், கருத்தையும் கவர்ந்து வியக்குமாறு விளங்கிக்கொண்டிருந்தது. இங்கு மதாபிவிருத்தி விஸ்தாரமாக விருத்தியடைந்து மேன்மை பெற்றிருந்தது போலவே, மதக் கல்வியும் மிகுதிப்பட்டு கற்போர் தொகையும், முயற்சியும் அதிகரித்திருந்தன. இங்ஙனம் மதமும், கல்வியும் அதிகரித்து ஓங்குவதற்கு மக்களது விருப்பமே முதற் காரணம். இரண்டாவது நாகரீகம். இவ்விரண்டும் மகத நாட்டின் ஐஸ்வர்யமாயிருந்தன.

நாகரீகத்தின் உண்மைத் தத்துவங்கள், சர்வ ஜனங்களையும் சமத்துவமாகக் கருதலும், எல்லா வுயிர்களிடத்தும் பரிந்துருகும் தயாளமுமேயாம். இச் சமரஸ நன்னிலை மகத நாட்டில் பௌத்த மதத்தில் பரவியிருந்ததுபோல் மற்றெங்கும் பரவவில்லை. போர் புரிவதற்குப் பல் வகைச் சேனைகளுடன் சென்று பகைவரைத் தாக்கி அவர் தேகத்தைக் கொடிய ஆயுதங்களால் துன்புறுத்தி, பிராண வேதனையடையும்படி செய்வது மகத்தான குற்றமென்பதை ஜீவர்களிடத்துக் கொண்டுள்ள காருண்யத்தால் உணர்ந்து மிக வருந்தி, அத்தகைய துன்பத்திற்கு ஏதுவான யுத்தத்தை நிறுத்திப் பாசறை நீங்கும் அருங்குணம், அசோகன் முதலான பேரரசர்கட்கு ஏற்றதே யன்றி, நாகரீக சிரேஷ்டர்கள் தாங்களே யென்று வாயளவில் கூறி, போலி வீரங்காட்டிக் கடுமையான போருக்கு அடிகோலுகின்ற மேற்றிசைப் பிரபுக்களுக்கு ஏற்றதாகா. போரினால் உண்டாகும் கொடிய பாவத்திற்குப் பயந்து, தமது ராஜ்யம் பகைவர்கள் கைவசப்படுவதா யிருப்பினும் உடன்பட்டு, தாம் தொடுத்த போரை நிறுத்தும் பெருங் குணம் பழைமையான பாதகண்ட அரசர்கட்குச் சாத்தியப்பட்டு, நவீன நாகரீக மேற்றிசையார்க்கு சாத்தியமில்லா திருக்கிறது. ஜீவ ஹிம்சை ஒழிவதன் பொருட்டே நாங்கள் யுத்தம் செய்கிறோமென்று உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று கூறித் தீயதே செய்யும் நவீனர்களான மேற்றிசையினரைப் போல். பூர்வீகர்களான நமது பாரத நாட்டு வீர மக்களாகிய உண்மை அரசர்கள் செய்யத் துணிந்தார்களில்லை.

மகத நாடு மாணவர்கட்குக் கீர்த்தி சிறந்த புண்ணிய ஸ்தலமாக விருந்தது. அதனாலேயே பிற நாடுகளினின்றும் கல்வி கற்பதில் விருப்பமுடையவர்கள் மகத நாட்டுக்கு மிகுதியாக வந்து கல்வி கற்றுத் தேருவதில் முனைந்திருந்தார்கள். வித்யார்த்திகளின் மிகுதிக்

கேற்பவே அங்கு வித்தியாலயங்களும், சர்வகலாசாலைகளும் மிகுந்திருந்தன. அத்தகைய சர்வகலாசாலைகளில் கீர்த்தி சிறந்து திகழ்ந்தது நாளந்தா சர்வ கலாசாலையேயாம்.

## நாளந்தாவின் தொன்மை நிலைமை

நாளந்தா என்பது இராஜகிருகத்திற்கு வடக்கில் ஏழு மைல் தூரத்திலுள்ளது. புத்தகயாவுக்கு இது ஈசான திசையில் 49 மைலிலும், பாடலீபுத்திரத்திற்கு ஆக்னேய திசையில் 55 மைலிலும் இருக்கிறது. மிகப் பழைமையான காலத்தில் இத் தலம், ஓங்கிய மா மரங்கள் நிறைந்த பெரு வனமாயிருந்தது. ஸ்ரீ புத்த தேவரின் தனிக மாணவர்கள் 500 பேர்கள் சேர்ந்து லட்சம் தங்க நாணயங்கள் விலையாகக் கொடுத்து, விஸ்தாரமான அந் நிலத்தைப் பெற்று, தமது ஆசிரியருக்கு தபோவனமாக விருக்கும் பொருட்டு அளித்தார்கள். ஸ்ரீ புத்த பகவான் அவ் வனத்தில் ஒரு சமயத்தில் மூன்று மாதம் தங்கியிருந்து தர்மோபதேசங்களைச் செய்து வந்தார். புத்தர் தாம் ஜீவகோடிகளுக்கு எவ்வளவு கொடுத்தாலும் அவ்வளவும் போதாவென்று எண்ணுகின்ற தர்மகுண சீலரானதால் அவர் அத் தலத்திற்கு 'ந + அலம் + த = நாலந்த' என்று பெயரிட்டனரென்ப. நாளந்தாவுக்கு நெருங்கிய இடங்களில் புத்தருக்கு அன்புள்ள மாணவர்களான 'சாரீபுத்திரன்,' 'மகா மௌத்கல்யன்' என்னும் பெயரினர் தோன்றினார்கள். நாளந்தாவில் தாமரைகள் நிறைந்த ஓர் தடாகத்தில் "நாலந்தன்" என்ற நாகன் ஒருவன் தங்கியிருந்ததனால், அத் தலத்திற்கு அப் பெயர் உண்டானதென்றும் ஒரு கதை வழங்குகிறது.

புத்த தேவர் வசித்ததினாலும், புனிதம் பெற்றதுகொண்டும், பௌத்தர்களான பிம்பசாரன் முதலான அரசர்கள் அவ்வப்போது நாளந்தாவுக்கு விஜயஞ் செய்து தங்கியிருந்தார்கள். கிறிஸ்து சகம் நாலாவது நூற்றாண்டுவரை நாளந்தா பௌத்த புண்ணிய ஸ்தலமாகப் பிரசித்தி பெற்றிருந்தது. அப்பொழுது சர்வகலாசாலை அங்கு ஸ்தாபிக்கப்படவில்லை. கிறிஸ்து சகம் 410-க்கு அடுத்து இந்து தேசத்தில் யாத்திரை செய்துகொண்டிருந்த "பாஹியான்" என்ற சீன தேச யாத்திரிகன் நாளந்தாவைக் குறித்து எழுதியிருந்தும் சர்வ கலாசாலையைப் பற்றி எழுதாது விட்டதற்கு அதுவே காரணம். நாளந்தாவில் சர்வகலாசாலையில்லாதொழியினும், பௌத்த புண்ணிய க்ஷேத்திரமாயிருந்ததனாலும், மகத நாட்டின் தலைநகருக்கு அருகிலிருந்துகொண்டும் அரசர் தங்குவதற்கு இனிய வாசஸ்தலமாக விளங்கியதனாலும் அங்கு பல பெரும் மாளிகைகளும், பௌத்தாலயங்களும் அமைக்கப்பட்டிருந்தன. இப்பொழுதும் அங்கு மாளிகைகளும், தாமரை மலர்கள் நிறைந்த தண்ணிய பல நீர் நிலைகளும் மிகப் பெரிதாய் ஒரு மைல், ஒன்றரை மைல் அகல நீளமுள்ளதாய் விளங்குகின்றன



## சர்வகலாசாலை ஸ்தாபனம்

புத்த தேவரின் நிரியாணத்திற்குப் பின்னர், அதாவது கி. பி. நான்காவது நூற்றாண்டில் பிரம்ம வமிசத்தினனாகிய "சக்ராதித்யன்" என்னும் அரசன் முதன் முதல் நாளந்தாவில் பௌத்த சந்நியாசிகளும் பிறரும் தங்குவதற்காகத் தண்ணிய மலர்ச் சோலைகளுடன் கூடிய பெரிய மாளிகையொன்று கட்டுவித்தான். அங்ஙனம் அவன் கட்டிய மாளிகைக்கு அஸ்திவாரம் எடுக்கும்போது ஒரு நாகப் பாம்புக்கு உடலிற் காயம் பட்டதாம். அச் செய்தியைக் கேட்ட ஒரு பௌத்தப் பெரியார் அச் சம்பவம் அத் தலத்தின் மகிமையை உணர்த்தும் முன்னறிகுறியென்றும், அம் மாளிகையின் மூலம் நானா தேசத்துவாசிகளான எளிய மாணவர்கட்கு மிகுதியான கல்வி நலம் உண்டாகுமென்றும் கூறினர். சக்ராதித்யனுக்குப் பின்னர் அவனது குமாரன் 'புத்த குப்தன்' தெற்குத் திக்கில் ஒரு மாளிகை கட்டுவித்தான். அவன் குமாரன் 'ததாகத குப்தன்' தனது தந்தையின் மாளிகைக்குக் கிழக்கில் ஒரு மாளிகை கட்டுவித்தான். அவனுக்குப் பின்னர் 'பாலாதித்யன்' என்பவன் மேலே காட்டிய மாளிகைக்கு ஈசானத் திக்கில் ஒரு மாளிகை கட்டுவித்தான். அம் மாளிகை தம் முன்னோர்கட்கு வித்த மாளிகைகளுக்கெல்லாம் அழகிலும், அமைப்பிலும் உயர்ந்து இன்ப நிறைவுடையதாய் இலங்கியது. உயர் நலமுடைய இம் மாளிகை வேலை பூர்த்திபெறுவதற்கு முன்னரேயே பாலாதித்யன், அதில் சர்வகலாசாலையை ஸ்தாபிப்பதற்காகப் பற்பல நாட்டிலுள்ள வித்யார்த்திகளுக்கு ஜாதி மத பேதங்களைக் கவனித்துப் பாராமலே அக் கலாசாலையில் கலந்து கல்வி கற்கும்படி அழைப்பு விடுத்தான். அரசனது அழைப்பைப் பெற்ற வித்யார்த்திகள் பெரும்பாலோர் நாளந்தாவை யடைந்து கலாசாலை ஸ்தாபித விழாவில் கலந்துகொண்டனர். அங்ஙனம் கலந்துகொண்ட யாவர் முன்னிலையிலும் அரசன் எழுந்து பௌத்த மதமும், கல்வியும் அபிவிருத்தி யடைவதற்காகவே தான் பெருந் தொகை செலவிட்டு தர்ம நிலையமாக இச் சர்வகலாசாலையை ஸ்தாபித்ததாகவும், இதில் யாவரும் ஜாதி மத வேற்றுமையின்றிக் கலந்து கல்வி கற்கலாம் எனவும் கூறி ஆரம்ப விழாவை இனிது தொடங்கி முடித்தான்.

அவனுக்குப் பின் அவன் குமாரன் 'வஜ்ரராஜன்' ஒரு மாளிகையை மேற்குத் திசையில் எடுப்பித்தான். இதுவரையிலும் ஒரே குடும்பத்தினரான மகத நாட்டிறைவர்கள்மட்டும் பெருமையுடையதும், பிரசித்தி பெற்றதுமான அழகிய பெரு மாளிகைகளைக் கட்டுவித்தார்கள். இவர்கட்குப் பின்னர் மத்ய தேசத்து அரசன் ஒருவன், பெரும் பவனம் ஒன்று புதுக்கி, முன்னரே கட்டப்பட்டுள்ள ஆறு மாளிகைகளையும் உட்படுத்தி அவற்றிற்குப் பெருஞ் சுற்று மதிலொன்று எடுப்

பித்தான். அதன் பின்னர், மதம், கல்வி முதலிய அபிவிருத்தியை நாடிய செல்வர்கள் பலர், அவரவர் பக்தி சிரத்தைகளுக்கேற்ப, நாளந்தாவில் எண்ணிக்கையற்ற மாளிகைகளையும், ஆலயங்களையும் கட்டுவித்தார்கள். அவைகளில் அநேக சித்திர விசித்திர அலங்காரங்களையும் சிற்ப விற்பன நுட்பங்களை விளக்கவல்ல பௌத்த விக்கிரகங்களையும் பிரதிஷ்டை செய்தார்கள்.

## சர்வகலாசாலையின் அழகும் உயர்வும்

நாளந்தா நாடோறும் வளர்ச்சியிலும் புகழிலும் பிரபலப்பட்டு, அந் நகரத்து சர்வகலாசாலையும் காலக்கிரமத்தில் மிக்கச் சிறப்படைந்து இந்து தேச மனைத்திற்கும் பிரசித்தி பெற்ற வித்யா பீடமாய் விளங்கியது. அக் கலாசாலையில் கற்பதற்காகப் பற்பல நாடுகளினின்றும் மாணவர்கள் வந்துகொண்டே யிருந்தார்கள். அச் சர்வகலாசாலையிலேயே கல்வி கற்கும் மாணவர்களுக்கு இலவசமாக ஊண், உண்டி, வைத்திய வுதவி முதலியவை தாராளமாகவும், அன்போடும் ஆதரவோடும் கவனித்து செய்யப்பட்டு வந்தன. இருநூறு கிராமங்களுக்கு அதிகமான இடங்களிலிருந்து கிடைக்கும் பண வரவினின்றும் சர்வகலாசாலை உயர்வான நிலையில் சிறப்பாகப் பரிபாலிக்கப்பட்டு வந்தது. இவ் வருவாயே யன்றி, நதியும், மலையும் நெருங்கிய நகரத்தில் வசிக்கின்ற தனிகர்களும் பிறரும், பொன்னும், பொருளும், தான்யங்களும் உதவினார்கள். சக்ராதித்யன் முதலான அரசர்களால் கட்டப்பட்ட மாட மாளிகைகளே யன்றி பின்னும் வித்தியார்த்திகளின் தேவைக்கேற்ப பல மாளிகைகளும் நிர்மாணிக்கப்பட்டு வந்தன. ஒவ்வொரு மாளிகையும் நான்கு அந்தஸ்துகள் (மாடிகள்) உடையதா யிருந்தன. அவைகளின் நீண்ட வெண்ணிறச் சுவர்களில் பல்வேறு வர்ணங்களில் அழகான சித்திரங்கள் வரையப்பட்டிருந்தன. மாளிகையின் நெடுந் தூண்களில் அழகான பலவிதக் கொடி வகைகளும், அழகிய சித்திரப் பதுமைகளும் பன்னிற மைகளில் நன்றாகச் சித்திரிக்கப்பட்டிருந்தன. இவைகள் சூரியப் பிரகாசத்தால் பல வர்ணங்களாக மின்னிப் பிரகாசிப்பதானது இந்திர தனுசோ வென வியந்து கூறும்படியா யிருந்தன. கலாசாலையின் முன் முகப்பு, கைதேர்ந்த சித்திர வல்லவர்களால் சித்திரிக்கப்பட்டிருந்தது. அவற்றைக் கண்டோர் அழகின் அவதாரமோ வென ஐயுற்றுக் கூறினர். தரைகளும் சுவர்களும், சந்திரகாந்தக் கற்களாலும், பல நிற பீங்கான் சதுர வடிவங்களாலும் அமைக்கப்பட்டிருந்தன மேற் கூரைகள் பல வர்ணக் கண்ணாடிகளால் வேயப்பட்டிருந்தன. அவைகள் மீது பகலவன் பொன்னிற வொளி படர்வதால் பற்பல நிறங்கள் தோன்றி உள்ளிடமெல்லாம் புதிய அழகுகளை உண்டாக்கிக் கொண்டிருந்தன. கலாசாலையின் பற்பல மாளிகைகட்கும் நடுநாயகமாக விளங்கிக்கொண்டிருந்த பெரிய மாளிகை ஒன்பது அடுக்குகள் உயர்ந்து அதன் சிகரம் மேக மண்டலத்தைத் தாவிக்கொண்டிருந்தது. அம் மாளிகையின் ஒன்பதாவது பாகத்தின் சாளர வாயிலில் நின்று காண்பார்க்குக் காற்றும், மேகமும் கலந்து சஞ்சரிக்கும் விநோதக் காட்சி கட்புலனாகும் உச்சியில் கட்டப்பட்ட பௌத்தமத அடையாளக் கொடி, ஏக சாஸ்திர பாரங்கதர்களான பிரகஸ்பதியின் மாணவர்களை, பல சாஸ்திர பாரங்கதர்களாகச் செய்வதற்குக் கையை நீட்டி அழைப்பது போல் அசைந்துகொண்டிருந்தது. தண்ணிய நிழலைத் தரும் உத்தியான வனங்களும், மலர்கள் நிறம்பிய குளிர்ந்த தடாகங்களும் கலாசாலையைச் சுற்றி நேத்திரானந்தமாய் விளங்கிக் கொண்டிருந்தன. பச்செனப் படர்ந்திருந்த பசும்புற்றரை, மரகதக் கம்பளம் விரிக்கப்பட்டிருந்ததுபோலிருந்தது. சீனதேச யாத்திரிகனை 'யுவான் சுவாங்' நாளந்தா சர்வகலாசாலையின் மாணவனாகவிருந்த போது, அதன் இயற்கை—செயற்கை அழகுகளையும், வித்யாலயத்தின் விசேடச் செய்திகளையும் நேரிலறிந்து எழுதியதே நாம் இங்குக் குறிப்பிட்டுள்ளவை. ஆனதினால், அவற்றை நாம் நம்பவும் துணிந்தோம். நாளந்தாவின் வரலாறின்றி யூன்சாங் வரலாறும், யூன்சாங் வரலாறின்றி நாளந்தா வரலாறும் பூர்த்தி பெறமாட்டா.

## மாணவர்களும்—கல்வியும் உயர்வும்

நாளந்தா சர்வகலாசாலையில் பதினாயிரத்துக்கு அதிகமான மாணவர்கள் அமர்ந்து கல்வி கற்று வந்தார்கள். அவர்கள் பல்வேறு நாட்டினர்; பல பாஷையினர். இத்தகைய பெரியதொரு சமூகத்திற்கு ஏற்றதான கல்விகளை, மேலான முறையில் வித்யார்த்திகளிடத்து பிரதிப் பிரயோஜனத்தை எதிர்பாராமலே அறிவும், அநுபவமும், கல்வியாற்றலும் வாய்ந்த பேராசிரியர்களால் இலவசமாக அளிக்கப்பட்டு வந்தன. ஆசிரியர்களும், மாணவர்களும் ஐக்கிய பாவத்தில் அந்யோன்யமா யிருந்து வந்தார்கள்.

இக் காலத்தில் அத்தகைய உயரிய கல்வி கற்க வேண்டுமானால், மிகுதியான பொருட் செலவும் காலக்கழிவும் ஏற்படும். மாணவர்கள் உண்டி உடைகளுக்காக ஒரு பக்கமும், கல்வி கற்பதிலுள்ள விருப்பம் மற்றொரு பக்கமும் துன்புறுத்தப்படும்போது வித்தையில் விருத்தியாதல் எங்ஙனம்? முயற்சியின் பலத்தால் வித்யார்த்திகள் இத்தகைய கஷ்டத்திற் சிக்குண்டு ஒருகால் கல்வியில் பூரண பாண்டித்யம் அடைந்து உயரிய பட்டம் பெற்றாலும், கல்வியின் பொருட்டு கைப்பொருளெல்லாம் இழந்ததினால் உயரிய பட்டம் பெற்றதன் சந்தோஷத்தை அடைவதற்கின்றி இழந்த பொருள்களைச் சம்பாதிப்பதிலும் நீண்ட காலக் கழிவிலும், பெருங் கஷ்டத்திலும் அவதியுற்றுக் கற்ற

கல்வி பயனைக் கொடாததினாலும், சத்தற்றதென் றுணர்ந்த போதும் கவலைக் கடலில் ஆழ்கின்றார்கள். அந்தோ! இக் காலத்திய வித்யார்த்திகளின் எளிய நிலைக்கு இரங்குகின்றோம்!

மாணவர் கல்வி கற்பதிலுள்ள எண்ணத்தைத் தவிர, மற்றெந்த விசாரமும் இல்லாமல் கல்வி கற்பிக்கவல்ல இனிய வசதிகள் மேற் காட்டிய நாளந்தா—தக்ஷசீலம் முதலிய சர்வகலாசாலைகளைத்தவிர வேறு எங்கும் காண்பதற்கில்லை. பிரபஞ்சத்திலுள்ள எந்த சர்வகலாசாலை களிலும், இத்தகைய உதவியையும், உயர் நிலையையும் பெறவியலாது.

சர்வ கலாசாலையில் மதக் கல்வியே யன்றி மற்றும் பல்வகை கலை களுக்கும் தனித் தனி கலாசாலைகளிருந்தன. மத்ய பாகத்தின் ஒன்ப தடுக்குள்ள உன்னத மாளிகையில் மட்டும் விஸ்தாரமான எட்டு அறைகளும், முந்நூறு தனி விடுதிகளும் கட்டப்பட்டிருந்தன. அதில் பௌத்தமத நூல்கள் எவ்வளவு முதன்மையாகக் கருதி கற்பிக்கப் பட்டு வந்ததோ, அது போலவே வைதீக கிரந்தங்களும் பிரதான மாகவே கற்பிக்கப்பட்டு வந்தன. அங்கு வித்யார்த்திகளும், ஆசிரியர் களும் ஆத்ம விசாரம், மத ஆராய்ச்சி, கல்வியின் உயரிய தத்துவம் முதலியவற்றின் குணாகுணங்களைப் பற்றி வாதப் பிரதிவாதங்கள் செய்து வந்தார்கள். மற்றும் கேவலம் மதக் கல்வியே யன்றி சாஸ்திர படனமும் (படனம்—மனப்பாடம் செய்தல்) கற்பிக்கப்பட்டன. மேலும் இங்கு கணிதம், சோதிடம், சந்தசி—(ஆரிய யாப்பிலக்கணம்) வியாகர ணம், (இலக்கணம்) தர்க்கம், ஒஷதி (மூலிகை) சாஸ்திரம், வைத்தி யம் பூகோள ககோள சாஸ்திரங்களும் சிற்ப முதலான சாஸ்திரங்க ளும் கற்றுக்கொடுப்பதற்குச் சிறந்த வித்துவான்கள் ஏற்பட்டிருந்தனர். வித்தியாப்பியாஸ வகுப்புக்கள் பற்பல பாகங்களாகப் பிரிக்கப்பட்டு நிபந்தனைகளும், விதிகளும், விதிக்கப்பட்டிருந்தன. அவை:—

(1) புதிதாக வித்யாலயத்தில் சேர்க்கப்பட்ட ஆரம்ப திசையி லுள்ள வித்யார்த்திகள், சமையற் காரியங்களைத் தாங்களே செய்து கொள்வது.

(2) முதல் வகுப்பில் வாசித்து பரீட்சையில் தேர்ந்தவர்கள் இரண்டாவது வகுப்புக்கு உயர்த்தப்படுவதோடு சமையல் பொறுப் பினின்றும் நீக்கப்படுவது.

இவ்விரு வகுப்பார்களும் இக் காலத்தில் ஒரே யிடத்தில் சேர்ந்து உறைதல் வேண்டும்.

(3) இரண்டாவது வகுப்பில் தேர்ந்த வித்யார்த்திகள் மூன்றா வது வகுப்புக்குச் செல்லும்போது அவர்கட்கு எல்லாவித உபகரணங் களுடன் கூடிய தனி விடுதி வசதி செய்து கொடுப்பது.



(4) மூன்றாவது வகுப்பைக் கடந்து நான்காவது வகுப்புக்குப் பிரவேசிக்கிற பிரதி மாணவனுக்கும் மேற்காட்டிய உபகரணங்களுட னும், தனி விடுதியுடனும் மேற்கொண்டு தனி வேலையாளும் வைத்துக் கொள்ள அதிகாரம் அளிப்பது.

(5) நான்காவது வகுப்பிலும் தேர்ந்த மாணவர்கள், மேற் காட் டிய எல்லா வசதிகளும் பெறுவதுடன் ஆசிரியப் பதவிக்குரிய அந்தஸ் தையும் அளித்து உயர்த்தப்படுவர். இவர்கட்கு "உபாசகர்கள்" என் பது பெயர். ஐந்தாம் வகுப்பிற் குயர்ந்த இவ் வித்யார்த்திகட்கு அவர்களது தகுதிக்கேற்ப அவர்கள் ஏறிச் செல்வதற்கு வாகனமாக யானை அளிக்கப்படுவது.

(6) ஆறாவது வகுப்பே இங்கு உயர்ந்த வகுப்பாக நிர்ணயிக் கப்பட்டிருந்தது. இதில் தேர்ந்த வித்யார்த்திகளுக்கு அவர்களது கௌரவங் கருதி "பீடாதிபதி" என்ற உயரிய பட்டமும், அப் பட்டத் திற்கேற்ற பரிவாரங்களும் வழங்கப்படுவது.

நாளந்தா சர்வகலாசாலையில் சகல சாஸ்திரங்கட்கும், சூத்திரங் கட்கும் இருபதுக்கு அதிகமான வியாக்யானங்களை யுணர்ந்த வித்வான் கள் ஆயிரவர்களும், முப்பதுக்கு மிஞ்சின வியாக்கியானங்களை யுணர்ந்த வித்வான்கள் ஐநூறு பேர்களும், ஐம்பதுக்கு அதிகமான வியாக்யானங்களை யுணர்ந்த வித்துவான்கள் பதின்மர்களும் ஆசிரியர்க ளாக நியமிக்கப்பட்டிருந்தனர்.

கலாசாலையின் வித்யார்த்திகள் யாவரும் அவர்களுக்கு விதித் துள்ள கட்டு திட்டங்களுக்கு உட்பட்டு பக்தி சிரத்தையுடன் கல்வி கற்றுவந்தார்கள். கலாசாலையின் நிபந்தனைகள் கடினமாக விதிக்கப் பட்டிருந்ததானது, வித்யார்த்திகள் தூய்மையான ஒழுக்கங்களில் பழக்கம் பெறுவதற்கேயாம். மேலும் அவர்கள் சதா தமது அரிய காலத்தை மத ஆராய்ச்சியிலாவது, சாஸ்திர வாதத்திலாவது உபயோ கிக்கும்படி நிர்ப்பந்திக்கப்பட் டிருந்தனர். எந்த வித்யார்த்தியோ, பிறரோ, நாளந்தாவை யடைந்து அங்குள்ள வித்வான்களுடன் கலந்து தமது கல்வித் திறமையைக் காட்டி அவர்கள் மெச்சி அளிக்கும் "யோக்யதா பத்திரம்" பெற்றாலன்றி, தாம் பதின்மரெதிரில் "வித்து வான்" என்று கூறிக்கொள்வதற்குச் சுதந்திரம் இல்லாதிருந்தனர்.

மேற்றிசை சர்வகலாசாலைகளுக்குச் சென்று கல்வி கற்றுப் பட் டம் பெற்ற வித்யார்த்திகள், (B. A. Oxon, B. A. Cant.) என்று தற்போது எவ்வாறு கௌரவத்திற்குப் பாத்திரர்க ளாகின்றார்களோ அது போலவே பூர்வத்தில் நாளந்தா சர்வகலாசாலையில் வித்யாவிருது பெற்றவர்கள் கௌரவத்திற்குப் பாத்திரர்களாக விளங்கினார்கள்.

நாளந்தா சர்வகலாசாலையில் வித்யார்த்தியாகச் சேர விரும்பி வருவோர்களை, அக் கலாசாலையின் வாயில் காப்போர் வித்யா சம்பந்தமான சில வினாக்கள் வினவுவர். அவற்றிற்கு உரிய விடை கொடாதவர்கள் வந்த வழியே செல்ல வேண்டுவதுதான். இது கொண்டு அச் சர்வகலாசாலையின் அபிவிருத்தி எவ்வளவு உயர்வுடையதாகக் காணப்படுகிறது.

## யுவான் சுவாங் நாளந்தாவுக்கு விஜயஞ் செய்தல்

'பாஹியான்' என்னும் சீன தேசத்து யாத்ரீகனுக்கு அடுத்தபடி இந்திய நாட்டுக்கு விஜயஞ்செய்த யாத்ரீகன் 'யுவான் சுவாங்.' பௌத்த மத ஆராய்ச்சியில் வல்ல இவன் மிகப் பிரசித்தி பெற்றவன். இவன் இந்திய நாட்டில் பெரும் பாகத்தில் யாத்திரை செய்து பௌத்த மத தத்துவத்தை நன்கறிந்தவன். மத்ய ஆசியாவிலும், இந்தியாவின் வட பாகத்திலுமே இவன் முக்கியமாக யாத்திரை செய்துகொண்டிருந்தான். இந்த யாத்திரை காலம் (A. D. 629–645) அதாவது பதினாறு ஆண்டுகள். இவன், ஆராய்ந்து எழுதிய 'ஹ்ஸியூ-சி' அதாவது 'மேற்கு உலகத்து பௌத்தமத வரலாறு' என்னும் நூலின் கண், பௌத்த சமயம் இந்திய நாட்டில் உயர்ந்திருந்த மேலான நிலைமையையும், கல்வி யுலகில் பௌத்தமத பிக்ஷுக்கள் மேலான சேவை செய்ததையும் அவர்களது பழக்க வழக்கங்களையும் பற்றிச் சிறப்பிக்கப் பட்டிருக்கிறது. யுவான் சுவாங் சரித்திரப் பிரசித்தி பெற்ற 'ஸ்ரீ ஹர்ஷன்' என்னும் பெயரிய அரசனால் நன்கு மதிக்கப்பட்டதோடு, அவ்வரசன் அவனுக்குப் பல்லாற்றானும் உதவி புரிந்தான். மேலும், அக் காலத்தில் கல்வியிலும் ஒழுக்கத்திலும் உயர்ந்தோரான பல பெரியோர்களையும், பண்டித மணிகளையும், நூலாசிரியர்களையும் நேரில் அறியவும், பழக்கம் பண்ணிக்கொள்ளவும் ஏற்ற சௌகரியங்களையும் செய்து வைத்தான். நாளந்தா சர்வகலாசாலையின் தலைமை ஆசிரியரும், பிரதான நிருவாக கர்த்தருமான "சீலபத்திர"ரின் ஒப்பற்ற ஒழுக்க நலத்தையும், உயர்ந்த பேரறிவையும், பேரன்பையும் கண்டபோது யுவான் சுவாங்குக்கு உண்டான மகிழ்வுக்கும், வியப்புக்கும் எல்லை இல்லாதிருந்தன. அத்தகைய மேலான பெரியாரிடத்துத் தானும் சில காலம் மாணவனாக வமர்ந்து கல்வி கற்றுக்கொள்ள வேண்டுமென்ற அவா வுண்டாயிற்று. அங்கு பௌத்த மதத்தில் 'மஹா யானப் பிரிவினருடைய ஆதிக்கமே மேலோங்கியிருந்தது கண்டு, தானும் தனது மத ஆராய்ச்சிகளை அங்கேயே செய்து முடிப்பதென்னும் முடிவுக்கு வந்தனன். அம் முடிவின் வண்ணமே யுவான் சுவாங் ஆறு ஆண்டுகள் வரையில் சமஸ்கிருதப் பயிற்சியிலும் புத்தமத விசாரத்திலும் ஈடுபடலானான். 18 பிரிவுகளையும் சேர்ந்த பல்லாயிரக் கணக்



சென்னை-600 008

கான பௌத்த மதத் துறவிகள் தமது ஜீவிய காலத்தை அவ்விடத்திருந்த பௌத்த மடங்களிலும், ஆலயங்களிலும் கழித்து வந்தார்கள்.

யுவான் சுவாங் நாளந்தாவுக்கு விஜயமாவதற்கு முன்னர், உத்தம புண்ணிய க்ஷேத்திரமாகிய போதி மண்டலத்தில் அதாவது 'புத்த கயா'வில் தங்கி யிருந்தனன். இவன், நாளந்தா சர்வகலாசாலையின் அத்யக்ஷகர் சீலபத்திரரைக் கண்டபோது, இந்து நாட்டினரின் பழைமையான பழக்க வழக்கங்களின்படி அப் பெரியாரின் திருவடிகளில் தண்டகாரமாய் வீழ்ந்து வணங்கி தனது சிரத்தை அவரது பாதங்களில் பதியப் பொருத்தி முத்தமிட்டான். அங்ஙனம் வணங்கிய யுவான் சுவாங்கை சீலபத்திரர் தமது இரு கையாலும் வாரி யெடுத்து ஆசீர்வதித்து இருக்கச் செய்து, சுக நலங்களை விசாரித்துப் பின் இங்கு வந்ததின் காரணம் யாதென வினவினர். யுவான் சுவாங், தான் ஒரு வழிப் பிரயாணி யென்றும், இந்து நாட்டிலுள்ள பௌத்த புண்ணியப் பதிகளைத் தரிசிக்கவும், தானிதுவரையும் கற்றுக்கொள்ளாத சமஸ்கிருத பாஷையைக் கற்றுக்கொள்ளவும், அதனையும் மகனீயர்களான தங்களிடத்தே கற்றுத் தெளியவும் இங்கு வந்ததென்று விளம்பினன்.

## யுவான் சுவாங் வித்தியாப்பியாசம்

யுவான் சுவாங் சீலபத்திரரிடத்து யோக சாஸ்திரம் மூன்று முறையும், நியாய சாஸ்திரம் ஒரு முறையும், சப்த வித்தியா சாஸ்திரம் இரு முறையும் பிராணமூல சாஸ்திரத்தையும் உரையையும், சத சாஸ்திர மூலத்தையும், மூன்று முறையும் கற்கலானான் தான் காஷ்மீர நாட்டிலிருக்கும்போது கற்ற "விபாஷஸதபதாபி" தர்ம சாஸ்திரங்களைத் திரும்பவும் ஐயந்திரிபு அறத் தெளிவாகக் கற்றனன். பின்னர் பிராம்மண மத நூல்களாகிய வேதம் முதலியவைகளையும் பிறவற்றையும் நன்கு கற்றதோடமையாது, சமஸ்கிருதத்திலுள்ள பல பௌத்த மத பிரமாண நூல்களையும் கவனமாகக் கற்றுத் தெளிவுபெற்றான். இவற்றால், யுவான் சுவாங்குக்கு மொழியறிவில் மிகுந்த விற்பத்தியும், சாஸ்திர வாதங்களில் நுண்ணறிவும் உண்டாயின. தர்க்க முறையில் மதவாதிகளுடன் திறமையாக வாதம்புரியும் சமர்த்தும், எதனையும் நுனித்தறியும் ஆற்றலும், எவ்வகை வினாக்களுக்கும் விரைந்து விடையளிக்க வல்ல திறமையும் வாய்த்தன. இவ்வாறு மேலான பாண்டித்யம் பெற்றமைக்கு மகிழ்ந்த சர்வகலா சங்கத்தார், யுவான் சுவாங்குக்கு "தர்மபதி" (Master of Law) என்ற விருதுப் பெயர் சூட்டினர்.

## பௌத்த மதப் பிரிவுகள்

பௌத்த மதத்தில் பிரதான பிரிவுகள் இரண்டு. ஒன்று, "மகா யான மதம்," மற்றொன்று "ஹீன யான மதம்". இவற்றில் மகாயான மதத்தினரால் தூய்மையுடையதாகக் கருதிப் போற்றப்படும் நூல்கள்

ஐந்து; ஹீனயான மதத்தினர் கிரந்தங்கள் ஒன்பது. ஹீனயான மதத்தினர்க்குப் புத்த தேவரிடத்து பக்தி மிகுதியாகவிருப்பினும் முக்தி மார்க்கத்தில் உறுதியற்றவர்களா யிருந்தனர். அதில் அவர்கட்கு நம்பிக்கையுமில்லை. மகாயான மதத்தினர் முக்தி மார்க்கத்தில் உறுதியும், தவம், யோகம் முதலியவற்றில் நம்பிக்கையும் கொண்டிருந்தார்கள். இரு மதத்தினரும் உயர்வு தாழ்வுகளில் ஒருவரையொருவர் தாக்கிக்கொண்டுமிருந்தனர். மகாயான மதத்தை எத்தனை ஆயிரம் பேர்கள் ஆதரித்தார்களோ அதுபோலவே ஹீனயான மதத்தையும் அத்தனை ஆயிரம் பேர்கள் அபிமானித்து ஆதரித்தார்கள். இரண்டு மதங்களும் வியாபகத்தில் ஒன்றும் தணிந்ததாயில்லை. வட திசையில் பூமியான், கபீஸம், வாரணவாசி, கபிலவாஸ்து ராஜ்யங்களும், கிளக்கில் சம்பா, ஹிரண்ய பர்வதம், மாளவ ராஜ்யங்களும், தெற்கில்—வல்லபி ராஜ்யங்களும், மத்ய தேசத்திலுள்ள வைஸாலியும், மேற்கில்—கூர்ஜ்ஜரமும், சிந்துப் பிரதேசங்களும் ஹீனயான மதம் பல்கிப் பெருகுவதற்கு ஏற்ற இடங்களாக இருந்தன. இப் பிரதேசங்களில் இம் மதம் பிரபலமாக அநுஷ்டிக்கப்பட்டுவந்தன. மகாயான மதமோவெனின், இந்து தேசமனைத்திலும் மிகுதியாகப் பரவி சிறப்பாகக் கொண்டாடப்பட்டிருந்தது. ஆனால், புண்ட்ரவர்த்தனம், கோங்கணபுரம், மகாராஷ்டிரம், ஆடலி, அயோத்தி, மதுரை, உஜ்ஜயினி முதலிய தேசங்களில்மட்டும் மேற்குறித்த இரு மதங்களையும் ஏற்றத்தாழ்வின்றி மக்கள் போற்றிப் பாராட்டி அநுஷ்டித்துவந்தனர். அம் மதங்களும் அவ்விடங்களில் மின்னிப் பிரகாசித்தன. அன்றியும், இரு பிரிவினர்களிலுமுள்ள மதவாதிகள், வாதப் பிரவாதங்கள் செய்வதில் தலைப்பட்டிருந்தனர். இவை சிநேகபாவத்தினால் செய்யும் வாய்ப் போரே (Friendly Dualistic tournoments)யன்றிப் பகையுடையதா யிருக்கவில்லை. இவ் விரு மதத்தினர்களுக்கும் தனித்தனி மடாலயங்களிருந்தன. ஆயின் ஒரு பிரிவினரின் மடாலயத்திற்கு மற்றொரு பிரிவினர் செல்வதில்லை. பந்தி போசனங்களிலும், ஆசார விவகாரங்களிலும் பேதங்களிருந்துவந்தன.

இவர்களுள் சில சமயங்களில் மக்கள், ஒரு மதத்திலிருந்து பிரிதோர் மதத்திற்குச் சென்று சேர்வர். இவற்றிற்கு 'ஆசங்கள்' என்னும் பண்டிதருடைய மாணவரும், "அபிதர்மகோஸ" நூலாசிரியருமாகிய "வசுபந்தன்" என்பவர் ஹீனயான மதத்திலிருந்து மகாயான மதத்திற்குச் சென்றதும், மதிபுரவாசியான "குணபத்திரர்" என்பவர் மகாயான மதத்தை விட்டு ஹீனயான மதத்தைத் தழுவியதும் சான்றாம்.

(தொடரும்.)

---

# தனவைசிய வாலிபர்களுக்கு.

திரு A பழனியப்பா அவர்கள்.

சகோதரர்களே!

இன்று உலகமிருக்கும் நிலைமையைக் கவனித்தீர்களா? இவ்வளவு கஷ்டமான நிலைமையிலுங்கூட நீங்கள் செய்து வரும் ஆடம்பரச் செலவுகளைக் குறைக்கிறீர்களா? கல்யாண மென்றால் எவ்வளவு செலவு செய்கிறீர்கள்! புதுமை யென்றால் எவ்வளவு! இன்னும் மற்ற விசேஷங்க ளென்றால் எவ்வளவு!! இவைகளை யெல்லாம் பெரியோர்கள் பார்த்துக்கொண்டு மௌனமா யிருப்பது நியாயமாகுமா? இன்று வங்க நாட்டு வாலிபர்கள் யென்ன செய்கிறார்கள்? நீங்கள் யென்ன செய்கிறீர்கள்? அவர்கள் தாய் நாட்டுக்காகத் தமது உயிரையும் துரும்பாக மதித்து உழைக்கும்போது நீங்கள் அதுவும் செய்யாமல் ஆடம்பரச் செலவு செய்து நாட்டின் செல்வத்தை அழிப்பது தர்மமாகுமா? பர்மா இப்பொழுது எவ்வித நிலையை அடைந்திருக்கிறது! அங்கு நமது இந்தியர்கள் என்ன பாடுபடுகிறார்கள்! அஃதன்றி நமது தாய் நாட்டில் உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, படுக்க பாயின்றித் தவிக்கும் ஏழைகள் எத்தனை பேர் நாளும் வளர்க்கிறார்கள்! இவைகளை யெல்லாம் நீங்கள் கவனியாதிருந்தால், நாடு எப்படி முன்னிலை அடையும்? ஆடம்பரத்தைக் குறைத்து ஏழைகளுக்கு உதவி செய்யக்கூடாதா? ஏழைகளிடத்தில்தான் கடவுள் உண்டு. அவர்கள் க்ஷேமத்தில்தான் உங்கள் நல் வாழ்வு அமைந்திருக்கிறது. அந்த ஏழைகளுக்கென்று ஊர் ஊராய்ச் சங்கம் நியமித்து அவர்களுடைய கஷ்டத்தை விலக்குங்கள். அதோடு பெண்களுக்குக் கல்வி அளிக்கும் விஷயத்திலும் முயற்சி செய்யுங்கள். பெண்களுக்குக் கல்வி யிருந்தால் இன்று நம் நாடு இவ்வளவு கேவலமான நிலையில் இருக்க நியாயமில்லை. இனியாவது தூக்கத்தினின்றும் விழியுங்கள். வாலிபர்களே! நம் நாட்டை சீர்திருத்த முயலுங்கள். ஆடம்பரம் வேண்டாம்! கல்வியைப் பெருக்குங்கள். ஏழைகளுக்கு உதவி செய்யுங்கள்; அன்பைப் பெருக்குங்கள்.

வாழ்க! அன்பு வாழ்க!!

# பர்மாவும் பர்மியரும்.

திருமதி. C. K. தமயந்தி அவர்கள், B. A.

பல்வளங்கள் செறிந்து விளங்கும் பர்மா நாடு வங்கக் கடலுக்கப்பால் இந்தியாவின் கீழ்பால் உளது. அரசியல் நிருவாகம் என்ற விஷயங்களைப் பொருத்த வரையில் அஃது இந்தியாவைச் சேர்ந்ததொரு பாகமென்றே கூறிவிடலாம். ஆனால், இந்தியாவிலிருந்து அத் தேசம் பிரிக்கப்பட்டிருப்ப தல்லாமல், அவண் வாழும் மக்களும் இந்தியருடைய வகுப்பு, மதம், பேச்சு, நடையுடை பாவனைகளோடு மாறுபட்டவரா கவே யிருக்கின்றனர்.

பர்மா ஒரு மலைப்பாங்கான நாடு. வடக்கிலும் கிழக்கிலும் உள்ள திபேத்து, சீனா என்ற நாடுகளினின்றும் பர்மாவைப் பிரிப்பன மலைகளே. அவை ஒவ்வோரிடத்திலும் ஒவ்வோர் பெயரைக் கொண்டுள்ளன. அம் மலைகள் நாட்டின் வடக்கிருந்து தெற்கே பலவிதமாகப் பரவியிருப்பதால், மேடுகளும் பள்ளத்தாக்குகளும் பல உள. அப் பள்ளத்தாக்குகளில் ஓடுவன ஐராவதி, சிட்டாங், சால்வீன் என்னும் மூன்று நதிகள். அவற்றில் ஐராவதி பெரியதும் சிறந்ததுமாகும்.

பர்மாவின் நிலப் பரப்பு ஏறக்குறைய 2,80,000 சதுர மைலாகும். அது சென்னை, பம்பாய் மாகாணங்களின் மொத்தப் பரப்பைவிட அதிகமென்றே கூறவேண்டும். பர்மா மேல் பர்மா, கீழ் பர்மா என இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுளது. மேல் பர்மாவுக்கு மாண்டலே தலைநகர்; கீழ் பர்மாவுக்கு இரங்கூன் தலை நகர். இந்தியாவில் கோடை காலக் குன்றுகளாக சிம்லா, உதகமண்டலம் இருப்பன போன்று, பர்மாவிலும் மேமியோ என்னும் மனோகரமான குன்று ஒன்று உளது.

பர்மாவில் தற்போது ஏறக்குறைய 140 லட்சம் மக்கள் வசித்து வருகிறார்கள். அவர்களுள் பர்மியர் பலர்; இந்தியர் சிலர்; சீனர் சிலர்; ஐரோப்பியர் சிலர். இந்தியாவில் உள்ள பல வகுப்பார் பலப்பல மொழிகளைப் பேசிவருதல் போன்று, பர்மா



விலும் பர்மியர், கரீன்காரர்கள், ஷானியர், கச்சினர், சீனர் எனப் பிரிந்திருக்கும் அக் குடிகள் தனித்தனி மொழியையே பேசிவருகின்றனர். நிற்க. பர்மாவின் பழைய சரித்திரம் இருளால் மூடப்பட்டிருக்கிறதே யன்றித் திட்டமாய் விளங்கக் காணோம். எனினும், திரு. ஹார்வே என்பவர் பர்மியர் மங்கோலியருடைய வழியில் வந்தவர் என்று கூறியுள்ளார். வட இந்தியாவிலுள்ள மகத நாட்டின் வடபாலிருக்கும் மங்கோலியப் பிரதேசங்களினின்று ஆதியில் சிலர் பர்மாவுக்குச் சென்றனர் என்றும், கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டு வரையில் அவர்கள் சரிவர ஓரிடத்தில் தங்கினாரல்லர் என்றும், ஒன்பதாம் நூற்றாண்டிற்றான் மக்கள் இப்போது 'மேல் பர்மா' என்று சொல்லப்படு மிடத்தில் ஒன்று கூடினார்களென்றும் தெரிகிறது. மேல் பர்மாவில் வந்து சேர்ந்தவர்களுக்குள் நிகழ்ந்த பூசலால் சிலர் கீழே துரத்தப்பட்டனரென்றும், அவர்களால் நாட்டப்பெற்றதுதான் 'இரங்கூன்' நகரென்றும் தெரியவருகிறது. சிட்டகாங் என்னுமிடத்தில் அடிக்கடி புகுந்து பர்மியர் கலகம் விளைத்ததால், இந்திய அரசாங்கத்தாரோடு அவர்களுக்குப் பூசல் விளைந்தது. அப் போரைத்தான் 'முதல் பர்மா யுத்தம்' எனச் சரித்திராசிரியர் கூறுவர். அப்போர் கி. பி. 1824-ல் நிகழ்ந்தது. 1852-ல் மற்றொரு போரும் நிகழ்ந்தது. அதன் காரணம் பர்மியர் ஆங்கிலேய வர்த்தகரை வருத்தியதேயாம். இறுதியில் தீபா என்னு மரசனுடைய திறமையற்ற ஆட்சியால் பர்மா நாடு ஆங்கிலேயர் கைப்பட்டது. இதுதான் பர்மா நாட்டைப் பற்றிய சரித்திரச் சுருக்கம்.

பர்மா நாட்டில் சிறப்பாக விளைவது நெல். சம நிலப் பாகங்களில் ஏராளமாக நெல் பயிராக்கப்படுகின்றது. கீழ் பர்மா உன்னத நிலையிலிருப்பதற்கு நெல் விளைவே சிறந்த காரணமென்பது மிகையாகாது. அயல் நாடுகளுக்கு ஏராளமான அரிசி மூட்டைகள் ஒவ்வோர் ஆண்டும் அனுப்பப்படுகின்றன. தேக்கு மரங்களும் அங்ஙனமே ஏராளமாக வெளி நாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன. காடுகளில் மரங்கள் வேரோடு சாய்க்கப்பட்டு, துண்டு துண்டுகளாக அறுக்கப்பட்டவுடன், யானைகள் அவற்றை ஆறுகளுக்குக் கொண்டு செல்கின்றன. துண்டங்கள் ஆற்றில் தள்ளப்பட்டு, உரிய துறை முகங்களை அடையும். இவை இரண்டிற்கும் அடுத்த நிலையில் புகையிலை பயிராக்கப்படுகின்றது. ஆனால், அப் புகையிலை பர்மியருக்கே போதாமல், இந்திய தன்னகத்தே விளையும் புகையிலையை அனுப்பவேண்டி யிருக்கிறது. கரும்பு சிறிதே பயிராக்கப்படுகிறது. பழ வகைகள் பர்மாவில் கிடைக்கின்றன. மூங்கில் ஏராளமாகக் கிடைக்கிறது. எண்ணெய்ச் சுரங்கங்களும் பல உள.

பர்மியர் பெரும்பாலும் தம் முன்னோர் வாழ்ந்து வந்தது போன்றே வாழ்ந்து வருகின்றனர். பயிர்த் தொழிலே அவர்தம் சிறந்த தொழில். தற்போது அரசாங்கத்தார் பாதுகாப்பில் உள்ள பெருங் காடுகள் தேக்குமரங்களை நல்குகின்றன. இவையன்றி எண்ணெய்ச் சுரங்கங்கள் பலவும் அன்னியர் கையகத்துள. அவற்றில் பர்மியர் சிலர் வேலை புரிகின்றனர். நிலை எவ்வாறிருப்பினும், களிப்போடும் மனவமைதியோடும் வாழ்ந்துகொண்டும், பிற நாட்டாரோடுங் கூடி அவர்தம் நாகரிக முறைகளை யறிந்து அவற்றிற் பிடித்தவற்றைப் பற்றி யொழுகிக்கொண்டும் வாழும் பர்மியர் சிலர். பர்மிய ஆடவர் பிற நாட்டாரிடத்தே தொழில்கள் பலவற்றை விட்டுவிட்டும், சிறு வேலைகளுட் பலவற்றைத் தம் பெண்டிரிடத்தே விட்டுவிட்டும் அவர்களிற் பெரும்பாலர் வீணே காலங் கழிக்கின்றனர்; இந்தியருடைய தாளாண்மையும் ஐரோப்பியருடைய ஊக்கமுமே அந் நாட்டின் வகை வழிகளை வளர்த்து நாட்டினை நல்ல நிலையில் வைத்திருக்கின்றதெனக் கூறுதல் பொருந்தும். பொருள் சம்பாதிக்க வேண்டுமென்ற எண்ணம் ஆடவரிடமில்லை. ஒரு வேலையும் செய்யாது, சுகமாகக் காலங் கழிப்பதே உடம்பெடுத்ததன் பயன் என்பது அவர்தம் எண்ணம் போலும்! பெண்டிர் தமக்குச் சுகத்தைத் தேடிவைக்கப் பிறந்தவரென்று அவர்கள் எண்ணியுள்ளார்கள். அந் நம்பிக்கை பெண்டிர்க்கு முண்டு. ஆகவே, பாவம்! அப் பெண்டிர் அக வேலைகளையும் புற வேலைகளையும் செய்யவேண்டியவ ராகின்றனர்- என்? செய்துகொண்டும் இருக்கின்றனர். பர்மியப் பெண்களுள் பெரும்பாலார் வியாபாரஞ் செய்கின்றனர். வியாபாரஞ் செய்யாத பர்மிய வீட்டைக் காண்ப தரிதென்றே சொல்லலாம். வியாபார முறையில் அப் பெண்கள் கைதேர்ந்தவர்கள். அவர்கள் சில்லறையில் வியாபாரஞ் செய்வதே யன்றிப் பெருந் துறையிலும் வியாபாரஞ் செய்து வருகின்றனர். ஆடவர் வயல் வேலைகளை அவ்வப்போது பார்த்து வருகின்றனர். பர்மியப் பெண்கள் சினம் பொங்கிற்றாயின், கண்ணகியாகவே விளங்குவார்கள்.

பர்மியரது உணவுப் பொருள்களில் சிறந்தது அன்னமே. அவர்கள் சமைத்த பொருள்களை யெல்லாம் ஓரிடத்தில் வைத்துக் கொண்டு, வீட்டிலுள்ளார் அனைவரும் ஒருங்கே அமர்ந்து உண்பார்கள். ஆனால், ஒவ்வொருவருக்கும் தனித் தட்டுண்டு; ஒவ்வொருவரும் தாமே வேண்டுவனவற்றை எடுத்துச் சாப்பிட வேண்டும். அவர்களுக்கு குழம்பில் காரம் அதிகமிருக்கவேண்டும். பிற பதார்த்த வகைகள் பலவிருக்கும். உணவுண்ட பின்னர், பர்மிய ஆண்-பெண்-பிள்ளைகள் எல்லோரும் புகை பிடிப்பார்கள். பர்மியப்



ண்கள் புகையிலையைச் சுருட்டாகச் சுற்றுவதில் கைதேர்ந்த கள் பர்மியர் புகை பிடிக்கும் நேரங்களொழிந்த மற்றைய வேளைகளில் தாம்பூலம் போட்டுக்கொள்வர்.

பர்மியர்கள் இயற்கை யழகு வாய்ந்தவர்கள்; முழங்காலளவு நீண்ட தலைமயிரை யுடையவர்கள். தலை மயிரைச் சுற்றித் தலையுச்சியில் முடி போடுவர் ஆடவர். பெண்கள் தலையின் பின் முடியிடுவர். இயற்கையாக வுள்ள தலை மயிர் போதாதெனக் கருதி, பர்மியர் கடைகளில் விற்கும் தலை மயிரையும் வாங்கிச் சேர்த்துக்கொள்வர். என்னே அவர்கள் மயிர்மீது கொண்டுள்ள மயக்கம்! பணக்காரப் பர்மிய ஆடவர் பட்டாலாய ஆடைகளை அணிவர்; ஏழைகள் பருத்தியாலாய ஆடைகளை அணிவர்; பெண்கள் நிறம் வேறுபட்ட இரு துண்டுகளை ஒன்றாகத் தைத்து அரையில் உடுத்துவர். அவ்வாடை நாலரை அடி நீளமும் ஐந்தடி அகலமு மிருக்கும். பஞ்சாலாய சட்டைகளை உடலில் போட்டுக்கொள்வர்; தோள்மீது பட்டுக் கைக்குட்டையும் காணலாம். தலை மயிரில் பிணைக்கப்பட்ட மலர்களைத் தவிர வேறு எதையும் அப் பெண்கள் தலையில் அணியார்; பொன்னாபரணங்களைச் சிறந்த சந்தர்ப்பங்களிற்றான் அணிவர். பர்மியர் இல்லங்கள் பெரும்பாலும் மூங்கிலாலாயவை. வீடுகள் பெரும்பாலும் மூங்கிற் றூண்கள்மேல் கட்டப்பட்டிருக்கும். அவை ஓதம், மழைத் துன்பம் இன்றி மக்கள் சுகமாகயிருக்கவே இங்ஙனம் அமைக்கப்படுகின்றனவாம். பர்மியச் சிறுவர் போங்கிகள் என்று சொல்லப்படும் புத்த சந்நியாசிகளிடம் கல்வி பயிலவேண்டும். அவர்கள் எழுதவும் படிக்கவும் கற்றுக்கொடுக்கப்படுகிறார்கள். பர்மியர் புத்த மதத்தினர் ஆகலின், புத்த சந்நியாசிகளை அவர்கள் ஆசிரியராகக் கொள்கின்றார்கள். இனிப் பர்மியர் வரலாற்றை இத்துடன் நிறுத்திப் பொதுவாகப் பர்மாவில் வாழும் எல்லா மக்களைப் பற்றியும் கூறுவோம்.

பர்மாவில் தெனாசரீம், பெகு, ஐராவதி முதலிய பிரிவுகளில் ஜாதி மதத்தால் வேற்றுமைப்பட்ட பல இந்தியர்களையும் காணக்கூடும். அவரெல்லாம் அங்கு பொருள் தேடும் நாட்டத்தோடு சென்றவர்கள். அவரே யன்றிச் சீனர் பலர், வியாபாரிகளாகவும் சித்திரக்காரர்களாகவும் வாழ்கின்றனர். அங்குள்ள இந்தியத் தொழிலாளர் நிலங்களிலும் சுரங்கங்களிலும் தோட்டங்களிலும் வேலை செய்கின்றனர். பர்மியர் நெசவு, வண்டி செய்தல், மட்பாண்டம் வனைதல், தச்சு வேலை, கம்மாள வேலையாகிய இவற்றுள் ஈடுபட்டிருக்கின்றனர். புத்த மதம் ஒன்றே பர்மாவில் இருப்பதாகக் கூறவியலாது. கிறித்தவர், மகமதியர், இந்துக்கள் என்ற பல மதத்தார்களும் அங்கு நிறைந்துள்ளார்கள்.

# ஊர் நினைப்பு.

("தினமணி".)

சரியாகவோ தப்பாகவோ நான் இப்பொழுது திருச்சி சிறையில் அரசாங்கத்தின் வீர விருந்தினனாக இருக்கின்றேன். களவு செய்தேனா? கன்னமிட்டேனா? கொலை புரிந்தேனா? அல்லது கொலைக்கு உடந்தையா யிருந்தேனா? இந்தக் குற்றங்களி லெதுவையுமே நான் செய்யவில்லை. தவறு செய்பவனைத் திருத்துவது ஒரு குற்றமானால் நான் அந்தக் குற்றத்தைத்தான் உண்மையிலேயே செய்தேன். கள்ளைக் குடித்து குடியைக் கெடுப்பவர்களைக் குடிக்க வேண்டா

---

பர்மியர் தங்கள் வருணங்களுள் கொள்வினை கொடுப்பினை வைத்துக்கொள்வதோடு நில்லாது பிற நாட்டாரோடும் சம்பந்தம் வைத்துக்கொண்டுளர். ஒரு வகுப்பார் மற்றொரு வகுப்பாரோடு மணவினை நிகழ்த்த ஒருப்படாது பிற நாட்டாரை மணம்புரிய விழைவது யாது கருதி என்பது விளங்கவில்லை. பர்மியர் ஐரோப்பியரிடத்து பக்தி பூண்டு நடந்து வருகின்றனர். குருட்டு நம்பிக்கைகளும் மூடப் பழக்க வழக்கங்களும் பர்மியரை விட்டு இன்னும் நீங்கில.

பர்மியருள் சிறந்து விளங்கும் குணம் அவர்கள் அழகை விரும்புவதே. அழகே அவர்களுக்கு இன்பத்தைப் பயப்பது. அழகுடன் இருக்க அவர்கள் விழைகின்றனர்; அழகுடனுமிருக்கின்றனர். அழகுடைப் பொருள்கள் எந் நாட்டின வாயினுஞ் சரியே; அவற்றை ஆவலுடன் வாங்குவார்கள். அவர்களது தூய ஆடையும் புன்முறுவல் பூத்த பூங்குமுதச் செவ்வாயும் பர்மா நாட்டை அழகுபடுத்துகின்றன என்று துணிந்து கூறலாம். அவர்கள் நடிக்கும் புவே என்னும் நடனம் பார்ப்போர் மனத்தைக் களிக்கச் செய்யும். புத்த சாதுக்கள் மஞ்சளாடை (காவி) தரித்து வீதி வழியே செல்வது காணத் தகுவதொரு காட்சியாகும். பொதுவாகக் கூறின், ஒருவருக்குப் பர்மாவின் இயற்கை யமைப்பும், இரங்கூனின் செயற்கை யமைப்பும், பர்மியப் பெண்டிர்தம் இயற்கையுஞ் செயற்கையுஞ் சேர்ந்த அமைப்பும் ஒருங்கு சேர்ந்து விண்ணவர் நாடே பர்மா நாடு என்ற முடிவிற்குக் கொண்டு வரும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

---



மென்றேன். மீறிச் சென்றவர்களைக் காலைப் பிடித்துக் கெஞ்சவும் கெஞ்சினேன். அவ்வளவுதான் நான் செய்த தவறு. ஆறு மாதக் லேரிவல்; அரசவிருந்து. இந்தப் பாக்கியம் எவருக்கு வரும்! நான் செய்த தவமோ! நாடு செய்த வினைப் பயனோ!! அல்லது காந்திக் கடவுளின் தெய்வதமோ!!! இன்று எனக்கு இந்த இராஜ போகம் கிடைத்திருக்கிறது.

எந்த வொரு வேலையுமில்லாமல் சோற்றுக்கும் குறைவின்றி மைனர் செலவுகளுக்கும் தட்டில்லாமல் காலக்ஷேபம் செய்யும் ஒருவனை "உனக்கு என்ன உத்தியோகம்?" என்று கேட்டால் சுக ஜீவனம் என்கிறான். அம் மாதிரி சுக ஜீவனம் எனக்கு மிருந்தது. என்றாலும் அலுவலற்றவர்களைப் பிடித்தடைக்கும் இ. பி. கோ. 108, 110-வது சட்டங்கள் எனக்கில்லை. வேண்டுமானால் உலகாதாயமான ஊழியஞ் செய்த என்னை, எவர் வேலையற்றுப் போய் பிடித்து வந்து, வெட்டிச் சோறு போடுகிறார்களோ அவர்களை அச் சட்டங்கள் தொட்டுக்கொள்ளட்டும்.

ஒரு நாள்-தேதி ஞாபகமில்லை. வைகாசி மாதம்; வசந்தராஜன் கொலுவிருந்த காலம். தென்றல் சிலு சிலுத் தடித்தது. பூர்வ பக்ஷத்து புது நிலவும் எனது சின்னஞ் சிறிய அறைக்குள் கம்பிக் கதவுக் கிடையே யெட்டிப் பார்த்துக்கொண் டிருந்தது. அந்தச் சந்திர காந்தியில் குளிக்க வேண்டுமென்றொரு ஆசை பிறந்து என்னை ஏதோ தட்டி யெழுப்புவது போலிருந்தது. அது என்னவா யிருக்கலாம்? சட்டத்தால் (?) ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு முயற்சித்ததாகவோ அல்லது கோரமான கொலையைச் செய்ததாகவோ குற்றஞ் சாட்டப்பட்டு ஜீவ தண்டனை யடைந்தோ வேறு எப்படியோ சிறைச்சாலைகளில் சாஸ்வதமாகக் குடிகொண்டிருக்கும் சேலைப் பேனா யிருக்குமா? இல்லாவிட்டால் முகட்டுப் பூச்சியாய்த்தா னிருக்கலாமா என்னைத் தொட்டெழுப்பியது? என்றெண்ணிப் பார்த்தேன். ஒன்றுமே விளங்கவில்லை. விளங்கித்தானாவதென்ன? முகட்டுப் பூச்சியாயின் அது வொரு பெரிய சைன்யம். அதை யெதிர்த்துப் போராட என் னொருவனால் முடியுமா? சேலைப் பேனென்று வைத்துக்கொண்டாலோ அவைகள் இந்திரஜித்தன் மேகத்தோடு மேகமாய் நின்று போராடியதுபோல், துணியோடு துணியா யிருந்து கடிக்கின்றன. துணியும் வெள்ளை; சேலைப் பேனும் வெள்ளை; நிலவும் வெள்ளை; என் கண்களும் வெள்ளை வெளிச்சமே காட்டுகின்றன. கேவலம் பூச்சிக்கும் பேனுக்குந் தோற்று அவைகளைச் சபித்தது போல ஒரு பெரு மூச்சும் விட்டு விட்டுக் கதவண்டை கையை யூன்றி உட்கார்ந்தேன். அப்பொழுது எனதுள்ளத்தில் ஒரு பெரிய யோசனை ஊடாடிற்று. "இந்தியர்களுக்கு அடிபடப் பயமில்லை; சாகத் துணி

வுண்டு; சிறை பயங் கிடையாது. இந்தச் சனியன், பூச்சிக்கு பேனுக்குந்தான் பயந்து சிறையை நிறப்பவில்லை" என்பது அந்தச் சித்தாந்தம். சரி அப்படியானால் இச் சித்திர வதையிலிருந் தப்புவதற்கு ஏதாவது வழி கண்டுபிடிக்க வேண்டும் என்றெண்ணிக் கொண்டிருக்கையில் ஊர் நினைப்பு வந்துவிட்டது.

இது வொரு கொடிய நோய். சொந்த வூரைவிட்டுப் பிரதேசம் போனவர்களையும், சொந்த நாட்டை விட்டோட்டப்பட் டிருப்பவர்களையும், சிறைப்பட்டிருக்கிறவர்களையும் இந் நோய் உள்ளூற அரித்துத் தின்னுகிறது. நானும் இந் நோய் வாய்ப்பட்டேன். எங்களூர்க் கந்தன், கருப்பன், மூக்கன், முனியன் முதலியவர்கள்தான் எனது நினைப்பின் கதா நாயகர்கள். ஒரே யொரு ஊர்; ஊரிலே ஒரு ராஜா என்று ஆரம்பிக்கப்படும் கட்டுக் கதைகளைப்போல எனது நினைப்புக் கதையில் இராஜாவோ மந்திரியோ இராணியோ யில்லை. "கொண்டது போல் கொள்கை." என்னுடைய சின்னச் சிந்தையில் அரசர்களுக்கு இடமே கிடையாது; நான் அவர்களை வெறுக்கிறேன். ஏனெனில் "நாட்டு இராஜநீதி மனிதர் நன்கு செய்யவில்லை." கதாநாயகி பாவத்தைக் காணோமே என்ற கவலையை யேன் கொடுக்க வேண்டும்? கடைசியில் என்னுடைய இராணி—இளம் மனைவியும் வருகிறாள். அவளுக்கில்லாமல் வண்ணானுக்கும் அம்பட்டனுக்கும் மாத்திரந்தானா என்னிருதயத்தில் இடமிருந்தது?

ஒவ்வொருவனுக்கும் அவனவனுடைய சொந்த ஊரின் பேரில் ஒரு பிரத்தியேகமான பிரியமுண்டே அந்த பாத்தியதையின் பேரில் நான் என்னூரை மிகைபடப் பேசுவதாகத் தப்பாக அர்த்தஞ் செய்து கொள்ளக்கூடாது. உண்மையிலேயே இப் பிரகிருதி உலகமனைத்தும் என்னூருள் அடக்கம். முதலாளி யிருக்கிறான்; தொழிலாளிகளுண்டு; விவசாயிகளுக்கும் குறைவில்லை. கூடை கூடையாய், எங்களூரில் இல்லாத பொருள்கள் இறக்குமதியாகும். வண்டி வண்டியாக ஏற்றுமதியும் நடக்கும். ஆனால் நாணயச் செலாவணி மாத்திரம் அதிகமில்லை. எல்லாம் பண்டமாற்றம். எங்களது நிலங்களில் விளையும் பருத்திக்கும் நெல்லுக்கும் இதர தானியங்களுக்கும் உப்போ, புளியோ, மிளகாயோ மாற்றிக்கொள்ளுவது வழக்கம். முதலாளியிடம் கடன் வாங்குவதும், கடன் கொடுப்பதும், தொழிலாளிக்குக் கூலி யளப்பதுங்கூட தவசந்தான். கர்னாடகத்துப் பழக்கம் என்பீர்களா? இருந்தாலும் புதுநாடகத்திலிருக்கும் மோசம், நாசம், கம்பளி வேஷங்கள் இதிலில்லையல்லவா? அந்தமட்டோடு சிலாக்கியந்தான். கர்னாடகம் வரட்டும்! பரவட்டும்!! வாழட்டும்!!!

எங்களூர் ஆட்களுக்குக் கோர்ட்டுத் தெரியாது. பாட்டன் பூட்டன் தலைமுறையில்கூட கோர்ட்டேறிப் பழக்கமில்லை. ஏதாவது



…காரம் வந்துவிட்டால் பஞ்சாயத்து வேம்பில்* ஊர் கூடும். ஒரு …டு நிறைய வெற்றிலை பாக்கோடு வாதி வருவான். ஸ்டாம்புக்குச் …லவில்லை; பிராதெழுத வேண்டாம்; வக்கீலும் தேவையில்லை. மேலே ஆகாசவாணி, கீழே பூமாதேவி சாட்சியாக அந்தப் பட்டிக்காட்டான்களை தேவ சபையாக மதித்து வழக்கை வாயினாலேயே சொல்லுவான். பஞ்சாயத்தார்கள் வாதி பிரதிவாதி யிருதரப்புச் சாட்சிகளையும், பொதுச் சாட்சிகளையும் விசாரித்து முடிவு சொல்லுவார்கள். அநேகமாய் அவர்களது தீர்ப்பெல்லாம் சமாதானமாய்த்தானிருக்கும். சிறை தண்டனை யில்லை; அபராதம் ஆக்கினை கிடையாது. அப்பேர்ப்பட்ட பஞ்சாயத்துக்கு யாராவது கட்டுப்படாமல் மீற முடியுமா? முடியாது. ஒருவாறு மீறினால் அவனுக்கு வண்ணான் வெளுக்க மாட்டான், அம்பட்டன் சிரைக்க மாட்டான், அடுத்த வீட்டுக்காரி அடுப்புக்கு நெருப்புக்கூடத் தரமாட்டாள். இவ்வளவு பஹிஷ்கார மத்தியில் அவனுக்கு அந்தவூர் வாழ்க்கையே சாத்தியமாகாது. அதற்குத்தான் சமூக பஹிஷ்காரம், கிராம பஹிஷ்காரமென்பது.

எனது கிராமம்-பிரிய கிராமமிருக்கிறதே அது வொரு கெடியாரத்தைப்போல், ஒரு சக்கரம் இன்னொரு சக்கரத்துள்ளும் அதற்கடுத்ததிலுமாக இணைக்கப்பட்டிருக்கும் பல சக்கரங்கள் சேர்ந்து மணிகாட்டும் முட்களை எவ்வாறு இயக்குகின்றனவோ சரியாய் அவ்வாறு தான் எங்களூர் வாழ்க்கையும் இயங்குகின்றது. இங்கு தொழில் தொழிலுக்காகவே செய்யப்படுகிறது. எத் தொழிலும் ஈனமென்பதில்லை; எந்த வியாபாரமும் கேவலமாய்க் கருதப்படுகிறது கிடையாது. கடமையைக் கடமையின் காரணமாக செய்கிறார்கள். கர்மயோகத்தைக் கூறும் பகவத் கீதையோ, வியாத கீதையோ அவர்களுக்குப் பாடமில்லை. முன்னோர் செய்த தொழில் என்ற ஒரே ரீதியிலேதான் கிராமம் நடக்கின்றது.

கந்தன் அந்த ஊருக்கு வண்ணான். வண்ணானுக்குக் கல் (துணி துவைக்கும் கல்) போட்ட இடமெல்லாம் காணியாட்சி யென்பார்கள். ஆனால் கந்தனுக்கோ எங்களூர் ஆட்சி பாரம்பரையானது. அவனப்பன், அப்பனுக்கு அப்பன், பாட்டன் பாட்டனுக்குப் பாட்டன் முதல் பாத்தியதை யுண்டு. கண்மாய்க் கரையிலே வீடு கட்டிக் குடித்தனஞ் செய்கிறான் பக்கத்திலே வெள்ளாவி. அடுத்தாப்போல் துணி துவைக்கும் துறை (கட்டம்). காலையிலும் மாலையிலும் நான் அந்த வழியாய்ப் போகும் போதெல்லாம் அவன் என்னைக் கும்பிடுவது வழக்கம். அதை

* பஞ்சாயத்து வேம்பு என்பது ஒரு பெரிய வேப்ப மரம். அந்த ஊரிலேயே அதைவிடப் பெரிது வேறில்லை. ஊருக்குச் சமீபத்திலுமிருக்கிறது. அதனடியில் உயர்ந்த மேடை போட்டிருக்கும். சதா தென்றல் வீசும்.

நினைக்கும்போது அவனது தன்னடக்கம் எனக்குப் பாடமாயனிறது. நானும் 'கந்தா! சுகந்தானா?'' என்று கேட்பேன். ''உங்க கிருபையால் இருக்கிறேன்'' என்பான். அந்த அடக்கமான வண்ணானுக்கு அவனது 'வண்ணாத்தியின் மேல் பிரியம். வண்ணாத்திக்கோ கழுதையின் பேரில் பரம ஆசை.' ஏனெனில் அது அவளது பொதி (துணி மூட்டை)களைச் சுமக்கிறது; அவளுடைய அருமை மகளுக்கு ஸ்ரீதனப் பொருளாயமைகிறது; பிரிய மக்களின் வாகனமாயிருக்கிறது.

கருப்பன் இருக்கிறானே அவன்தான் எங்களூர்ப் பரிஹாரி—நாவிதன். பண்டிதன் என்ற பேரும் உண்டு. ரோமசம்ஹாரஞ் செய்வது மாத்திரந்தான் அவன் வேலையா? அந்த ஊருக்கும் அதன் சுற்றுவட்டகைக்கும் அவன் ஒரு பேர்போன டாக்டர்- நல்ல அநுபவ வைத்தியன். கை பிடித்துத் தாது சோதிப்பதிலும் ரண சிகிச்சை செய்வதிலும் அவனுக்கு அவன்தான் நிகர். பிளேக்குக் கட்டி முதல் சாதாரண சிலந்திவரை அவன் பார்வை பார்த்தால் பறந்துவிடுகிறது. அவன் மந்திரித்துக் கொடுக்கும் எண்ணெய் எல்லா இரணத்தையும் ஆற்றி விடுகிறது. அவனது ஏழு மிளகு எந்த வயிற்று வலியையும் போக்கும். அவன் கட்டுகிற வேர் காமாலையைத் தீர்க்கிறது. கண்ணுக்கும் வைத்தியம் செய்கிறான்; காதுக்கும் மருந்து பிழிகிறான், வேறென்ன வேண்டும்? எங்களூருக்குப் பிணி தீர்க்கும் பிர்மா அவன்தான். படித்துத் தேர்ந்த எல். எம். பி, களும்; எல். எம். அண்ட் எஸ். களும் அவனுக்குப் பிச்சை போடக் காணமாட்டார்கள். அவர்களெல்லாம் கூலிக்கு (காசுக்கு) மாரடிக்கின்றனர். எங்கள் கருப்பன், காசுபணத்திற்கில்லை—பட்டம் பதவிக்கல்ல—தயவுக்கும், தாக்ஷண்யத்திற்கும அன்பால், அனுதாபத்தால் வேலை செய்கிறான். அவன் மனைவியும் பிரசவ வைத்தியை.

இன்னொரு உத்தியோகமுங்கூட அவனுக்குண்டு. ஊர்ச் சமாசாரங்கள் அவனுக்குத் தெரியாதது ஒன்றுமே இராது. அந்தப்புரத்து அந்தரங்கச் செய்திகூட அவனுக்கு எப்படியோ எட்டிவிடுகிறது. அவைகளை இரகசியமாக வைத்துக்கொள்ளாமல் எல்லோரிடமும் சொல்லிவிடுகிறானே அஃதொன்றுதான் அவனிடமுள்ள ஒரேயொரு கெட்ட வழக்கம். வாய் சலிக்காமல் வந்தவர்களிடமெல்லாம் கூறுகிறான். உள்ளூர் வர்த்தமானங்களை யுரைக்க அவனைவிடப் பத்திரிகைகளுக்கு அதிகம் சக்தி யிருக்குமா? பின்னேன் பத்திராதிபர்கள் அவனை அந்தவூர் நிருபனாக நியமித்துக்கொள்ளக் கூடாது? நான் அவர்களுக்குக் கருப்பனைச் சிபார்சு செய்கிறேன். இன்றைக்கு என் பக்கத்தில் அவனிருந்தால் இவ்வாறு என்னறைக்கு வெளியில் என்னென்னவெல்லாம் நடக்கின்றனவென்பது தெரியாமல் நான் சுத்த சூன்யனாக இருப்பேனா?



மூக்கன். அவனுக்கு அது காரணப் பெயரல்ல. உண்மையிலேயே பார்த்தால் அவனுக்கு மூக்குக் கொஞ்சம் சப்பை. தாய்க்கு மூன்றாவது மகனாதலால் அவனுக்கு மூக்குக் குத்தி மூக்கன் என்று பெயருமிட்டனர். எனக்கு இந்த எண்ணங்கள் எழுந்தபோது அவனுக்கு வயது சுமார் 50 ஆகியிருக்கலாம். ஆகையால் வெறும் மூக்கனென்றழைக்காமல் மூக்க பண்டாரம் என்றழைப்பதுதான் மரியாதை. மேலும் கிராமப் பூசாரி. கிராம தேவதைகளுக்கெல்லாம் அவன் பூசை செய்யாவிட்டால் பிடிக்காது. ஒரு சமயம் ஊர் விளையாமல் பஞ்சமாய்ப் போய்விட்டபோது மூக்க பண்டாரம் பஞ்சம் பிழைக்க பர்மாவுக்குப் போயிருந்தான். வேறு யாரோ ஒருவன் கோயில்களுக்குப் பொங்கல் வைத்து மணியாட்டினான். அப்பொழுது ஊரில் ஒருவிதமான கருங் காய்ச்சல் பரவி யிருந்தது. ஐந்தாறு பேர் இறந்தும் போனார்கள். உடனே ஊர் கூடி, வரி வசூலித்து சந்தி மறித்துப் பொங்கல் வைக்கிறது என்று பேசிக்கொண்டிருக்கையில் அந்த ஊர் மணியகாரனுக்கு மாரியாத்தாள் வந்து ஆட ஆரம்பித்தாள். ''என் ஆசான் எனக்குப் பூச் சூட்டாமல், இன்னொருத்தன் சூட்டுகிறதா? பார், இந்த வூரை என்ன பாடு படுத்துகிறேன்?'' என்று கூறினாள். அப்புறம் எல்லோரும் காலிலே கையிலே விழுந்து ஒரு மாதத் தவணை வாங்கினார்கள். ''சரி அப்படியானால் காத்து உத்தரவாதம் பண்ணுகிறேன்'' என்று வலக்கை போட்டு விட்டு மாரித்தாய் மலையேறிவிட்டாள். உடனே ஊரார் தந்தி கொடுத்து மூக்க பண்டாரத்தை வரவழைத்தார்கள். ஆத்தாளின் அருளோ அல்லது மூக்க பண்டாரத்தின் அதிருஷ்டந்தானோ அவன் வந்து பூசை வைத்ததும் காய்ச்சலும் நின்றது. அதிலிருந்து அவனுக்கு அந்த வூரில் கொஞ்சம் மரியாதை. உடுக்கடிக்கும் உத்தியோகமும் உண்டு. பட்டை பட்டையாக விபூதி பூசி, கழுத்து நிறைய உருத்திராக்கமாலை போட்டு, பக்கத்திலே எருக்கஞ் சாட்டையையும் எடுத்து வைத்து, வெண்கல உடுக்கை முழக்கும்போது அவன் முகத்தில் ஒருவிதமான ருத்திரகளை தோன்றும். அவன் எதிரில் ஆடாத பேய்களெல்லாம் ஆடுகின்றன. பேய் பிசாசுகளில் நம்பிக்கையற்ற எனக்குங்கூட அவனது உடுக்கில் பிரியமுண்டு. அவ்வளவு அழகாக—உருக்கமாக—இனிமையான சாரீரத்தில் சாமி வருந்துகிறான். அந்த நினைப்பு இப்பொழுது எனக்கேன் வந்ததென்றால், ''செவிக்குணவில்லாத போழ்து சிறிது வயிற்றுக்கு மீயப்படும்'' என்று தமிழ் வேதம் சொன்ன சொல் போன்று சிறையதிகாரிகள், சிறைச் சேவகர்களின் கர்ண கடோமான அதிகார தொனிகளல்லாமல் வேறு இனிமையான வசனங்களை என் காதுகள் கேட்டு வெகு காலமாகிவிட்டதல்லவா?

முனியன்தான் எங்களூர்த் தலையாரி. மாதம் ஒன்றுக்கு மூன்று ரூபாய் சம்பளம் வாங்குகிறான். கிராமப் போலீஸ்காரன். கிராம ஜனங்களிடை சண்டை சத்தமில்லாமல் அமைதியை நிலவச் செய்ய வேண்டியது அவனது உத்தியோகம். கையில் எந்த நேரமும் கம்பு (லத்தி) இருக்கும். உளவு விசாரிக்கும் வேலை (C.I.D.)யும் உண்டு. ஆனால் அவைகளெல்லாம் அவனுக்குத் தெரியாது. கிராம மாஜிஸ்ட்ரேட்டாகவும், கிராம முன்சீப்பாகவுமிருக்கிற மணியகாரருக்கும் வரி வசூலிக்கிற கிராமக் கலெக்டராகிய கர்ணத்துக்கும் உழைத்துச் சாகிறான். அவர்களது வீட்டு வேலையோ அல்லது சர்க்கார் வேலையோ எதையாவது அவர்கள் சொல்லுகிறபடி கேட்டு நடக்கிறதுதான் தனது உத்தியோகம் என்று அவன் எண்ணிக் கொண்டிருக்கின்றான். இதில் இரு சாராரும் குற்றவாளிகள். சர்க்கார் சம்பளத்தில் வேலை பார்க்கிறவனை சொந்த வேலையில் ஏவியது மணியகாரன்—கர்ணம் செய்த குற்றம். அதேமாதிரி அரசாங்க சம்பந்தமல்லாத அலுவலைச் செய்தது தலையாரியின் குற்றம். என்றாலும் முனியன் ஊருக்கு நல்லவன். இரவெல்லாம் கால் தேய ரோந்து சுற்றி ஊரைக் காக்கிறான். சுட்ட நண்டுகூட அவன் கட்டுக் காவலைக் கடக்க முடியாது. பயிர் பச்சைகளை ஆடு மாடுகள் தின்று அழித்துவிடாமலும் பார்த்துவருகிறான். அதற்காக ஊர் ஜனங்கள் அறுவடை காலத்தில் களத்திற்கிவ்வளவென்று கொடுக்கின்றனர். உண்மையில் அந்த வரும்படியிலேதான் அவனது பெண்டு பிள்ளைகள் பிழைக்கின்றனர். இல்லாவிடில் சர்க்கார் சம்பளம் 3 ரூபாய் போதுமா?

இவ்வாறாக நான் எல்லோரையும் நினைத்துக்கொண்டிருக்கையில் எனது இராணியின் ஞாபகமும் வந்தது. இச் சந்தர்ப்பத்தில் உங்களை (வாசகர்களை) ஒன்று கேட்டுக்கொள்ளுகிறேன். "இவனென்ன ஊருக்கெல்லாம் இராணியா?" என்று என் மனஞ் சுடச் சொல்லிவிடவேண்டாம். என் மனைவி எனக்கு இராணிதான்; நான் அவளுக்கு இராஜாதான். அவளது இராணி வாச மஹாலில் இன்னேரமெல்லாம் இருக்க வேண்டிய நான் சிறைவாசக் கொட்டடியில் ஏகாந்தமாய்ச் சிந்தை புழுங்கிக் கிடப்பதை நினைத்து ஒரு தரம் தேம்பினேன். அவ்வளவுதான்! அந்த இன்பக் கனவிலேயே அயர்ந்து தூங்கிவிட்டேன்.

மறுநாட் காலை கதவு திறக்கப்பட்டது. "ஹா! என் கண்ணே!" என்று கண்ணை விழித்தேன். கண்ணில்லை; புண்போன்று காவலன் (வார்டர்) கண்ணிற் பட்டான்.

பகல் பதினொரு மணியடித்தும்கூட காதலி என் கருத்தை விட்டகலவில்லை. படிப்பதிலும் மனம் பாயவில்லை. பழைய பண்



டார நினைப்பு, வண்ணான் சிந்தை, அம்பட்ட எண்ணங்களுக்கும் இனி என் நெஞ்சில் இடமேது? எல்லாவற்றையும் அவள் ஒருத்தியே பிடித்துக்கொண்டாள்; அவள் ஒருத்திக்கே என் இருதயத்தையெல்லாம் கொடுத்துவிட்டேன்.

வார்டர் ஒரு நம்பரைக் கத்திக்கொண்டு வந்தான். அவன் பேரில் எனக்கொரு எரிச்சல் பிறந்தது. "கழுதைபோலேன் கத்துகிறாய்?" என்று சொல்ல வாயெடுத்தேன். அதற்குள் அவன் என் நம்பரையே கூறினான். "என்னாப்பா" என்று கேட்டேன். "சூப்பிரண்டு தொரை கூப்பிட்றாங்க" என்று அவ்வளவு இலக்கணச் சுத்தமாய்ச் சொன்னான். "கால் விலங்கோ, கை விலங்கோ, இருட்டறையோ இன்றைக்குப் பரிசு" என்றெண்ணிக்கொண்டே போய்ச் சேர்ந்தேன்.

"ராதையென்பது யார்?" என்றார் ஜெயிலர்.

"ஏன்? என் இராணி" என்றேன்.

"இராணியா?" என வினவினார் அக் கொழுத்த அதிகாரி.

"ஆம். என் காதற் கனி" என அவசரமாய்ச் சொன்னேன்.

"சரி. அவள் உன்னைக் காண வந்திருக்கிறாள். கால் மணிக்குள் கண்டு பேசி வா" என்று உத்திரவிட்டார்.

அந்த ஜெயிலர் என் மனைவியை "அவள்" என்றதைக் கேட்க என் மனது கொதித்துவிட்டது; கோபம் சொல்லிடப்படாது. அப்படியே அடித்துக் கொன்றுவிடலாமா என்றுகூட எண்ணினேன். ஆனால் "காண வந்திருக்கிறாள்......கண்டு பேசி வா" என்ற வார்த்தைகள் என் கோபத்தைத் தணித்துவிட்டன. ஜெயிலரை வாழ்த்திக்கொண்டே சென்றேன். இடையில் என்னென்னவெல்லாமோ எண்ணினதுண்டு; ஞாபகமில்லை. முகத்தைத் துடைத்துக்கொண்டேன். சட்டையின் சுருங்கலை நேராக்கினேன். கண்ணைக் கசக்கிப் பார்வையைச் சரிப்படுத்தினேன். ஒரு சன்னக் கனைப்புக் கனைத்து சாரீரத்தைச் சரி செய்தேன். இன்னும் என்னென்னவோ செய்தேன். இவைகளையெல்லாம் பார்த்தால் நான் இராஜ சன்னிதானத்திற்குப் போவதுபோலத் தோன்றும். கால்கள் கட்டுக்கடங்காமல் வேகமாகச் சென்றன; ஓட்டமெடுக்கக்கூட ஆரம்பித்தன. என்னை நடத்திச் சென்ற வார்டரை நோக்கினேன். கேலிக் குறி அவன் முகத்தில் காணப்படவில்லை. "சீ! என்ன பைத்தியம்? இன்று நீரை வெள்ளமா கொண்டுபோகும்?" என்று எனக்கு நான்தானே தேறுதல் சொல்லிக்கொண்டு சிறிது வேகத்தைத் தணித்தேன்.

ஒரு அறை. அதன் ஒரு பக்கத்தில் துவாரமொன்றிருந்தது. என்னையறியாமலே அதற்குள் கவனம் பாய்ந்தது. "ஹா! என்ன ஆச்சர்யம். இரண்டே யிரண்டு கண்கள் துருவ நட்சத்திரம் போல் பிரகாசித்தன. அவற்றின் ஜோதி—தெய்வீக ஜோதி என்னைக் காந்தம்போல் இழுத்தன. அவைகள் நிச்சயமாகவே எனது ராதாவின் காதற் கண்கள்தான். அன்று அப் பூங்காவிடை—எங்களூர் நந்தவனத்தின் மத்தியிலே மகிழ மரத்தடியிலே முதன் முதற் கண்ட அதே கண்கள்! அதே பார்வை! "ராதா! ராதா!!—என் பிரிய ராதா!!!" என்றலறினேன். அவ்வளவுதான் என்னால் சொல்ல முடிந்தது. அப்புறம் என் கண்களில் நீர் மலங்கிப் பார்வையை மறைத்துவிட்டது. ராதையின் கண்களும் முத்துகிர்த்தன. அடுத்த நிமிடம் ஒரே அந்தகாரம்! சந்தி முடிந்துவிட்டது. வார்டர் என்னை இழுத்துக்கொண்டு போய்விட்டான்.

இவ்வாறு என் ஆசையைப் பறித்த—காதலைத் தடுத்த அந்தக் காவலனை எட்டியுதைக்கக் காலெடுத்தேன். மூன்று மாதங்களுக்குப்பின் சில நிமிஷங்கள் பந்து மித்திரர்களின் முகத்தில் விழிப்பதற்காகக் கைதிகளுக் களிக்கப்பட்டிருக்கும் உரிமையிலும் மண் போட்ட பாவிகளைக் கொன்று குவிக்க எண்ணினேன். ஆனால் என் கையைத் தவிர—கைகளின் நகங்களைத் தவிர வேறு ஆயுதம் என்னிடமில்லை, என் செய்வேன், விதி, விதி, விதியிது வெனத் தலையி லடித்துக்கொண்டு போய்த்தொலைந்தேன்.

---

# தேச ஊழியம்.

பண்டித. திரு. இராம சுப்பிரமணிய நாவலர் அவர்கள்.

தேச ஊழியமாவது தேசத் தொண்டு. ஒருவன் தான் பிறந்த அல்லது தனக்குச் சொந்தமான நாட்டுக்கு ஊழியஞ் செய்தல் அவனுடைய இன்றியமையாத கடப்பாடாகும். ஒருவனுடைய பிறப்பகம் அவனுக்குத் தன் வீட்டைப் போலவே பாதுகாக்கத் தக்கது. அந் நாட்டின் நன்மை தீமைகள் அவனைத் தாக்க வல்லன. ஒரு நாடு பிறர் வயப்பட்டுத் தத்தளிக்க நேருமாயின், அந் நாட்டு மக்கள் அடிமைக் குழியில் வீழ்ந்து



சிறைத் துயர் எய்தி அலமருவர். தம் நாட்டைப் பேணாது தமக்குரிய பிற நலங்களைப் பேணுவார் அந் நலங்களுக்காகப் பிறரை எதிர்பார்க்க வேண்டும். அன்றியும், தாம் எய்திய நன்மைகளும் எப்பொழுதும் தம்முடையனவா யிருக்குமென்று நம்புவதற்கு இடமில்லை. தம் நாட்டை ஆளும் பிறருடைய மனப்பாங்கிற் கேற்ப அந் நன்மைகளும் மாறுதலடையும். அந் நலங்கள் எப்பொழுதுமே பிறருடையவைப்பொருளா யிருந்து விடும். இன்னோரன்ன காரணங்களால் எந் நலத்தைப் பேணவிடினும் ஒவ்வொருவருந் தாம்தாம் பிறந்த நாட்டை உயர் நிலைக்குக் கொண்டு வருவதற்கு முயற்சித்தல் வேண்டும், இன்றேல், வெகு விரைவில் அந் நாடு பிறருடைய ஆளுகையின் கீழ் வேர் கொண்டு தமக்கு யாதொரு பயனையும் செய்தற் குரித்தல்லாத தாகி விடும். ஒவ்வொருவருடைய மனமும் தம் தம் நாட்டின் உயர் தகவைப் பொறுத்திருக்கின்றது. தம் நாடு பிறர் கைப்பட்டு அலமந்து தட்டுமுட்டாடுங் காலைத் தாம் மிகு மேன்மையான செல்வத்தையேனும் கல்வியையேனும் எய்தியிருத்தக்காலும், அவற்றால் எய்தி வரும் சிறப்புச் சிறப்பன்று; அதனால் வருமாண்பு மாண்புமன்று. பிறர்க்கு அடிமைப்பட்டுக்கிடந் துழலுவோர் மானமுடையாராக எங்கேனும் எவராலேனும் கருதப்படுவரோ? ஒவ்வொருவருடைய கல்வி, அறிவு, ஒழுக்கம் என்னும் இவற்றால் வரும் மேன்மைக ளெல்லாம் அவரவருடைய பிறப்பகத்தின் மேன்மையைப் பொறுத்திருக்கிறது. பிறப்பகம் பிறர் காற்கீழ் நையுண்டு கிடக்குமளவும் அவர் தமக்கு யாதொரு செல்வாக்கும் தகவுடைமையும் ஏற்படா.

நம் பாரத நாடு சில்லாண்டுகளாய்ப் பிறருடைய வயப்பட்டுச் சீர்கெடுகின்றது. நம் நாட்டுப் பொருளாதார நிலைமை பிறரால் சீரழிந்து நாட்டுக்குள் வறுமைப் பிணி பரவுகின்றது. ஏழை மக்கள் சொல்லி முடியாத் துயரெய்துகின்றார்கள். ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு நீதியும் நெறியும் ஏற்படுத்தப்பட் டிருக்கின்றன. பாரத மக்களுடைய தன் மதிப்பு புறக்கணிக்கப்படுகின்றது. பிற நாட்டார் நமது நாட்டில் நமக்குள்ள உரிமையைவிட மிக்க உரிமை பூண்டு நம் நாட்டை அடிமைப்படுத்தி ஆளுகின்றனர். நம்முடைய கல்வித் துறையை வளம்படுத்தக்கூடப் பிறருடைய மனநலத்தையும் வாய் நலத்தையும் முக நலத்தையும் எதிர்பார்க்க வேண்டி யிருக்கிறது. நம்மால் கண்டுபிடிக்கப்படும் பொறிகள் (இயந்திரங்கள்) நாட்டில் நிலவ வேண்டுமாயின், பிறருடைய கட்டளை அகத்தியமாகின்றது. பொதுத் துறைகளிலும் நம்முடைய மேன்மை விட்டுக்கொடுக்கப் படுவதில்லை. இது நம் வீட்டினுள் பிறரை நுழையவிட்டுத் திறவுகோலையும் அவர் கைக்கொடுத்துப் பின்னர் அவர்கள் கீழ்ப்படிந்து நாம் அதிற் றங்க அவர் சனைக் கால் பிடித்தல் போலும்! என்னே உலகப் போக்கு.!!

நமது பாரத நாடு தற்போது எந் நிலைமையில் இருக்கின்றது? நம் நாட்டின் சீரும் சிறப்பும் எவ்விடத்துச் சென்றன? வறுமை என்பது சிறிதுந் தலைகாட்டாது, செழுமையும் கொழுமையும் வாய்ந்து பொலிந்த நம் நாடு இக்கால் முப்பத்தி முக்கோடி மக்களும் வறுமையுமாய்க் கிடந்து அல்லற்படுவதை நினைக்க உள்ளம் உருகுகின்றதே! பெண் மக்கள் தம் குழந்தைகளுடன் சாண் வயிற்றுக்கும் உணவின்றிப் பிணமெனக் கிடந்து உழலுவதை யாரேனும் கருதுகின்றனரோ? பாரத மக்களுடைய கல்வி நலன் வறுமையால் அழுத்தப்பட்டுச் சாம்புற்று மடிகின்றதே! 'செல்வ வள நாடு' என்று சிலர் நமது பாரத நாட்டைப் புனைந்து உரைக்கக் கூடும். அது அதன் முன்னைய நிலைமையைக் கருதியன்றி வேறில்லை. தற்போதைய நிலை உண்மையில் வருந்தத் தக்கதேயாம். சிலர் செல்வவந்தரா யிருப்பக் காண்கிறோம். ஏழைகளுடைய வயிற்றை வெற்றெனச் செய்து ஈட்டி வைத்த பொருட் குவியலை யுடைய சில செல்வவந்தருளர். அவர் தம் செல்வக் குவையால் பாரத நாடு வறுமை நீங்கிற்றாகாது. அவர்களுடைய செல்வ முழுதையும் ஏழைகள் யாவருக்கும் பங்கிட்டு அளிப்பின் பாரத நாட்டில் ஒவ்வொருவரும் வறியராகா திருக்கக் காணலாம். ஆதலால் சிற்சிலர்மட்டும் செல்வமுடையராக விருப்பதால் யாதோ பயன்? ஒவ்வொருவரும் நாட்டில் உடுக்க உடையும், உண்ண உணவும் பெற்று மகிழ்ச்சியொடு வாழ்தல் வேண்டும். அதற்குரிய சீரிய நெறியை நேரிய முறையில் ஆற்ற வேண்டும். இல்லாவிடில், நம் நாட்டுக்கு உய்வு பிறக்கப்போவதில்லை. இல்லை—ஒருபோதும் இல்லை.

நாடு செல்வமுற்றுப் பல்வளமும் செறிந்து இலங்க வேண்டுமாயின், நாட்டுக் கைத்தொழில்கள் விருத்தி அடைதல் வேண்டும்; நாட்டுக் கல்வி செழித்தல் வேண்டும்; சுய நாட்டுக் கல்வியாளார்க்குத் தகுந்த உத்தியோகம் வாய்த்தல் வேண்டும்; பிற நாட்டுச் சரக்குகள் புறக்கணிக்கப்படல் வேண்டும்; நம் நாட்டுச் சரக்குகள் நம் யாவரிடத்தும் பயிலல் வேண்டும்; பிற நாட்டு மொழி மயக்கமும் அது கற்றோர்க்கே மதிப்புள தென்னும் பிராந்தியும் அகலல் வேண்டும். இன்னோரன்ன பிறவும் ஆய்ந்தாய்ந்து கண்டு கடைப்பிடித்தல் அகத்தியமாகின்றது. அவைகள் ஒருங்கு கடைப்பிடிக்கப்படல் வேண்டுமாயின், நாட்டானிடை ஒற்றுமை உறுதிப்படல் வேண்டும். ஒற்றுமையின்றி சிலர் சிலவிடத்து மட்டும் தேசத் தொண்டு செய்வது மலை கெல்லுதலையே ஒக்கும். ஒற்றுமை இல்லாத நாடு எவ் வகையாலும் சீர்பெற்று மேன்மை யெய்துதல் இயலாது.

நம் நாடு பல்வேறு சாதியாரைக்கொண்டு திகழ்வது. அப் பல்வேறு சாதியாரிடையும் பல் மணிகளிடைச் செல்லும் ஒரு நூல் போன்ற ஒற்றுமை நூல் ஊடுருவிச் செல்லல் வேண்டும். வேண்டுமாயின் ஒவ்வொரு சாதியார்க்கும் தற்போது இருக்கும் குறைகள் முற்ற



வும் அகலல் வேண்டும். ஒரு ஜாதியாரைப் பிறவொரு சாதியார் அழுத்தி இழித்துவரும் பழிச்செயல் முற்றும் நீங்கும்வரை, நாட்டில் ஒரு சிறிதேனும் ஒற்றுமையைக் காண்டல் முடியாத தொன்று. பல ஜாதியார்க்கும் உரிய உரிமைகளை அளியாது நம் நாட்டினிடை ஒற்றுமையை நிலவச் செய்யப் பல தலைவர்களும் முயற்சித்ததன் பயனாக என்ன விளைந்தது? ஆங்காங்கே பெருஞ் சண்டை சச்சரவுகள் தலைகாட்டி, இறுதியில் பெரும் போரும் பூசலுமாய்க் கொலையே நாடகமாயிற்று. இதுகாறும் எத்துணை இந்துக்கள் மாண்டனர்? எத்துணை முஸ்லீம்கள் மாய்ந்தனர்? காரணமேன்? முஸ்லீம்கட்கு இந்துக்கள் விட்டுக் கொடாமையும் இந்துக்கட்கு முஸ்லீம்கள் விட்டுக் கொடாமையுமே யன்றோ? இன்னும் இவ்வாறு எண்ணிலடங்கா வகுப்பாளர் உள்கறுவு கொண்டு வாழ்வதை ஆய்ந்தறியின், வகுப்புப் பூசல் ஒன்றே நம் நாட்டின் உரிமைக்குப் பெருந் தடைக் கல்லாய்க் கிடக்கின்றது என்பதை யாரே ஒப்பார்? இவ் வகுப்புப் பூசல் ஒழியுங்காலும், பாரத நாடு பரிபூரண சுயராஜ்யம் பெறுமென்று நினைக்க வேண்டுவதில்லை. நினைப்பின், அது பகற் கனவோ, ஆகாயக் கோட்டையோ, அன்றி அவை போன்ற பிறிது எதுவோ ஆமே யன்றிப் பயன் சிறிது மில்லாதாகிவிடும். ஒன்றில் சாதி முழுதும் நாட்டினிடை இல்லா தொழிதல் வேண்டும்; அன்றேல், எவ்வாற்றானும் வகுப்பு வேற்றுமை அறுதல் வேண்டும். வகுப்பு வேற்றுமை உண்மையாய் அற்று விடுமாயின், அது வகுப்பில்லா தொழிந்ததற் கொப்பேயாகும் என்பதற்கு ஐயமில்லை. அக் காலத்திற்றான் நமது நாட்டுக்கு உரிமை உண்டாம். அதுகாறும் நாம் ஆற்றும் தொண்டு விழலுக்கு இறைத்த நீரே.

ஆதலால், அன்பர்களே! நமது சகோதரர்களாகிய பிற வகுப்பாரையும் எல்லா உரிமையாலும் பொலிவு பெறச் செய்து நாட்டுக்கு உரிமையளிக்க முயலுங்கள். பாரதத் தாயின் வயிற்றிடைப் பிறந்த முப்பத்து முக்கோடியரும் ஒரு வகுப்பினரே; ஒரு தன்மையரே. அவளுடைய உரிமை அனைவருக்கும் உரிமையே; அவள் படும் அல்லலும் யாவர்க்கும் அல்லலே. எனவே, ஒரு தாய் வயிற்றிற் பிறந்த நமக்குள் வேற்றுமை தலைகாட்டுவதேன்? இந்திய நாடு ஒரு வகுப்பாருடைய முயற்சியில் மட்டும் உய்வு பெறாது. அது பலருடைய வாழ்க்கை நிலையம். அவர்கள் அனைவரும் ஒத்துழைத்தா லல்லாது எத்தகையாலும் சுயராஜ்யம் பெறல் இயலாது. நாம் நமது உரிமையைப் பேணுங்கால் நமக்கு இன்றியமையாத சுயராஜ்யம் வலிதில் வரும். நம்மிடைப் பூசல் விளைத்து நாடகம் காண்பது பிறருடைய பேரா நகைக்குக் காரணமாவதுடன் நமது மாண்பையும் அடியறக் களைந்துவிடும். ஒற்றுமையை நாடுமின்; நாட்டைச் சிறை மீட்டுமின்; சுயநலத்தை ஒட்டுமின்; நும் ஆண்மையைக் காட்டுமின்; சுதந்திரத்தை நாட்டுமின்.

# இந்தியாவும் பாரசீக தேசமும்.

திரு. வே. ஸ்ரீநிவாஸய்யங்கார் அவர்கள், எம். ஏ.

மிக்கப் புராதன காலத்திலன்றி எக்காலத்திலும் நம் தேசத்தில் பாரசீகர் ராஜ்யம் கொண்டவரல்லர். ஆனாலும் வெகு காலமாக நம்முடைய தேசதிற்கும் பாரசீகத்திற்கும் போக்குவரத்து உண்டு என்பதற்குச் சிறிதும் ஐயமில்லை. மகா அலெக்சாந்தர் காலத்திற்கு முன்பே பாரசீகர் இத்தேசத்தின்மீது படையெடுத்து பாஞ்சால தேசத்தைக் கைக்கொண்டனர். சுமார் 170 வருஷம் பாஞ்சாலம் அவர்க ளாதிக்கத்திற் குட்பட்டிருந்தது. பிறகு கிரேக்க ராஜ்யத்துடன் ஐக்கியமாகி அதன் பிறகும் பாடலிபுரத்தில் மௌரிய அரசாட்சியிலும் பாரசீக அம்சங்கள் சில இருந்தன. பின்பும் பல நூற்றாண்டுகளாக மேல்நாட்டாருடன் நாம் வைத்திருந்த வியாபாரப் போக்குவரத்து சாதகங்கள் பாரசீக தேசத்து மார்க்கமே யிருந்தமையால் அத் தேசத்தில் மேன்மை மிகவும் நிலவியது. அத் தேசத்தவரும் இந்த தேசத் தலைவர்களை மிக ஊக்கத்துடன் கவனித்து வந்திருக்கிறார்க ளென்றும் தெரியவருகிறது. மொகலாயர் அரசாட்சி வந்தவுடன் வியாபார நிமித்தமுள்ள நட்பு மாறி மொகலாயரின் ராஜ்யப் பேராசையினால் இரு தேசத்தினருக்கும் சிறிது மனஸ்தாப மேற்பட்டது. நாதிர் ஷா வென்னும் ஒரு பாரசீக வீரர்தான் அந்த மொகலாய சாம்ராஜ்யத்தை சிதைவுறச் செய்தார். பிறகு சென்ற நூற்றாண்டில் நெப்போலியனின் தீவிர எண்ணங்களை முன்னிட்டு, நமது வடமேற்கு எல்லைக்கப்பால் உள்ள தேசங்களுடன் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் நட்புக் கொண்டாட வேண்டியிருந்தது. இப்பொழுதும் அந் நட்பு நீடித்திருக்கிறது.

இந்த ராஜீய விஷயங்கள் தவிர்த்து மற்ற துறைகளிலும் பாரசீகரின் செல்வாக்கை காணலாகும். அவர்களுடைய சிந்து நதி மாகாணம் கி. மு. மூன்றாவது நூற்றாண்டிலேயே மறைந்துவிட்டதானாலும் மௌரிய சமஸ்தானத்திலும் பௌத்த சிற்ப வித்தையிலும் குஷண நாணயங்களிலும் அவர்களின் நாகரீகம் நிலைத்திருந்தது. மத்திய காலங்களில் பாரசீக இலக்கியங்கள் யவனபுரி முதலிய சமஸ்தானங்களில் பரிபாலிக்கப்பட்டன. மொகலாயர் காலத்தில் உன்னதமடைந்த சிற்ப வித்தைகளும், அக்பரின் மதக் கோட்பாடுகளும், பாரசீக நாகரீகத்தை யொட்டியே யிருந்தன. பாரசீக பாஷையும் இந்தியாவில் மேன்மை யடைந்திருந்தது; ஹிந்தியுடன் கலந்து உருது பாஷையும் மூலாதார மாயிற்று. தோதர் மாலின் ஆக்ஞைப்படி ஹிந்துக்கள் பாரசீக பாஷையைக் கற்றார்கள். ஷாஜஹானின் புதல்வனான தாரா என்ற இளைஞன் முகமதியனானாலும் உபநிஷதங்களை அந்த பாஷையிலேயே மொழிபெயர்த்தான். தவிரவும் மொகலாய சமஸ்தானத்தில் அனேக பாரசீகர் பெருஞ் செல்வந்தராய் வாழ்ந்தனர். உதாரணமாக மீர் ஜம்லா, அலி மர்த்தன் கான் முதலியோரைச் சொல்லலாம். அரசி நூர்ஜஹானும் ஒரு பாரசீகரின் குமாரியேயாவள்.

பாரசீக விஷயமாய் எப்பொழுதும் ஒருவித மேன்மையே யுலாவி யிருந்திருக்கிறது. 18-ம் நூற்றாண்டில் இங்கிலீஷ்காரர் பிரதானமாய் விளங்கிய காலத்தும் மேற்குப் பிரதேசத்தில் ஒரு மாப்பிள்ளைத் தலைவனும், தக்காணத்தில் திப்புவும், அஸ்ஸாம் தேசத் தரசரும், பின்பு பாஞ்சால சிங்கமாகிய ரஞ்ஜித சிங்கும் தங்கள் நாணயங்களில் பெயர், தேதி முதலிய விருத்தாந்தங்களைப் பாரசீக பாஷையிலேயே செதுக்கினர்.

எல்லாம் நோக்குங்கால், நம்முடைய சரித்திரத்திலோ அல்லது நாகரீகத்திலோ பாரசீக அம்சம் ஊடுருவிச் சென்றிருக்கிறது. பம்பாய் ராஜதானியின் பிரபல வாசிகளான பார்ஸி ஜாதியினரும் பாரசீகத்திலிருந்து இத் தேசத்திற்கு வந்தவர்களேயாம்.

இப்பொழுது பாரசீக தேசத்துடன் இந்தியாவானது சென்ற 2,400 வருஷங்களாக வைத்துக்கொண்டிருந்த சம்பந்த விஷயங்களை விவரமாகக் கவனிப்போம்.

கி. மு. 558–530-ல் பாரசீகத்தி லாண்ட கைரஸ் என்ற பெரிய வீரனின் தீரச் செயல்கள்தான் முதன் முதலில் பாரசீகரை இந்தியாவின்பால் கொண்டுவந்தது. தற்போது ஆப்கானிஸ்தானம் எனப்படும் தேசம் முழுவதும் அவன் ஆதிக்கத்திலிருந்தது. இன்னும் கிழக்கே சிந்து நதிப் பக்கத்திலும் அவ் வீரன் வந்ததாகச் சொல்லப்படுகிறது.

அதன் பிறகு டரயஸ் என்பவன் (ஆட்சிகாலம்: 521-485 கி. மு.) பாஞ்சால தேசத்தில் சிந்து நதிப் பிரதேசத்தைக் கைப்பற்றினான். இப்பொழுது தரிசாய்க் கிடக்கும் பிரதேசங்கள் அக்காலத்தில் மிகவும் செழிப்பாயிருந்தமையால், டரயஸ் காலத்தில் பாரசீகரின் இந்திய மாகாணத்திலிருந்து பத்து லக்ஷம் பொன் சுங்கம் வசூலிக்கப்பட்டது. டரயஸுக்குப் பிற்பாடு பாரசீக சேனைகளில் அனேக இந்தியர் இருந்தனர். கி. மு. 479-ல் அவர்கள் கிரேக்க தேசத்தைப் படையெடுக்கும்பொழுது அனேக இந்தியர் பாரசீக சேனையைப் பின் தொடர்ந்ததாகவும் தெரியவருகிறது.

அலெக்சாந்தர் பாரசீகரை ஜெயித்து இதர ராஜ்யங்களுடன் சிந்து மாகாணத்தையும் கைப்பற்றினான். அவனுக்குப் பின் வந்த கவர்னர்களில் ஒருவனான செல்யூகஸ் என்பான் மகதாதிபதியான சந்திரகுப்தனால் தோற்கடிக்கப்பட்டு ஒரு உடன்படிக்கைப்படி பாடலிபுரத்தில் மகஸ்தனீஸ் என்ற தூதனை நியமிக்கவும் ஒப்புக்கொண்டான். அத் தூதன் மகத ராஜ்யத்தில் தான் கண்டவற்றைப் பற்றி ஒரு வரலாற்றைத் தயாரித்தான். இந்தக் கிரந்தத்திலிருந்தும் அக்காலத்தில் சமஸ்தானத்தில் அமைச்சனாயிருந்த சாணக்கியன் இயற்றிய அர்த்த சாஸ்திரத்திலிருந்தும் கீழ்கண்ட பாரசீக வழக்கங்கள் மகத ராஜ்யத்தில் அனுசரிக்கப்பட்டன என்று தெரியவருகிறது.

1. அர்த்த சாஸ்திரத்தில், அரசன் தன் வைத்தியரைக் கண்டு கலந்து பேசும் அறையில் ஒரு கலயத்தில் அக்கினி வைக்கப்படவேண்டியதைக் குறிக்கப்பட்டிருக்கிறது. 2. அரசரின் ஸ்நான விழா (ஜலக்கிரீடை) வென்று, சமஸ்தானத்தில் ஒரு தமாஷா நடைபெற்றிருக்கிறது. 3. குற்றவாளியின் தலைமயிரை வெட்டிவிடல் முதலிய வழக்கங்களும் பின்பற்றப்பட்டிருக்கின்றன. இவையெல்லாம் பாரசீக தேசத்தாரால் கையாளப்பட்ட ஒழுக்கங்கள்.

மேலும், காலஞ்சென்ற டாக்டர் ஸ்பூளர் மௌரியகாலத் தாண்மனை யொன்றை பூமியினின்றும் வெட்டிக் காட்டியிருக்கிறார். அவைகளின் தோற்றமெல்லாம் பாரசீக மாளிகைகளை யொட்டியே இருந்தனவாம்.

டரயஸ் தன்னுடைய வீரப்பிரதாபங்களைப் பெரிய கற்பாறைகளில் செதுக்கியிருந்தான். அதேமாதிரி புத்த சக்ரவர்த்தியான அசோகரும் தன் சாஸனங்களைக் கற்றூண்களிலும் பாறைகளிலும் செதுக்கியிருந்தார்.

இம்மாதிரி பற்பல துறைகளிலும் மௌரிய காலத்தில் பாரசீக அம்சங்கள் இருந்திருக்கின்றதாகத் தெரிகின்றது.



அவர்கள் காலத்திற்குப் பிற்பாடு பாரசீக தேசத்தில் அனேக வமிச மாறுபாடுகளேற்பட்டு சசானிய ராஜ்யம் ஏற்பட்டது. அக்காலத்தில் ரோமாபுரி க்ஷீணிக்கத் தொடங்கியதால், வியாபாரமெல்லாம் கடல் மார்க்கமல்லாது பாரசீக தேச மூலமே நடந்தது. ஆனால் சசானியரின் ஆதிக்கம் கி. பி. 5-ம் நூற்றாண்டிலொழிந்தது. வடக்கேயிருந்து வெள்ளை ஹூனர் முதலிய காட்டுமிராண்டியர் படையெடுத்து சசானிய ஆட்சியை சின்னாபின்னமாக்கினர். பிரோஸ் என்ற பாரசீக அரசன் கொல்லப்பட்டான்.

ஹூன ராஜ்யம் நெடுநாள் நிலைக்கவில்லை. அவர்களைத் தொலைக்க, துருக்கியர் தோன்றினர். பிரோஸின் பேரனான அனுஷிர்வன் என்பவனின் உதவியைக்கொண்டு ஹூனரின் வன்மையைத் துருக்கியர் முறியடித்தனர்.*

ஹூனருக்குப் பின்பு சிறிது காலம்வரை வெகுவாகக் குறிப்பிடத் தக்கது ஒன்றுமில்லை. ஆனால் ஏழாம் நூற்றாண்டின் மத்தியில் மிக அற்புதமாக நிகழ்ந்த விஷய மொன்றுண்டு. தக்ஷிண தேசத்தில் சாளுக்கியருள் மிகவுஞ் சிறந்த புலகேசி என்ற அரசனின் கீர்த்திப் பிரதாபங்கள் பாரசீகத்திற்கு மெட்டியது. அத்தேசத் தரசனான குஸ்ரு என்பவன் சாளுக்கிய சமஸ்தானத்திற்கு ஒரு தூதுக் கோஷ்டியை யனுப்பினான். இவ் விஷயம் ஒரு அராபியர் எழுதியிருக்கும் சரித்திரத்திலிருந்து தெரியவருகிறது. தூதரைப் புலகேசி வரவேற்ற காக்ஷி அஜாந்தா குகைகளில் ஒரு பெரிய படத்தில் வரையப்பட்டுள்ளது. இது மிக அற்புதமான விஷயமே. கி. பி. 625-ல் நிகழ்ந்தது.

15 வருஷத்தில் அராபியர் பாரசீக தேசத்தை ஜெயித்தனர். ஆனால் அவர்களும் வெகு நாள் நிலைத்திருக்கவில்லை. அராபிய ராட்சியிலும் பாரசீகர் தங்களுடைய மேன்மையினால் செல்வாக்குற்று, கவர்னர்களாகி, பிறகு எதேச்சாதிகாரமும் பெற்றார்கள். கஜினி மாமூதின் முன்னோரிலொருவனான அல்ப்டஜின் என்பவன் இப்படி பொக்காரா தேசத்தில் எதேச்சாதிகாரம் பெற்ற சாமான்ய வம்சத்தரசனொருவனுக்கு அடிமையாயிருந்தவன்.

12-ம் நூற்றாண்டில்தான் முதன் முதல் இந்தியாவிற்கு முகமதியர் வந்தனர். 1,526ல் பேபர் வரும்வரை முகமதிய ராஜ்யம் பரவிக்கொண்டேயிருந்தது. அவ்வமயம் தில்லி சுல்தான்கள் தங்

* இத்த அனுஷிர்வன் உத்திரவின்பேரில் பஞ்ச தந்திரம் என்ற கிரந்தம் அக்காலத்தில் பாரசீகத்தில் பேசப்பட்ட பஹ்லவி பாஷையில் மொழி பெயர்க்கப்பட்டதென்பதும் இங்கு குறிப்பிடலாகும்.

கள் ராஜ்யத்தில் உள்ள ஹிந்துக்களை அதம் செய்வதிலும் ராஜ்யத்தை விஸ்தரிப்பதிலுமே கவனமாய் இருந்தபடியால் அடிக்கடி மாறுபாட்டையும் பாரசீக தேசத் தலுவல்களில் தலையிடக்கூடவில்லை. ஆனாலும் ஒரே ஒரு விஷயம் மட்டும் இங்குக் குறிப்பிடலாம்.

மகா படித்த முட்டாளான முகமது டோக்ளாக் பாரசீக மாகாணமாகிய குராஸானைக் கைப்பற்ற ஒரு பெரு முயற்சி செய்தான். அது வீணாகியது. அவனால் அனுப்பப்பட்ட சேனை நசுக்கப்பட்டது.

மொகலாய வம்சத்தில் பேபர் தவிர மற்ற எல்லோருமே பாரசீகரோடு சம்பந்தம் வைத்துக்கொண்டவர்கள். இந்தியாவிலிருந்து துரத்தப்பட்ட ஹுமாயூன் பாரசீக அரசரான ஷா தமாஷ்ப்பிடம் அடைக்கலம் புகுந்து அவனுதவியால் தன் சகோதரன் வசமிருந்த காண்டஹார் (காந்தாரம்) என்ற பட்டினத்தைக் கைப்பற்றிக் கொண்டான். ஆனால் சொற்ப சீக்கிரத்தில் ஒரு பாரசீக சேனை ஹுமாயூனிடமிருந்தே அப் பட்டினத்தைப் பிடுங்கிக் கொண்டது.

பிறகு அக்பர் வட இந்தியா முழுவதும் அடக்கி யானதும் தன் தந்தை கொண்டிருந்த காந்தாரத்தையும் ஜெயிக்க ஆவல் கொண்டு முயற்சி செய்ய, அந் நகரமும் வீழ்ந்தது. அக்பர் ராஜ்யத்தில் அது ஒரு சுபாவாகவு மாக்கப்பட்டது (1595).

இச் சமயம் பாரசீகாத்தில் ஷா அப்பாஸ் என்ற ஒரு பெரிய அரசன் சிங்காதன மேறினான். இவன் தக்ஷிண இந்தியாவில் பாமினி ராஜ்யத்தின் பின் உற்பத்தியான ஐந்தல்லது ஆறு ராஜ்யங்களி லொன்றான குத்ப் ராஜ்யத்துடன் மிகவும் நட்புக்கொண்டான். குத்ப் சுல்தான்களில் சிலர் பாரசீக பாஷையில் தேர்ச்சி யடைந்திருந்தனர். பாரசீக வழக்கங்களையும் கைக்கொண் டிருந்தார்கள். அவர்களி லொருவரான அப்துல்லா என்பவன் பாரசீக ராஜ குடும்பத்துடன் விவாக சம்பந்தமும் வைத்துக்கொண்டான். ஷா அப்பாஸ்கூட இந்தியாவிற்கு அனேக தூது கோஷ்டிகளை யனுப்பினான். அவனுடைய தலைநகரான இஸ்பஹானுக்கும் இந்தியாவிலிருந்து தூதர் சென்றனர். ஆதலின் இவைகளிலிருந்து எவ்வளவு அன்னியோன்னியமாக ஷா அப்பாஸ் காலத்தில் இரண்டு தேசத்தினருமிருந் திருக்கின்றார்களென்று தெரியவரும்.

ஆனால், ஷா அப்பாஸ் மொகலாயருடன் போர் புரிய நேரிட்டது. அக்பர் கைப்பற்றிய காந்தாரத்தைத் தனக்கு கொடுக்கும்படி ஷா அப்பாஸ் ஜிஹாங்கீரை எவ்வளவோ வற்புறுத்தியும் பயன்படவில்லை. ஆதலால் 1622-ல் ஷா அப்பாஸ் காந்தாரத்தை முற்



றுகை போட நேர்ந்தது. தளகர்த்தனான (ராஜகுமாரன்) ஷாஜஹான் அங்கே செல்லாமல் தந்தைக்கு விரோதமாகக் கலகஞ் செய்யவே, மொகலாயர் காந்தாரத்தை காக்க இயலாது போயிற்று. பாரசீகர் அப் பட்டினத்தைக் கவர்ந்தனர்.

ஆனாலும் 1635-ல் அதனின் கவர்னரான அலி மர்த்தன் கான் என்பவன் மொகலாயரிடம் லஞ்சம் பெற்றுக்கொண்டு காந்தாரத்தை அவர்களிடம் ஒப்படைத்து விட்டான். பிறகு இந்த துரோகி மொகலாய ராஜ்யத்தில் ஒரு பெரிய உத்தியோகத்தையும் பெற்றுக்கொண்டான்.

ஆகவே மறுபடியும் பாரசீகர் போர்புரிய நேரிட்டது. 1648-ல் அவர்கள் காந்தாரத்தைத் தாக்கினார்கள். மூல்தானில் இருந்த அவுரங்கசீப் தாமதித்ததனால் அப் பட்டினத்தைக் காக்க இயலாமற் போயிற்று. காந்தாரம் பாரசீகர் வசமாயிற்று.

மூன்று வருஷத்திற் கப்பால் அவுரங்கசீப் அதைத் திருப்பிப் பற்ற யத்தனிக்கையில் அவனது பீரங்கிகள் உபயோகமற்றவைகளா யிருந்தமையான் மறுபடியும் தோல்வியே யுற்றான். ஷாஜஹானின் மற்றொரு குமாரனான தாரா, தான் வெற்றி பெறுவதாக மார் தட்டி புறப்பட்டுச் சென்றான். ஆனாலும் வட மேற்குப் புறத்தில் அவனால் யாதும் கைகூடவில்லை.

இவ்வாறாக மொகலாய முயற்சிகள் பயன்படவில்லை. போரில் பாரசீகரின் திறம் நன்று நிலைக்கப் பெற்றது. மொகலாயருக்கு ஆப்கானிய மணலில், 12 கோடிவரை விரயமானதுதான் மிச்சம்.

அவுரங்கசீப் தக்ஷிணத்திற்கு அனுப்பப்பட்டான். ஆங்கு கோல்கொண்டா தேசத்தில் அமைச்சனாயிருந்த மீர் ஜம்லா என்ற பாரசீக தணிகனொருவனைச் சிநேகம் செய்துகொண்டு தில்லி ராஜ்யத்தைக் கைப்பற்றிக் கொடுங்கோல் புரிந்துவந்தான்.

அவனிறந்தபின் மொகலாய ராஜ்யம் க்ஷீண திசை அடைந்தது. அவன் குமாரன் அக்பர் ராஜ துரோகியாகி பாரசீக தேசத்தில் தஞ்சம் புகுந்து அங்கேயே உயிர்துறந்தான். மற்ற மொகலாயர்களால் ராஜ்யத்தைப் பரிபாலிக்க முடியவில்லை. 1739-ம் வருஷத்தில் நாதிர் ஷா என்ற பாரசீக வீரன் கஜ்னி, காபூல் முதலிய ராஜ்யங்களைப் பிடித்துக்கொண்டு, இந்தியாவின்மேல் படையெடுத்து, தில்லி ராஜாவின் சேனை யொன்றை கார்னல் என்ற இடத்தில் முறியடித்து, தில்லி நகரையே கொள்ளையிட்டு மகா செல்வத்துடன் தன் தேசத்திற்குத் திரும்பினான். அவன் பின் வந்த அஹமது ஷா துரானி என்ற ஆப்கானியன் மூன்றாவது பானிப்பத் யுத்தத்தில் வெற்றி பெறவே மொகலாய ராஜ்யத்தின் சகாப்தம் முடிவுற்றது.

பின்னாளில் பிரிட்டிஷாரின் ராஜ்யம் ஓங்கிவர கிழக்கு இந்தியக் கம்பெனியாரின் அதிகாரம் வடமேற்குப் பிரதேசத்தில் பரவ ஆரம்பித்தது. அப்படி வரவே 19-ம் நூற்றாண்டு ஆரம்பத்தில், 'நெப்போலியன் இந்தியாவின்மேல் நோக்கம் வைத்து, பாரசீகருடன் இந்தியாவுக்கு வர எத்தனிக்கிறான்' என்ற பீதி முன்னிட்டு, மின்டோ பிரபு, சர் ஜான் மால்காம் என்பவரைப் பாரசீகத்துக்கு அனுப்பி அதன் பிறகு ஒரு ஒப்பந்தமும் செய்துகொள்ளப்பட்டது. பாரசீகருக்குப் பணம் கொடுப்பதுமன்றி அவர்களை ருஷியர் ஏதேனும் தொந்தரை செய்யும் பக்ஷத்தில் அவர்களுக்கு உதவி அளிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

ஆனால் கொஞ்ச காலத்தில் பாரசீகர் ருஷியருடன் சமாதானமாகிவிட்டனர். அதற்குமேல் இருதிறத்தாரும் ஆப்கானிஸ்தான மார்க்கமாக இந்தியாவை யடைந்து, ஆங்குள்ள முஸ்லீம்களை பிரிட்டிஷ்காரருக்கு விரோதமாகத் தூண்டிவிடுவரோ என்ற கவலை கம்பெனியாருக்கு உண்டாயிற்று.

1837-ல் ஹீரத் என்ற ஆப்கானிய பட்டணம் பாரசீகரால் தாக்கப்பட்டது. ஆனால் ஆப்கானியர் பக்கம் இருந்த ஸர் எல்ட்ரெட் பாடிங்கர் முதலிய ஆங்கிலேயரின் அனுக்கிரகத்தால் யாதும் பாரசீகரால் கைகூடவில்லை. 20 வருஷத்துக்கு அப்புறம் ஹீரத் மறுமுறை கைப்பற்றப்பட்டது. அப்போது கவர்னர் ஜெனரல் கானிங் பிரபுவின் உத்திரவின்பேரில் ஸர் ஜேப்ஸ் ஔட்ராம் என்பவர் அனுப்பப்பட்டார். இதனால் பாரசீகரின் ஆசைக்கு ஒரு தடையேற்பட்டது.

சிப்பாய்க் கலகத்திற்குப்பின் வந்த வைஸ்ராய்களும் பம்பாய் கவர்னரான ஸர் பார்ட்லே ப்ரொர்ரும், அவருக்குப்பின் வந்த ஸர் சேமூர் பிட்ஜ்ஜெரால்டும் பாரசீகத்தில் தங்களாலானமட்டும் பிரிட்டிஷ் லக்ஷியங்களைக் காத்தனர். மேயோ பிரபு இரண்டொரு தரம் பாரசீகருக்கும், கீலட் தேசத்தின் கானுக்கும், ஸ்பெரேட் தேசத்துக்கும் ஏற்பட்ட மனஸ்தாபத்தை திருப்திகரமாய்த் தீர்த்துவைத்தார். நமது நூற்றாண்டாரம்பத்தில் கர்ஸான் பிரபு பாரசீகத்திற்கு விஜயம் செய்து அநேக கவுன்சில்களை நியமித்துத் தன் தேசத்தினருக்கு வேண்டிய சவுகரியங்களையும் செய்தார். இவ்வாறாக இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாருக்கும் பாரசீகருக்குப் நட்பே நிகழ்ந்துவந்தது.

ஆனால் 1907-ல் பிரிட்டிஷார் ருஷியருடன் செய்துகொண்ட ஒப்பந்தப்படி பாரசீகருடன் தகராறு ஏற்பட்டது. ஒரு ஏஜென்ஸி நியமிக்கப்பட்டது; அன்னியோன்னியமும் சற்று சிதைவுற்றது.

# ஆராய்ச்சி மேடை.

## நான் கண்ட நாற் பறவைகள்:

இஃது ஆசிரியர் ஆரியூர் வா. பதுமனாப பிள்ளை அவர்களால் யாக்கப்பெற்று "கலைமகள்" பத்திரிகையி லிருந்து புத்தக ரூபமாகப் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

பிரகிருதி தேவியானவள் சதா சர்வ காலமும் சலன படம் போலப் பிரபஞ்ச விநோதங்களை காட்சி காட்சியாகக் காட்டிக் கொண்டே யிருக்கிறாள். அவைகள் ஒன்றைப்போல் மற்றொன்

---

ஆகவே ஜெர்மெனியின் சூழ்ச்சியினால், மஹா யுத்த காலத்தில் உபத்திரவமும் ஏற்பட்டது. ஆனாலும் ஜெர்மானியர் யுத்தத்தில் தோல்வியுறவே, பிரிட்டிஷாரின் செல்வாக்கு தழைத்தோங்கி நின்றது. இந்திய சேனையில் ஒரு பகுதி சர்ஹாத் என்ற பிரதேசத்தில் வைக்கப்பட்டது.

மறுபடியும் 1920-ல் ஒரு ஒப்பந்தம் முடிக்கப்பட்டது. பிரிட்டிஷார் பாரசீக கவர்ன்மெண்டுக்கு ரயில் பாதை போடுகிறதில் உதவி செய்யவும், அதன் நிமித்தம் 20 லக்ஷத்துக்குக் கடன் கொடுக்கவும் ஏற்பாடாயிற்று. ஆனால் அவ் வொப்பந்தம் நீடித்திருக்கவில்லை.

1923-ல் பாரசீகர் சர்ஹாத் பிரதேசத்தை மீட்க முயற்சிக்க பிரிட்டிஷார் அதை விட்டுவிட்டனர்.

1925-ல் ஏற்பட்ட புரட்சியினால் பாரசீகத்தில் ஒரு நூற்றாண்டுக்குமேல் அரசாட்சி புரிந்துவந்த கஜார் வம்சம் ஒதுக்கப்பட்டு, மிகவும் திறமையுடன் உத்தியோகம் வகித்துவந்த சேனாதிபதியொருவர் அரசராய்த் தெரிந்தெடுக்கப்பட்டார். புதிய ஷா வான ரிஸாகான் பஹ்லவியின் கீழ் பாரசீகம் முன்னேற்றம் அடைந்திருக்கிறது. அவர் பிரிட்டிஷ்காரருடன் நட்பே கொண்டிருக்கிறார். சில காலமாக பாரசீக மூலமாய் ஐரோப்பிய ஆகாயத் தபால் சர்வீஸ் நடைபெற்று வருகிறது. புராதன காலத்தில் இருந்தது போலவே இந்தியாவிற்கும் மேல் நாட்டிற்கும் பாரசீக மார்க்கமே வரத்துப் போக்கு ஏற்பட்டிருப்பது மிகவும் வியக்கத் தக்கதே.

றிராது; ஒன்று சொல்லுவதை இன்னொன்று சொல்லாது. ஒன்று கவியின்பங் காட்டும்! ஒன்று ஓவியக் கலையுரைக்கும்! இன்னொன்று இன்னிசை படிக்கும்! பிறிதொன்று பிரணவம் பேசும்! வேறொன்று காவியக் கதை களிக்கும்! இவைகளை யெல்லாம் கண்கள் மாத்திரம் தான் ரஸிக்கின்றனவா? காதுகள் மட்டுந்தான் குடிக்கின்றனவா? கருத்தும் ரஸிக்கின்றது; கருத்தும் படிக்கின்றது. இயற்கையொரு நல்லாசிரியை. அவள் நமக்கெல்லாம் பலப் பல பாடங் கற்றுக் கொடுக்கின்றாள்.

கவியரசன் பாரதியாரின் குயில் பாட்டைப் படித்துவிட்டு ஆரியூர் பதுமநாபரின் பறவைகளைப் பார்க்கும்போது நமக்கோர் புத்தம் புதிய நம்பிக்கை பிறக்கின்றது. இன்னொரு பாரதியை இவரில் காண்பேமோ? இழந்த பாரதியை இப் பதும வாவியில் கண்டெடுப்பேமோ? என்கிற இன்பக் கனவு எம்முள்ளத்தில் மின்வெட்டுப் போல் தோன்றி மறைகிறது.

ஆசிரியர் பதுமநாபர் ஒரு நாள் அந்திப் பொழுதில் ஆற்றங் கரையில் உலாச் செய்கிறார். நதியின் இரு மங்கிலுமுள்ள நல்ல கனிதரு மரங்கள்! நறுமலர்ச் செடிகள்! அவரை ஆகிருஷித் தழைக்கின்றன. பகல் முழுதும் வீதி விடங்கஞ் செய்த சூரியன் மேற்கில் மறையப் போவதையும் பார்த்துவிட்டு வான படலத்தை வரைகின்றார். நீல வானத்தில் நிறத்திலும் உருவத்திலும் மாறுபட்ட பலப்பல மேகக் கூட்டங்கள் தோன்றுவதும் மறைவதுமான காட்சி கவி பெறுகின்றன. அரியும் சிவனும் ஒருவனே என்பதை அவைகளிடைக் காணுகிறார். அப்பொழுதுதான் அவருடைய முதற் பட்சி வானம்பாடி வாட்டஞ் சிறிது மின்றி வான நெடு வெளியில் வட்டமிட்டுப் பாடுகிறது. அதைக் கேட்டு ரஸிக்கின்றார். ஒரு இன்பச் சுரம் அவரைக் கவருகிறது. "எப் பாடகரிடத்தும் என்றும் யான் கண்டறியேன்" என்று பிதற்றுகிறார். இயற் கானத்தோடு செயற் கானம் ஒவ்வாது என்பதை வான கானத்தின் குரலினிமையில், சுதந்திர வாழ்வில் லயித்து மறந்துவிடுகிறார். அதன் மகிழ்ச்சியில் மகிழ்கின்றார். எத்தகைய துன்பமும் எய்தாது இன்ப சுதந்திர மடைய ஏங்குகின்றார். ஏன்? ஏங்குவானேன்? ஸ்வார்த்த தியாகத்தால் அந் நிலை யெய்த வியலும் என்பதை காந்திஜீ லண்டனில் தமது அறுபத்தி மூன்றாவது ஜெயந்தி யன்று "வானம்பாடியைப் போல் இன்புற்றிருக்கின்றேன்" என்று சொல்லிக் காட்ட வில்லையா?

பாடற் புலவனின் பாட்டில் ஆனந்தித்துக் கிடந்த ஆசிரியர் தெளிந்து அப் பறவையிடம் உடலால் அல்ல; மானஸத்தால் நெருங்குகிறார்; பார்க்கிறார். பறவையும் அவரைக் கூர்ந்து பார்க்கின்றது.



பாட்டு நின்றது. சம்பாஷணை ஆரம்பம். "இன்னிசையில் தேர்ந்த இன்பப் புள் மன்னவனே! நீ பாடும் இன்னிசையில் நேர்கின்ற இன்பம் போல் விற்பனர் கச்சேரிகளில் விளைந்திடுவ துண்டேயோ?" என்று முகஸ்துதி பேசிக் கேட்கின்றார். மாயப் பறவை மானுடர் இயல்பு கூறுகிறது. அவை மகா முக்கியமானவை. அற்பப் பறவை சொன்னவைதானே யென்றெள்ளிடப் படாது; தள்ளிடப்படாது. இயற்கைத்தே வுரைத்த இன் மொழிகள்—நீதி வாக்கியங்களென நெஞ்சகத்தில் நினைவிருத்த வேண்டும்.

அப்புறம் மாமரத்துக் குயில் "குயீல், குயீல்" எனக் கூவுகிறது. பாரதியாரின் குயிலுக்கும் பதுமனாபரின் குயிலுக்கும் ரொம்ப வித்தியாசம். இரண்டும் கருமைதான்; இரண்டும் இந்திர நீலந்தான். இருந்தாலும் பாரதிக் குயிலுக்குப் பண்ணழகு அதிகம். பொன் போற் குரல்! புது மின்போல் வார்த்தை! பதுமக் குயிலுக்கோ பண்ணழ கத்துணையா யமையாவிட்டாலும் நீதி தர்மத்தை தித்திக்கத் தித்திக்கப் பேசுகிறது. இது சீர்திருத்தக் குயில்! சித்திரக் குயில்! அது (பாரதிக் குயில்) காதற் குயில்! கவிக் குயில்! பதுமக் குயிலில் ஓரே யொரு விசேஷ மிருக்கிறது. இந்தியாவிலே பிறந்து, இந்தியாவிலே வளர்ந்து இந்தியாவுக்கே சொந்தமானதால் "பாரத நாடின் றடிமைப் பட்டுப் பழஞ் சிறப்பைப் பறிகொடுத் தேங்குவதே!" என்றும், "ஓது திருப் பாரதம் உலகத்திடை முன் போல் இணையற்ற மாண்பை எய்திச் சிறக்குமன்றோ?" என்றும் தேசாபிமானம் பேசுகிறது. மேலும் "இன்பத்தினுக் குயிராம் எழிற்பெண்ணினத் தார்க்கு, துன்பம் புரிவோர்க்குத் தோல்வியே யல்லாது வெற்றியெதன் கண்ணும் விளையாது" என்றும் இன்னிசையில் தன்னை நிகர்த்த தையலார்க்குத் தயவோடும் பெண்ணுரிமை கேட்கின்றது.

அடுத்தாப்போல் மயில் வருகிறது. கரு மேகத்தைக் கண்டு அது ஆடும் ஆட்டமும், அதன் தோகை யழகும் ஆசிரியரை அதன் மாட் டிழுக்கின்றது. நெருங்குகிறார். அஞ்சி ஓடவில்லை; செம்மாந்து நிற்கிறது. குறிஞ்சி நிலக் கடவுள்—குமாரப் பெருமான்—வீர தெய்வத்தின் திரு வசி பெற்றபின் அதற்கு அச்சமென்ப திருக்குமா? கடவுள் பக்தி, கல்வி மாண்பு, இயற்கை வனப்பு இவைகளை அம்மயில் ஆடிக்கொண்டே பாடுகிறது.

கடைசியில் கிளி காட்சி தருகிறது. பச்சை நிறம்! பவளச் செவ்வாய்! பேச்சிலுந்தான் எவ்வளவு இனிமை! எவ்வளவு மார்த்தவம்! தன்னைப் பேச்சில் வென்ற பெண்ணினத்தின் மீது அதற்குக் கொஞ்சம் கோபமோ, பகைமையோ, வெறுப்போ பிறக்கிறது.

வன் குரலில் வெட்டெனப் பேசும் பெட்டையரைத் திட்டுகிறது. 'வெண் பொடி பூசி வேடந் தரிக்கும்' வேஷக்காரிகளை வசை செய்கிறது. விலைபெற்ற சேலை வேண்டி வீண் சண்டை செய்யும் பெண்டிரை வெறுக்கிறது. நாக்கிலும் மூக்கிலும் நகைகளைச் சுமக்கும் நாரிகளைச் சீறுகிறது. ஆனால் முடிவில் ஏதோவொரு சிறு எண்ணம் பிறந்து இயற்கை யழகை இனிதுரைத்து பெண்மையைச் சீறும் பேய்க் குணத்தைக் கண்டிக்கின்றது. அவ்வளவுதான் ஆசிரியரின் கனவு பூர்த்தி யாகிவிடுகிறது.

"நான் கண்ட நாற் பறவைகளி"ல் நமக்குப் பறவைத் தோற்றமே தோன்றவில்லை. பாட்டிசை வானம்பாடி யாகவும், பண்ணினிமை குயில் வடிவாகவும், நடன லக்கணம் மயில் ரூபமாகவும், வசன மொழி கிளியாகவும் உருவகப் படுத்தப்பட் டிருப்பதாகப் படுகிறது. பாட்டும், பண்ணும், சதுரும், மொழியுஞ் சேர்ந்த இந் நூல் தமிழ் உலகத்திற்கோர் கூட்டமுதாகும். தமிழன் ஒவ்வொருவனும் எம்மைப் போல் ரஸிக்க வேண்டும் என்பதே எமது முடிவான பிரார்த்தனை.

## உப நிஷதக் கதைகள்:

ஆக்கியோர் திருவாளர் ம. ரா. ஜம்புநாதன். கிடைக்குமிடம் ஜம்புநாதன் புத்தகசாலை, 14-பள்ளியப்பன் தெரு, சென்னை.

ஈசம் முதல் பிரகதாரண்யம் ஈருகவுள்ள பத்து உபநிஷதங்களிலிருந்தும் இந் நூல் எடுக்கப்பட்டிருக்கிறது. "பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும்" என்பது பாரதியாரின் இலக்கணம். அதற்கு இலக்கியமாக இந் நூல் அமைகிறது. சமஸ்கிருதம் தமிழருக்குப் பிற மொழியா யிருப்பதால் உப நிடதத்தை என்னிற மென்றுகூட நாமறியோம் அக் குறையைப் பூர்த்தி செய்த திரு. ஜம்புநாதனைத் தமிழுலகம் ஆதரித்துத்தான வேண்டும்.

எந்த ஒரு பெரிய தத்துவத்தையும்கூட கதை கதையாகக் கூறினால் நன்றாய் விளங்கிவிடுகிறது. ஆசிரியர் இந் நூலை அந் நந் நோக்கத்துடன் 89 சிறு கதைகளாக இனிய எளிய நடையில் எழுதியிருப்பதையும் குறிப்பிடுகிறோம். நல்ல காகிதம்; சுத்தமான பதிப்பு; 125 பக்கங்கள் கொண்டது. விலை ரூபாய் ஒன்றே.

## "லோகமான்யா"

திரு. சி. நா. வெங்கடராமன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு இரங்கோனிலிருந்து வெளிவரும் ஓர் தினசரி தமிழ் பத்திரிகை. 243, 249-பார் வீதியில் பிரசுரமாகிறது.

# ஆசிரியர் குறிப்புகள்.

## இந்தியா என்ன செய்யப்போகிறது?

இந்தியத் தாய் தனது தவப் புதல்வனை இழக்கப்போகிறாளா? அல்லது மீட்கப்போகிறாளா? இந்தியர்கள் தமது ஏகத் தலைவனை—சுதந்திர புத்தனை—விடுதலைக் கிறிஸ்துவை வீழ்விப்பார்களா? வாழ்விப்பார்களா? இந்தக் கேள்விகள்தான் இற்றைய பாரதத்தில் ஹிமய முதல் குமரிவரை—சிந்து முதல் வங்கம்வரை எதிரொலிக்கின்றன. ஏன்? மகாத்மா விரத மிருக்கப்போகிறார். காந்திஜீ கடுந் தவஞ் செய்யப்போகிறார். "பட்டினி கிடந்து சாவேன்" என்று சபத மெடுத்திருக்கிறார்.

காந்திஜீ ஒரு பைராகி. சிறு வயதிலிருந்தே வைராக்கிய சாதகத்தைச் சாதனஞ் செய்துகொண்டவர். சொன்னால் சொன்னதுதான்; செய்தால் செய்ததுதான். தனது மனச்சாட்சிக்கு எது சரியென்று படுகிறதோ அதைச் செய்து முடிப்பதில் அணுப் பிரமாணங் கூடப் பின்வாங்கமாட்டார். அவரது வாக்குறுதிக்கும், மன வலிமைக்கும் சந்தேகங் கிடையாது. வெற்றி அல்லது தோல்வி என்பதும் அவருக்கில்லை. ஜெயம் இன்றேல் சாவு. இவை யிரண்டிற்கும் இடைவழி யென்பது அவரது அகண்டிதமான அகராதியில் இல்லவே யில்லை.

இந்து ஜாதியில் தாழ்த்தப்பட்டவர்களின் விடுதலைக்காக மகாத்மா தவஞ் செய்யப்போகிறார். தமது உயிரையும் உடலையும் ஸர்வ ஸ்வத்

---

பர்மாவின் அரசியலில் ஒரு பெருங் குழப்ப மேற்பட்டு அங்கிருக்கும் ஏழு லட்சம் இந்தியர்களின் வாழ்க்கையும் அதிகம் திக்குமுக்காடிக் கிடக்கும் இதுகாலை இந்தியப் பத்திரிகைகள் பல தோன்றுவதும் அத்தியாவசியந்தான். 5 லட்சம் தமிழர்களுக்கும் இப்பொழுதிருப்பவை போதா; இன்னும் பல பத்திரிகைகள் வேண்டும். தூங்கிக் கிடந்த இந்தியாவைத் தட்டி யெழுப்பி சுதந்திர பாரதத்தை—நவ ஹிந்துஸ்தானத்தை நிர்மாணித்த மஹா வீரன்—மஹரிஷி—தர்மாத்மா திலகரின் பேரால்—லோகமான்யனின் ஞாபகார்த்தமாகத் தோன்றி யிருக்கும் இப் பத்திரிகையை நாம் வரவேற்கின்றோம். அப் பெயருக்கு கறை யேற்பட்டுவிடாமல் வளர்த்து—காத்து வர வேண்டியது ஆசிரியரின் கடமை.

தையும் அவர்களுக்காக அர்ப்பணித்துவிட்ட அம் மஹரிஷி ஒரு பெரிய யாகம் வளர்த்து அந்த ஹோமத் தீயில் இறங்கப் போகிறார். அவரது உயிர் இந்தியாவின் ஹிருதயம்—அவரது உடல் இந்துஸ்தானத்தின் இரத்த நாடி. என்ன விலை கொடுத்தும் பாரத ஜீவன் காப்பாற்றப்படவேண்டும். "மகாத்மா காந்தி இறந்தால் வேறு யார் ஜீவிப்பது? மகாத்மா காந்தி உயிருடனிருக்கும்போது எவர் இறந்தாலென்ன?" என்று இந்திய சட்டசபையின் தேசியக் கட்சித் தலைவர் அரங்கய்யர் சரியாகவே சொன்னார். ஆம். இந்தியர் எல்லோருமே இறந்தாகிலும் காந்தியின் ஓர் உயிர்—ஒப்பற்ற ஒருயிர்—இந்தியாவின் ஆருயிர் காப்பாற்றப்பட வேண்டும்.

57 தினங்கள் சந்திர நந்தி அனசனஞ் செய்தான். தேசபக்தர் சிரமணி மாக்ஸ்வினி 66 நாட்கள் நோன்பிருந்தான். வீர விளக்கு யதீந்திரன் 67 பகல் உபவாசமாற்றினான். புத்தபிக்ஷு விஜயன் 150 நாட்கள் உண்ணாதிருந்தான். இந்த காந்தி இந்து—முஸ்லீம் இணக்கத்திற்காக 21 தினங்கள் ஊண் உறக்கம் நீத்தார். ஸ்ரீ ராகவனைக் காத்து உத்தரவாதஞ் செய்வதற்காக இளையவன்—இலக்குமணப் பெருமான் பதினாலு வருஷங்கள் உண்ணவில்லை; உறங்கவில்லை. கிறிஸ்து பிரானும் 40 நாட்கள் உபவாசமிருந்தார். இவைகளையெல்லாம் எண்ணி இந்தியா அசட்டையாயிருந்துவிடப் போகிறதா? காந்திஜீயின் கடுந் தவத்தால் ஏதேனும் ஹானி நேர்ந்துவிட்டால்?.........

ஐந்தாம் ஆண்டில்—அறியாப் பிராயத்தில் துருவன் செய்த தவம் பகவானையும் அவனிடம் ஓடச் செய்தது. ராஜரிஷி கோசிகன் செய்த கடுந் தமம் தேவ லோகத்தையே தகித்தது. தேவர்களும், மூவர்களும் நடுங்கினார்கள். ஆனால் காந்திஜீயின் கடுந் தவமோ! இந்தியாவையும் பிரிட்டனையும் ஏன்? முழு உலகத்தையுமே என்னவோ செய்துவிடப் போகிறது! இந்தியர்களின் இருதயத்தைக் குலுக்கும்; பிரிட்டிஷ்காரர்களின் பிடிவாதத்தை போக்கும்; உலகத்தை உருக்கும்; உறுதியைப் பயக்கும்.

இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னே உலகம் இவ்வளவு அறிவு ஒளியாலும், ஆத்ம பிரகாசத்தாலும், நாகரீகச் சுடராலும் கொளுத்தப்படாதிருந்தபோது, பகவான் இயேசுவை நெஞ்சில் ஆணி அடித்து, சிலுவையில் தூக்கியதைப் போல் இந்த இருபதாவது நூற்றாண்டில் காந்தியையும் கொன்றுவிடப் போகிறோமா? நபிகள் நாயகத்தைக் கல்லாலடித்து மாய்த்தோமே அவ்வாறு காந்தியையும் மாய்ப்போமா? அம்பால் எய்து கிருஷ்ண பரமாத்மாவைப் தோற்றோமே அப்படி காந்தியையும் தோற்போமா? சீக்கிய குரு தெஜ் பஹதூரின் சடலத்தைக் கூறு கூறாய் அறுத்தறுத்துக் குவித்தோமே அவ்வாறு



காந்தியையும் அங்குல அங்குலமாய் அறுத்து சிதைத்து ஒழிக்கப் போகிறோமா? பழைய உலகம் இப்பொழுதில்லை; கர்னாடகத்து மக்கள் நாமல்ல; மனித ஜாதி; மனுஷ்யத் தன்மையில் மானுஷீகமாக வாழ்பவர்கள் நாம். மஹாத்மாவை வீழவிட மாட்டோம்; வாழவே செய்வோம்

இந்தியருக்கு ஒரு சோதனை பிறந்திருக்கிறது. "இன்று நாளை இந்திய ஜாதி ஒற்றுமையால் ஒரே ஜாதியாகிவிடும்" என்றெண்ணிய எண்ணம் பாழாய்—பழங் கதையாய்—பகல் கனவாய் முடிய விருந்தபோது, தீமையில் நன்மை யேற்படுவதுபோலும், அழுகிய சேற்றில் அழகிய தாமரை பூப் பெய்துவதுபோலவும், துன்பத்தில் இன்பம் விளைவது போன்றும், இரவுக்குப் பின் பகல் விடிவது போலவும் ஒரு புதிய நம்பிக்கை பிறந்திருக்கின்றது. இந்தியரின் எல்லாக் கண்களும் எரவாடாவை நோக்கிப் பார்க்கட்டும். அங்கேதான் அந்த உதய தாரகை—பாலசூர்யன் பள்ளி யெழப் போகிறான்.

காந்திஜீ பட்டினி விரதத்தை ஆரம்பிக்க விருக்கும் அன்று இந்தியர் எல்லோருமே விரதம் இருக்கவேண்டும்; எல்லோரும் பிரார்த்தனை செய்யவேண்டும், இந்துக்கள் மாத்திரமில்லை; இந்தியர் எல்லோரும் எவ்வித பாகுபாடு மின்றிக் கூடி வகுப்புத் தீர்ப்பை வகுத்துவிட வேண்டும். அன்று அப் பேய்—வகுப்புப் பரிசென்னும் அந்த எமன் காந்திஜீயின் உயிரை உண்டுவிடாமல் இந்தியாவின் ஜீவன்களெல்லாம் சேர்ந்து அக் காலனைக் காலா லுதைத்து, காந்திஜீயை சிரஞ்சீவியாகச் செய்துவிட வேண்டும். டாக்டர் மூஞ்சே, டாக்டர் அம்பேத்கார், பண்டித மாளவியா, ராவ் பகதூர் ராஜா இந் நால்வரின் தலையிலேதான் பொறுப்பெல்லாம். இந்துக்களின் முன்னோர் செய்த பாவத்திற்காக நமது இக்காலத்து தீர்க்கதரிசியைப் பலிகொடுக்கலாமா? பறிகொடுக்கலாமா?

வாழ்க மஹாத்மா! வீழ்க வகுப்புத் தீர்ப்பு!

## ஆயுதப் பரிஹாரணம்:

ஆயுதப் பரிஹாரணம் என்ற வார்த்தைக்கு உண்மையான அர்த்தம் யுத்த ஆயுதங்களை—கொலைக் கருவிகளை ஒழித்தல் என்பதாகும். ஆனால் இப்பொழுதைய அரசியல் அகராதியிலோ ஆயுதங்களைக் குறைத்தல் என்ற தாத்பரியந்தான் தரப்படுகிறது. ஏனெனில் உலகம் தோன்றிய நாள் தொட்டோ மனித வர்க்கம் கட்சிப் பிரதி கட்சிகளாகப் பிரிந்து ஒன்றையொன்று மோதிக்கொள்ள முற்பட்டதிலிருந்தோ அல்லது நமது கண்ணுக்கும் கருத்துக்கு மெட்டாமலும் சரித்திர சாட்சியெதுவு மில்லாமலும் இருளடைந்து கிடக்கும் பூர்வ காலத்திலிருந்தோ இப் பிரபஞ்சத்தில் சாச்வதமாகக் குடிகொண்டிருக்கும் யுத்தத்தை ஒரே நொடியில் திடீரென நிறுத்திவிட முடியாதென அர

சியல் சாஸ்திரிகள் சமாதானம் கூறுகிறார்கள். அந்த ஆதி நாளைப் பற்றி நமக்கு அதிகம் தெரியாது—யூகிக்கவும் இடமில்லை. ஆனால் சாஸன காலத்தை மாத்திரம் எடுத்துக்கொண்டு பார்த்தாலும் எத்தனை எத்தனை யுத்தங்கள்தான் நடந்திருக்கின்றன? சரி. சமீப காலத்திற்கு வருவோம். 1821 முதல் 1914 வரையுள்ள 93 வருடங்களில் 40 சண்டைகள் நடந்திருக்கின்றன. நெப்போலியன் ஒருவன் மாத்திரம் 9,000 நாட்கள் போராடியிருக்கிறான்; இரண்டு லட்சம் ஆட்களைக் கொன்றிருக்கிறான். போன ஐரோப்பியப் போரும் 1,750 நாட்கள் நடந்தன; பத்து லட்சம் உயிர்கள் பலியாயின. "இவ்வாறு மனித வர்க்கத்தை புல்லாங் காடு போல அறுத்துக் குவிக்கும் யுத்தத்தை மனித வர்க்கம் ஒழிக்கா விட்டால் யுத்தம் மனிதப் பூண்டேயில்லாமல் சர்வ நாசம் செய்து விடும்" என்கிற உணர்ச்சி 1918-ம் ஆண்டிலேதான் முதன் முதலாக மனித உள்ளத்தில் உதித்தது. அந்த எண்ணம் நிரந்தரம் வாழ்க!

மனிதனது மனத்தில் சிற்சில விஷயங்கள் தோன்றி மறைந்து விடுகிறதுண்டு. அவற்றை "வைராக்கிய சதக"த்தார் பிரஸவ வைராக்கியம், ஸ்மஷான வைராக்கியம், புராண வைராக்கியமெனப் புகல்வர். அம் மாதிரியொரு வைராக்கியத்தை உலக வல்லரசுகள் யுத்தக் கொடுமை தாங்க மாட்டாமல் இந்தப் பாழும் யுத்தத்தையே ஒழித்துத் தொலைக்க வேண்டுமென்று நினைத்தன. இம் முயற்சியில் அமெரிக்கக் குடியாட்சித் தலைவன் வுட்ரோ வில்ஸன் துணிச்சலுடன் வெளி வந்து திட்டம் வகுத்தான். அவனுடைய பிரசித்தி பெற்ற 14 நிபந்தனைகளில் போர் போக்கும் திட்டத்தை நாலாவதாக வைத்தான். "உலக சமாதானத்திற்கு அடிப்படையாக ஒவ்வொரு தேசமும் அததன் சாம்ராஜ்ய அளவுக்கேற்ப, உள்நாட்டுக் குழப்பத்தை அடக்கும் ஒரே நோக்கத்துடன் இவ்வளவு சைன்யத்தைத்தான் வைத்துக்கொள்ளுகிறது என்ற நிபந்தனைக்குக் கட்டுப்பட்டு உத்தரவாதஞ் செய்து தரவேண்டும்" என்பதுதான் அத் திட்டம். அதை எல்லாத் தேசங்களும் ஒப்புக்கொண்டு 1918 நவம்பர் 5-ம் நாள் வெர்ஸெய்ல்ஸில் நடந்த சமாதான மஹா நாட்டில் கையொப்பமிட்டன. அதன்படி ஜெர்மனி தனது யுத்த தளவாடங்களைச் சரண் செய்துவிட்டது. மற்றைய நாடுகள் சமாதான ஷரத்துகளைச் சரிவர நிறைவேற்றவில்லை. எவ்வளவோ புகாருகள் விளைந்து, புகைச்சலும் கிளம்பி, கமிஷன் பின் கமிஷனாக எத்தனையோ புறப்பட்டன. மஹா நாடுகள் பலவும் நடத்தப்பட்டன. என்றாலும் ஆயுதப் பரிஹாரணம் அன்று கண்ட மேனியில் குறைந்ததில்லை. ஒப்பந்தங்களை வெறும் கிழிந்த கடுதாசிகளாகக் கருதி, கழிவு தாட் கூடையில் எறிந்துவிடுகின்றனர். அந்த மதிப்பிலேயே ஆயுத ஒப்பந்தமும் அவமதிக்கப்பட்டு ஒவ்வொரு நாடும்



அததன் நிலப் பரப்பிற்கும், நிலைமைக்கு மேற்றவாறு யுத்த தளவாடங்களை யதிகரித்துக் கொண்டே வருகின்றது. ஏனெனில் இது அவநம்பிக்கைக் காலம்; சந்தேக யுகம். அண்ணனைத் தம்பி நம்பவும் தம்பியை அண்ணன் சந்தேகியாதிருக்கவும் இந்நாட்களில் இடமில்லை. இந் நிலைமையில் ஒரு நாடு இன்னொரு நாட்டை நம்பப் பயப்படுகிறது. இதனாலேதான் யுத்த தெய்வம் இன்னும் பூஜிக்கப்படுகிறது. ஒவ்வொரு தேசமும் போர்க் கருவிகளைப் பெருக்குவதிலும், சைன்யத்தை வளர்ப்பதிலும் யுத்த காலத்திற்கு முன்னைவிட அதிகமாகவே செலவு செய்கின்றன. இச் செலவில் 100-க்கு 60 விகிதம் ஐரோப்பிய நாடுகளும், 20 விகிதம் அமெரிக்காவும், மற்றைய தேசங்களெல்லாம் சேர்ந்து 20 விகிதமும் செலவு செய்கின்றன. இங்கிலாந்தின் வரிப் பணத்தில் முக்கால் வாசி முன்னைய யுத்தக் கடனின் தவணை கட்டுவதற்கும், இனிமேல் வரப்போகும் யுத்தங்களுக்குத் தளவாடங்கள் சேகரிப்பதிலும் செலவிடப்படுகின்றன. இவ்வாறு செய்யப்படும் போர்ச் செலவை முழுதுமே நிறுத்திவிட்டால் மனித வாழ்க்கையை இப்பொழு திருப்பதைவிட 100-க்கு 10 விகிதத்தில் மேன்மையுறச் செய்யலாமென ஸர் ஜோஸியா ஸ்டாம்ப் என்பவர் சொல்லுகிறார். ஆனால் அதுவரை யுத்தச் செலவு மனித வர்க்கத்தைச் சாப்பிட்டு விடாமலிருக்க வேண்டுமே அதற்கென்ன செய்யலாம்?

இவ் வருடம் பிப்ரவரி 2-ம் நாள் கூடிய ஆயுதப் பரிஹாரண மகா நாடு முடிந்துவிட்டது. நற் பலன் எதுவுமே கிடைக்கவில்லை. கூடிக் கலைந்ததே அவ்வளவுதான். ஆயுதப் பரிஹாரண மகா நாட்டில் தலைமை வகித்த ஆர்தர் ஹெண்டர்ஸன் அதுபற்றிப் பேசியிருப்பதாவது:—

"ஆறு மாத காலமாக ஆயுதப் பரிஹாரண மகா நாடு நடந்தும் எதிர் பார்த்த பலன் எதுவுமே கிடைக்கவில்லை. எங்கும் ஏமாற்றமும் அதிருப்தியுமே ஏற்பட்டிருக்கிறது." இதனால் வெறும் மஹா நாடுகளால் ஒன்றுமே ஆகாதெனக் கூறலாம். ஒரு சிறிதளவு ஆயுதத்தை வெளிப் பார்வைக்குக் குறைத்து விடுவதால் உலக சமாதானத்தை உண்டுபண்ணி விடலாமென எண்ணுவது இற்றைய அரசியல் சாஸ்திரிகளின் கனவு மாத்திரமேயாகும். பரஸ்பர நம்பிக்கையும், நல்லெண்ணமும், துணிச்சலும் வேண்டும். யுத்தத்திற்குக் காரணமான மாற்சர்யம் நீக்கப்படாதவரை—தணிக்கப்படாத மட்டும் சமாதானம் சாத்தியமாகாது. 18 அங்குலத்திலிருந்து 12 அங்குலமாகத் துப்பாக்கியின் குழாயைக் குறைத்துவிடுவதால் அது செய்யும் நாசகாலி வேலை நல்ல வேலையாகிவிடுமா? அதைக் கண்டு பயப்படாமல் அது கக்கும் குண்டுகளை முத்தங் கொஞ்ச முடியுமா? மஹா நாடுகளும், கமிஷன் விசாரணைகளும் பிரஜைகளை மயக்கும் மூடமந்திரங்க ளன்றி வேறில்லை கண்ணுக்கினிய பசுமை நிறத்திலோ, சுகந்தமான ரோஜாப் [illegible]ன்

வர்ணத்திலோ பூசப்பட்டிருந்தாலும் வெடிக்குண்டு அதன் வேலையைச் செய்யாமல் விடுமா?

## ஒட்டவா?

ஒட்டாது. உலக விவகாரங்களின் போக்குக்கும் ஒட்டவாவின் போக்கிற்கும் கொஞ்சங்கூட ஒட்டவே ஒட்டாது. ஆனால் சர்வ தேச சங்கம் தனது பகீரதப் பிரயத்தனத்தால் என்னென்ன காரியங்களையெல்லாமோ சாதித்துவிட முயற்சித்தும் என்ன பலன் கண்டது? எடுத்த காரியம் யாவினும் தோல்வியே யன்றி வெற்றி யென்பதற்கு ஒரு ஏடுகூட விடப்படவில்லை. சீன—ஜப்பான் போரை நிறுத்திற்று? ஆயுதப் பரிஹாரணத்தை ஆக்கிற்று? இல்லை, இப்பொழுது உலகத்தையே விழுங்கிவரும் பணப் பஞ்சத்தைத்தான் தீர்த்துவிட்டதா? அறுக்க மாட்டாதவன் கை அறுபது வாள் போன்று பெரும் பெரும் பிரச்னைகளைத் தூக்கி வாரிப் போட்டுக்கொள்ளுவதும், கூட்டம் கூட்டமாகக் கூடிக் கும்மாள மடிப்பதும், கடேசியில் சாரமற்ற கடுதாசிக் குப்பைகளை அறிக்கையென அனுப்புவதும் தவிர்த்து ஏதாவது உருப்படியான ஒரு திட்டத்தைத் தந்ததாக விரல் மடக்க முடியுமா? ராஜ தந்திரிகள் பேசும் வீண் பேச்சுகளைக் கேட்டுக் கேட்டுக் காதுகள் குத்தலெடுக்கின்றன; மனதும் கசந்துவிட்டது. சர்வ தேச சங்கம் சர்வ தேசங்களின் சங்கமாகி பிரிட்டன், அமெரிக்கா, பிரான்ஸு முதலிய வல்லரச நாடுகளின் சார்பி லில்லாமல்—மன்னோரஞ் சொல்லாது நடு நிலைமை வகித்து; நடுத் தீர்ப்புச் செய்யும் பஞ்சாயத்து சபையாய் அமையு மட்டும் அது நிஷ்காமியமான நீதி வழங்கப் போகிறதில்லை. இப்பொழுது அதன் விளைவால் வந்த ஒட்டாவா மகா நாடும் அவ்வாறுதான். தாயைப்போல் பிள்ளை; நூலைப்போல் சேலை.

## ஜெர்மனி:

1914-ல் வந்த சண்டை ஜெர்மனிக்குச் சனியனாய் மூண்டது. அன்றைய ஜெர்மனிக்கும் இன்றைய ஜெர்மனிக்கும் எவ்வளவு வித்தியாசம்! கேசரி போன்ற வீரன் கெய்ஸரைக் காணோம். உலக முழுதையுமே ஒரு நான்கு வருடங்கள் ஆட்டி யலைத்த ஜெர்மன் சிப்பாய்கள் குறைந்துவிட்டனர். பழம் பவிசு இருந்த இடம் புல் முளைத்துப் போய் விட்டது. வியாபாரக்ஷீணம்! பணப் பஞ்சம்! ஆயுதக் குறைவு! இவைகள் வேறு. என்றாலும் ஜெர்மானியரின் தேசப் பற்று மெலிந்ததில்லை. பிரிட்டனுக்கோ, பிரான்ஸுக்கோ தலை குனியும் எண்ணம் ஜெர்மானியாவுக்கு சித்தத்திலும் கிடையாது. எப்படியாவது ஜெர்மனியை அதன் பழைய நிலைமைக்குக் கொண்டு வந்துவிட வேண்டுமென்று ஒவ்வொரு ஜெர்மானியனும் எண்ணத் தலைப்பட்டு விட்டான். அதன் விளைவு என்னசலா மென்பது இப்பொழுது தெரியாது.



காலப் போக்கில் காணும்போது ஒரு பெரிய பூகம்பம் ஏற்பட்டது போல், கொடியதோர் எரிமலை வெடித்தது போல் உலகத்தையே நடுக்குறச் செய்தாலும் செய்யலாம். சமீபத்தில் ஒரு பிரமாண்டமான சைன்யம் அணிவகுத்து நின்று அதன் அதிபனுக்கு மரியாதை யளித்ததாகவும் செய்தி யுண்டு. ஆயுத பலத்தில் இதர வல்லரசுகளுக்குள்ள உரிமையைத்தான் ஜெர்மனியும் தனக்கு வேண்டு மென்கிறது. "ஜெர்மனியின் பாதுகாப்பிற்கு வேண்டிய சேனை தளங்களைச் சேகரிப்பதில் எல்லா முயற்சிகளையும் எங்கள் சர்க்கார் செய்தே தீரும். இவ் விஷயத்தில் கட்டைகெட்ட நாடாக எங்கள் நாடிருக்க இனியும் சகிக்கோம்—சம்மதிக்கோம்" என்று கிழக்குப் பிரஷ்யா பிரசங்கத்தில் ஜெர்மன் யுத்த மந்திரி பேசி யிருப்பதுவும் கேட்கிறது. இத்தாலியாவின் சர்வாதிகாரி முஸோலினியும் ஜெர்மன் கோரிக்கையை யாதிக்கிறார். நமது பார்வைக்கும்—நடு மனப்பான்மையுடைய எவரது பார்வைக்கும் ஜெர்மனி தவறு செய்வதாகத் தோன்றாது. ஆனால் பிரான்ஸுக்குப் பிடிக்கவில்லை; பிரிட்டனுக்குங் கசப்பா யிருக்கிறது. எவர் எப்படிப் போனாலும் நமக்கு இதுபோது வேண்டுவது உலக சமாதானம். அதை நிலை நாட்ட ஐரோப்பிய ராஜ தந்திரிகள் பெரிதும் முயற்சிக்க வேண்டும். ஏனெனில் ஜெர்மனியின் போக்கு சென்ற சில தினங்களாக திருப்திகரமா யில்லை. போர் பாதையில் போய்க்கொண் டிருப்பது போலத் தோன்றுகிறது.

## அயர்லாந்து:

இங்கிலாந்தின் அடுத்த நாடா யிருந்தும் அதன் ஆதிக்கத்தை விரும்பாமல்—இங்கிலீஷ்காரர்கள் தங்கள் மீது செலுத்தும் பிரபுத்துவத்தை சகிக்க மாட்டாமல் வெறுத்து, வெகு நாட்களாய் அயர்லாந்து விடுதலைப் போராடி வருவதை இந்தியா கண்ணிமைக்காமல் கவனித்தே வருகிறது. அயர்லாந்தின் நாட்டமைப்பும்—பூகோளப் பிரவிர்த்திகளும், சுதந்திர சரிதையும் இந்தியாவுடன் பெரும்பாலும் இணங்கி யிருத்தலே இதற்குக் காரணமாகும். என்றாலும் பாதைகள் வெவ்வேறு. அயர்லாந்து ஹிம்சை வழியிலும், இந்தியா அஹிம்சை மார்க்கத்திலும் சென்றுகொண் டிருக்கின்றன. ஆனால் எல்லை இரண்டில்லை; லட்சியம் ஒன்றுதான்.

அயர்லாந்தின் சுதந்திர ஏடுகளில் இப்போதிருப்பதைப் போல் இவ்வளவு பிரபை—இவ்வளவு ஜோதி இதற்கு முன் என்றுமே கிடையாது. காஸ்கிரேவ் சர்க்கார் ஒழிந்து எமன் டிவாலரா அயர்லாந்தின் சர்வாதிகாரியாக வந்தது முதல் எக் காரியத்திலும் துணிச்சல்! எக்

காரியத்திலும் வெற்றி தேவி வீர விளக்கேற்றி வருகிறாள். இங்கிலாந்திற்குக் கப்பம் கட்டுவதையும், இராஜ விசுவாசப் பிரமாணஞ் செய்து தருவதையும் திவாலரா அடியோடு மறுத்து விட்டார். அயர்லாந்தில் கடேசி ஐரிஷ்காரன் இருக்கும்வரையும் கப்பமும் காணிக்கையும் கொடுப்பதில்லை யெனச் சபத மெடுத்திருக்கும் அயர்லாந்தின் எண்ணம் ஈடேற வேண்டு மென்பதே எமது பிரார்த்தனை.

## அடுத்த மஹா நாடு:

கமிஷன் காலம் மங்கி மஹா நாடுகளின் காலம் இப்பொழுது நடந்துகொண்டிருக்கிறது. எதற்கெடுத்தாலும் கூட்டம் கூட்டமென்று மாரடிக்கின்றனர். "எண்ணெய்ச் செலவேயொழிய பிள்ளை பிழைத்த பாடில்லை" என்பதுபோல் ஏழை ஜனங்களின் வரிப்பணம் வலம் இடமாக கப்பலுக்கும், ரயிலுக்கும், இதர படிச் செலவுகளுக்கும் இறைக்கப்படுகிறதே தவிர இம்மி லாபங்கூட ஏற்படுகிறதில்லை. இந்தியாவுக்கு இந்தியா விரும்பாத ஏதோ சில சீர்திருத்தங்களை வழங்குவதற்காக முதல் வட்டமேஜை கூட்டப்பட்டது. ஐக்கிய ஆட்சித் திட்டம் (Federal Scheme) என்று ஏதோ வொன்றை வாய் கடுக்க, நாத் தழும்பேறப் பேசினார்கள். அப்புறம் இரண்டாவது மேஜை. அதுவும் பலிக்கவில்லை. இனி மூன்றாவது மேஜை போடப்போகிறார்கள். அதற்கு அழைக்கப்போகும் ஆள் மணியங்களைப் பார்த்தாலே அதன் முடிவு இன்னதாகுமெனக் குட்டிச் சுவற்றில் முட்டியது போலக் கூறிவிடலாம். மிதவாதிகளில் பழுத்துக் கனிந்த பழங்களாகப் பொறுக்கி யெடுக்கப்போகிறார்கள். எல்லாரும் "சர்"க்கள்; எல்லாரும் சாப்ரூ போன்றார். ஆனால் அந்த அமுஞ்சிகளுக்கும்கூட கொஞ்சம் ரோஷ மிருக்குமானால் வட்டமேஜைப் பதவியை ஏற்கப் போகிறதில்லை. என்னென்னவோ சில நிபந்தனைகளைச் சொல்லி அவற்றிற்கு வைஸ்ராய் வாக்குறுதி யளிப்பதானால்தான் வட்ட மேஜைக்கு எடுத்தடி வைக்க முடியும் என்கிறார்கள். வைஸ்ராய்க்கு வாக்குறுதி யென்பது கடப்பாறையை விழுங்குவது போலிராது; வேப்பங் காயாய்க் கசக்காது. லட்டோ, ஜிலேபியோ சாப்பிட்டது போல தித்திக்கத் தித்திக்க வாக்கும் கொடுத்து, வலக் கையும் போட்டனுப்பி விடுவார். போன மேஜையின்போதும் அப்படித்தான் செய்தார்; அதற்கு முன்னும் அப்படித்தான் செய்திருக்கிறார்கள். மிதவாதிகள் மிதவாதிகளே யாயினும் கப்பல் யாத்திரைக்கும், கடற் காற்றுக்கும், லண்டன் வாழ்வுக்கும் ஆசைப்பட்டு, இந்த முறையும் இந்தியாவின் மதிப்பை—மரியாதையை—மானத்தை விற்றுவிடக் கூடாதெனக் கேட்டுக்கொள்ளுகிறோம். இந்தியாவின் விடுதலைக்குச் சாதகமாயிராவிட்டாலும் பாதகமாவது செய்யாதிருந்தால் அதுவும் தேசாபிமானந்தான்—அவர்களும் தேசாபிமானிகள்தான் என்பது எமது தாழ்மை



யான கருத்து. காங்கிரஸ்காரர்களில்லாமல் மிதவாதிகளுங்கூட இல்லாமே ஜேம்ஸ் அரண்மனையின் தூண்களையும், காலி நாற்காலிகளையும், வெற்று மேஜைகளையும் வைத்துக்கொண்டா சர்வகட்சி மஹா நாட்டை நடத்த முடியும்? பார்க்கலாம்.

## தொழிலாளர் நிலைமை:

உலகத்தின் எந்த மூலையில் பார்த்தாலும் வியர்வையால் உழைத்து வியர்வையால் வாழும் தொழிலாளிகளின் நிலைமை விரும்பத்தக்க விதமாயில்லை. மனித வாழ்க்கைக்கே ஜீவ தாதுக்களாயிருக்கும்—அன்ன தாதாக்களாக விளங்கும் அப் பிராணிகளின் பாடு கேள்வி கேட்பாடில்லாமல் கிடக்கின்றது. பணப் பஞ்சமும் பொருளாதார நெருக்கடியும் அவர்களை எங்கு கொண்டுபோய்ச் சேர்க்கும் என்பது விளங்கவில்லை. ஆனால் "ஏழை யழுத கண்ணீர் கூரிய வாளொடொக்கும்" என்பது மாத்திரம் திண்ணம்.

வேலை யற்றவர்களின் கூக்குரல் எல்லாத் திசைகளி லிருந்தும் எட்டுகின்றன. சிக்கனக் கோடரி எல்லா இலாக்காக்களிலும் எல்லா சர்க்காரிலும், எல்லா ஸ்தாபனங்களிலும் தொழிலாளர்களின் உச்சித் தலையில் ஓச்சப்பட்டிருக்கிறது. எவ்வளவோ பேர் அதற்கிலக்காகவும், பலியாகவும் ஆகிவிட்டனர். சில தினங்களாக லங்காஷயரில் இந்த ஓலக் குரல்—ஒப்பாரி மிகைத்திருக்கின்றது. அவைகளைக் கேட்க நமது காதுகள் குத்தலெடுக்கின்றன. ஆனால் பிரிட்டிஷ் சர்க்காரின் காதுகளில்—செவிட்டுக் காதுகளில் அவைகள் வீழவில்லை. சர்க்கார் சிப்பந்திகளின் சம்பளத்தை 100-க்கு 10 விகிதம் குறைத்திருப்பதால் தொழிலாளிகளின் சம்பளக் குறைவில் தலையிட தேசீய சர்க்கார் (உண்மையில் கன்ஸர்வேடிவ்) சம்மதிக்கவில்லை யென்று படுகிறது. ஏனெனில் சர்க்காரே தங்களது தொழிலாளிகளின் சம்பளத்தைக் குறைத்திருக்கையில் முதலாளிகளைச் சரிவரத் தரும்படி வற்புறுத்த வாயேது? ஆனால் சர்க்காரின் சிப்பந்திகளின் நிலைமையையும் ஆலைத் தொழிலாளரின் நிலைமையையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டாமா?

## தொழிலாளர் காங்கிரஸ்:

12-வது அகில இந்திய தொழிலாளர் காங்கிரசின் இவ் வருஷத்து மகாநாடு சென்னையில் பாபு யதீந்திரநாதர் தலைமையில் செப்டம்பர் 10-ம் நாள் ஆரம்பித்து முடிந்தது. மித்திர பாபுவின் தலைமை யுரையில் ஆழ்ந்த கருத்துக்கள் பொதிந்து கிடக்கின்றன. இந்தியாவின் ஒவ்வொரு தொழிலாளியும் ஒவ்வொரு முதலாளியுங் கூட அதை அழுத்தமாகப் படித்தறிய வேண்டும் என்பது எமது வேண்டுகோள்.

இந்தியாவில் எவ்வாறு தொழிலாளர் சங்கங்கள் தோன்றின வென்றும் அவற்றின் வளர்ச்சிக்கு என்னென்ன குந்தகங்கள் விளைந்தன வென்றும் ஆதியோ டந்தமாகக் கூறிவிட்டு மித்திர பாபு இந்த ஸ்தாபனத்தின் ஒரு பெருந் தவறை எடுத்துக் காட்டுகிறார். தேச விடுதலை யில்லாமல் தொழிலாளர் விடுதலை யடைய முடியாதென்பதைக் கூறி இந்தியத் தொழிலாளிகள் இந்திய விடுதலைப் போரில் ஈடுபடாது பெருந் தப்புச் செய்துவிட்டார்களென்னும் அவரது மொழிகள் ஆணித்தரமானவை. தேசமானது பெரிய அரசியல் வெள்ளத்தால் அலைமோதப்பட் டிருக்கையில் அதன் அஸ்திரமாகிய தொழிலாளர்கள் தாக்கப்படாம விருப்பார்களா? “இந்தியாவை இந்தியர்களைக் கொண்டே ஜெயித்து இந்தியர்களைக் கொண்டே ஆளுகிறோம்” என்னும் ஆள்வினைக் கர்வத்தை ‘நில்’லெனச் சொல்ல எவருக்கு வழியுண்டு? எவருக்கு ஆண்மையுண்டு? இந்தியத் தொழிலாளிக்குத்தானே. அவர்கள் அயர்ந்துவிட்டால்—அவர்களது உதவிக் கரம் அரசாங்கத்திற்கு உதவி செய்யா தயர்ந்துவிட்டால் சர்க்கார் அப்படியே—நின்றவிடத்தில் தானே ஸ்தம்பித்து நின்றுவிடாதா? காங்கிரஸின்—காந்திஜீயின் ஒற்றுழையாமைத் திட்டத்தின் தத்துவமும், தாதுப் பொருளும் இதுதான். தொழிலாளர் விடுதலையும் தேச சுதந்திரமும் இரண்டல்ல; ஒன்றே என்ற எண்ணத்துடன் தொழிலாளர்களனைவரும் ஏகோபித்துத் தங்களது லட்சியத்தில் முன்னேறிச் செல்வார்களாக.

## “சட்டம் ஒரு கழுதை”

“சட்டம் ஒரு கழுதை” என்று மேனாட்டு அறிஞர் ஒருவர் அதற்கு அழகு வர்ணம் அளிக்கின்றார். ஆனால் வாஸ்தவத்திலேயே சட்டம் ஒரு கழுதைதானா? சட்ட நிபுணர்களையும், நீதிபதிகளையும் கேட்கிறோம் சட்டம் ஒரு கழுதைதானா? முன்னால் சென்றால் கடிப்பதும், பின்னாற் போனால் உதைப்பதும் கழுதையின் ஸ்வபாவம். அந்த வொரு கெட்ட குணத்திற்காக மாத்திரம் அந்த அருமைப் பிராணியை—அதன் இதர பல நற் குணங்களை மறந்து சட்டத்திற்குச் சமதையாகச் சொல்லலாமா? என்பது எமக்கு விளங்கவில்லை. அல்லாது அதற்குள்ள மந்த புத்திக்கும், சண்டித் தனத்திற்கும், அசட்டுத் தன்மைக்கும் ஒப்பிட்டுச் சட்டமும் கழுதையும் சரி சமானமெனப் பேச இடமில்லை. கழுதையிடமுள்ள பல நல்ல குணங்களைக் கண்டு விட்டு அதன் கடியையும் உதையையும் எண்ணினால் அநேகமாய் மன்னித்தும் விடலாம் என்றே தோன்றுகிறது. ஜலத்தில் சுத்தம் பார்த்துச் சாப்பிடுவதும், புல்லை ஊதி யூதி உண்பதையும், முணுமுணுக்காமல் எஜமானுக்கு எந்த நேரத்திலும்—கடு வெயில் என்றுகூடப் பாராமே



பொதி சுமப்பதை—ஊழியஞ் செய்வதையும் நினைத்தால் கழுதை உண்மையிலேயே ஒரு அருமைப் பிராணிதான். அப்பேர்ப்பட்ட ஜெந்துவைச் சட்டத்துடன் ஒப்பிடலாமா வென அந்த ஆசிரியரைத் தானே கேட்கிறோம்.

ஒரு தேசத்துச் சாதாரண சட்டங்களே கழுதைகளானால் அந்த ஜனங்களின் இஷ்டத்திற்கு விரோதமாக—அந்த ஜனங்களின் சுதந்திரத்தை மிதித்துத் துவைப்பதற்காக எதேச்சாதிகாரத்தால் ஏற்படுத்தப் பட்டிருக்கும் அவசரச் சட்டங்கள் கழுதை யினத்தில் எதைச் சேர்ந்ததா யிருக்கலாம்? கோவேறு கழுதை யென்னலாமா? பகவான் கிறிஸ்துவைச் சுமந்த பெருமை யுண்டே, அரசர்கள் ஏறும் (கோ = அரசர்) கியாதிப் பேர் பெற்றிருக்கிறதே அதைக் கறைப்படுத்தக் கூடாது. அப்படியானால் எத்தோடுதான் ஒப்பிடலாம்? எலும்புந் தோலுமாய் மெலிந்து, நாலு காலும் முட்டி தட்டப் புண்ணும் புழுவுமாய்த் திரியும் கடைகெட்ட கழுதையோடுதான் சேர்க்க வேண்டும். “மெலிந்த வுடலில் மெலிந்த மனம்” என்பது போல மெலிந்த கழுதைக்குக் கோபமும் அதிகம் வரும். முன்னாற் போனால் பாய்ந்து கடிக்கும், பின்னாற் சென்றால் ஓங்கி யுதைக்கும். அவசரச் சட்டங்களும் அப்படித் தான் செய்கின்றன. சாத்வீகிகளை யெல்லாம் முறைக்கிறது; “கள்ளைக் குடியாதே” என்றால் கடிக்கிறது. “சுதேசிக் கதரைக் கட்டுங்கள்; விதேசியை விலக்குங்கள்” என்றாலும் உதைக்கிறது. இப்பேர்ப்பட்ட கழுதைகளின் கொட்டம் என்றைக்குத்தான் அடங்குமோ தெரியவில்லை.

## ஷயாம சக்கிரவர்த்தி சாய்ந்தார்:

வங்க தேசம் தனது மா பெரும் தலைவரை—பழம் பெரும் தேசபக்தரைப் பறிகொடுத்துவிட்டது. பத்திரிகாசிரியர்கள் தங்களது ஜாதியில் ஒரு நிபுணனை யிழந்தனர். ஸ்ரீ ஷயாம சுந்தர சக்கிரவர்த்தியின் பிரிவால் இந்தியா தனது வீர ரத்தினத்தைத் தோற்றுவிட்டாள்.

தூங்கிக் கிடந்த பாரதத்தை—சுதந்திரம் இன்னதெனத் தெரியாது அடிமைத்தனம் இரத்தத்தோடு சுவறிப்போய் ஒரே அந்தகார பந்தத்தால் இருளடைந்து கிடந்த ஹிந்துஸ்தானத்தை முதன் முதலில் தட்டி யெழுப்பியவர் ஷயாம சுந்தரர். அரவிந்த யோகி, சுரேந்திர பாபு, ஷயாம சக்கிரவர்த்தி இம் மும்மூர்த்திகளும்தான் வங்காளிகளின் பூஜிக்கும் தெய்வமா யிருந்தார்கள். அரவிந்தம் புதுச்சேரியில் பூக்கவும், சுரேந்திரன் தேவலோகம் புக்கவும், சக்கிரவர்த்தி, காந்தியுடன் கலந்து சர்க்காருடன் ஒற்றுழையா திருந்து

பின்பு ஜனங்களுடனும் ஒற்றுமையாமல் தேசியத்திலிருந்து விலகிக் கொண்டார். அதற்காக அவரை இகழ்பவரும் உண்டு. என்றாலும் அவர் செய்த எண்ணற்ற தொண்டுகளை மறக்க முடியுமா? அரிய தியாகத்தைப் போற்றாதிருக்கலாமா? அவரது ஆத்மா சாந்தியடையட்டும். அவரது பந்து மித்திரர்கள் ஷ்யாமரின் புகழ் உடம்பைக் கண்டு ஆறுதல் அடையட்டும்.

## பர்மாப் பயணம்:

எமது பர்மா பயணம் புரட்டாசியி லில்லை; ஐப்பசியில்தான் ஆகும்போ லிருக்கிறது. விலக்க முடியாத சில காரணங்களால் இப் பிரயாணம் இம் மாதத்தில் தடைப்பட்டதற்கு வருந்துகிறோம். எமது தேக நிலை இடங் கொடாததாலும், நாம் எடுத்துச் செல்ல வேண்டிய முக்கிய பிரசுரங்கள் காலஹரணப் பட்டதாலுமே பயணத்தை அடுத்த மாதத்திற்கு ஒத்திவைக்க வேண்டிய தேற்பட்டது. பர்மா முதலிய நாடுகளி லிருக்கும் "பாரதி" யன்பர்கள் பலர் கடித மூலமாக விரைந் தழைத்தும் அவர்களது விருப்பத்தைச் சீக்கிரம் பூர்த்தி செய்ய முடியாததற்கு நாமென் செய்வது? அவர்களின் மன்னிப்பை விழைகிறோம். ஐப்பசியில் நிச்சயமாய் நாம் பர்மா புறப்படுகிறோம். அங்குள்ள தமிழர்கள்—எமது பிரிய தமிழர்கள்-"பாரதி"யின் அன்பிற்கும் ஆதரவிற்கும் பாத்திரமான தமிழர்கள் ஆதலால் எம்மையும் "பாரதி"யையும், "பாரதி"யின் பிரசுரங்களையும் பெருமிதமாக ஆதரிக்க வேண்டுகிறோம்.

## அர்த்தமென்ன?

இந்தியச் சிறைச்சாலைகளை சீர்திருத்தசாலைகளாக மாற்றியமைக்கவேண்டும். ஏனெனில் அவற்றினின்றும் நல்ல செய்திகள் வருகிறதே யில்லை. சிறைக் காற்று இப்பொழுது வீசிக்கொண்டிருப்பதுபோல் வஞ்சனையும், பழியும், பாவமும் கலந்த விஷக் காற்றா யிராமல் மனித வர்க்கம் நுகரக் கூடிய—உண்டு உஜ்ஜீவிக்கக் கூடிய சுத்தமான காற்றாகும்படி செய்யவேண்டும். கல்வியால், செல்வத்தால், நாகரீகத்தால் உயர்ந்த தேசாபிமானிகளுக்கு இச் சிறைவாசம் உடலுக்கும், உணர்ச்சிக்கும் பிடிக்கவில்லை.

சில தினங்களாக சிறையிலிருந்து வெளிவரும் செய்திகள் எல்லாம் ஆபத்தையும், பொதுஜன அதிருப்தியையும், நாட்டின் அமைதிக் குறைவையுமே உண்டாக்குகின்றன. தலைவர்களுக் கெல்லாம் நோய். உடலுக்குக் கஷ்டம்! உயிருக்கு ஆபத்து! ஆனால் சர்க்காரோ சிம்லா சிகரத்தில் சுகந்தமான காற்றைக் குடித்துக் கொண்டு, மனோகரமான வாழ்க்கையில் லயித்திருக்கிறது; அடக்குமுறை லகிரி உச்சித் தலைக்கேற உன்மத்தம் பிடித்திருக்கிறது.



ரோமாபுரி நெருப்புப் பற்றி யெரிகையில் அதை அவிக்க நினைக்காமல் மலை மீதேறி வீணை வாசித்துக்கொண்டிருந்த முட்டாள் நீரோ மன்னனைப்போல் இந்திய சர்க்காரும் என்னவோ செய்துகொண்டிருக்கிறது. தேசாபிமானிகளின் உயிர் தேசத்தின் உயிர். அதற்கு ஹானி நேர்ந்தால் நாடு சகிக்காது. தங்களது பராமரிப்பில் அடைத்து வைத்திருக்கும் அந்த ஆத்மாக்களை சர்க்கார் கண்டிப்பாய்க் காத்து உத்தரவாதம் செய்துதானாகவேண்டும். விதியில்லாவிட்டால்—வழியில்லாவிட்டால் விட்டுவிடட்டும்.

வித்தல்பாய் வியாதியானார். சென்குப்தாவுக்குச் சரியில்லை. சுபாஷ் சந்திரன் சீக்காயிருக்கிறான். சாரத சந்திர போஸுக்கு நீரிழிவு நிற்கவில்லை. ராஷ்டிரபதி ராஜேந்திரன் நோய்வாய்ப் பட்டிருந்தான். ஜவஹர் நிலைமையும் நன்றாயில்லை. அய்யங்கார் அபாயமுற்றார். இப்படி எல்லாத் தலைவர்களும் ஏன் நோய்வாய்ப் படவேணும்? சர்க்காருக்கு வஞ்சந் தீர்த்துக்கொள்ளும் நோக்கம்—பழிவாங்கும் எண்ண முண்டானால் வேறு பகிரங்க வழியில் நேர்மையான முறையில் காட்டிக் கொள்ளட்டுமே.

ஒரு அரசனையோ அல்லது அரசாங்கத்தையோ எதிர்க்கும் ஒருவன் அரசனைப்போல் மதிக்கப்படவேண்டியவன். அரசாங்கக் கைதியாக ஆகிவிட்டாலும் அவனுக்கு அரச மரியாதை யளிக்க அரசாங்கம் கடமைப்பட்டிருக்கிறது. யுத்தத்தில் பிடிபட்ட கைதிகளைப்போல் இந்த சாத்வீக யுத்தத்தில் சிறை செய்யப்பட்டிருக்கும் கைதிகளையும் நடத்துவதுதான் யுத்த தர்மம்—இராஜ நீதி.

சிறையி லேற்படும் எல்லாக் கஷ்டங்களிலும் தனிமை (Solitude)த் துயரந்தான் சகிக்க முடியாதது. சமூகப் பிராணியாகிய மனிதனைத் தனிமையில் கிடத்துவதைவிட சித்திரவதை வேறு கிடையாது. ஆகையால் அரசியல் கைதிகள் அனைவரையும் மாகாணவாரியாகத் தனித்தனி சிறைகளில் சர்வ வசதிகளுடனும் அடைத்து வைப்பது நேர்மை. சர்க்காரளிக்க விருக்கும் அரசியல் சீர்திருத்தத்தைவிட இதுபோது சிறைச் சீர்திருத்தமே மிக மிக முக்கியமான தென்பது எமது திடமான அபிப்பிராயம்.

## 18-லா? 20-லா?

காந்திஜீயின் தீண்டாதார் விரதம் 18-ம் தேதியிலா? 20-ம் தேதியிலா? என்கிற சந்தேகம் எமக் கேற்படுகிறது. செப்டெம்பர் 18-ந் தேதியன்று அவரது சோமவார விரதம் ஆரம்பித்து 19-ந் தேதி திங்கட்கிழமை மாலையில் முடிவாகிறது. அப்புறம் 20-ந்தேதி விரதம் ஆரம்பம். காந்தியின் நாள் இரவுக்குப் பின் பகல். இஸ்லாமியரும் அப்படிதான் கணித்திருக்கின்றனர். கிறிஸ்தவர்களுக்கு முன்னாற் பாதி இரவும் நடுவில் முழுப் பகலும் பின்னால் பாதி இர

வும் கொண்டது ஒரு நாள். இந்துக்கள் பகலுக்குப் பின் இரவை வைத்துக் கணித்திருக்கின்றனர். இவற்றிற் கெல்லாம் அவரவர் கணித்தபடி ஏதாவது தக்க காரணங்கள் இருக்கத்தான் வேண்டும். அவைகளை இப்பொழுது ஆராய வேண்டாம். ஆனால் காந்தி நாளில் ஒரு விசேஷ மிருக்கிறது. இரவுக்குப் பின் பகல்—துன்பத்தில் இன்பம்—கஷ்டத்திற்குப் பிறகு சுகம் என்கிற தத்துவார்த்தம் பொதிந்திருக்கிறது. இம் முறையில் காந்திஜீயின் 20-ந் திகதி, திங்கட் கிழமை மாலையிலேயே ஆரம்பித்து விடுவதால் 18-ந் திகதியிலே விரதமும் ஆரம்பமாகின்ற தென்பது எமது அபிப்பிராயம். ஆகையால் வகுப்புப் பிரச்னை 18-ந் திகதி திங்கட் கிழமை மாலைக்குள் முடிவடைந்து விட வேண்டு மென்று பிரார்த்திக்கின்றோம்.

**ஸ்வர்க்கிய மேத்தா:**

இரங்கோன் டாக்டர் மேத்தா சில தினங்களாக இவ்வுலகத்தை விட்டுப் போய்விட்டார். இன்னேரமெல்லாம் இன்ப உலகத்திலே—ஸ்வர்க்க பூமியிலே நமது மூதாதைகள் மத்தியிலே இந்தியாவின் செய்திகளை—பாரதத்தின் சுதந்திரப் போரை—வியாசன் பாரதம் பாடிய பாணியிலே சொல்லிக்கொண் டிருப்பார். தென்னாப்பிரிக்காவில் காந்தி பாபுவுடன் சத்தியாக்கிரஹஞ் செய்ததையும் இரங்கோனி லிருந்து வருஷா வருஷம் ஆயிரக் கணக்கான ரூபாய்கள் காந்தி மஹாத்மாவுக்குக் கப்பம் கட்டி வந்ததையும் கெர்வத்தோடு கூறிக்கொள்ளுவார். திலகன், தாதாபாய், ஜெபதி. தாஸன், மதிலால், முகமதலி முதலிய தெய்வங்களின் மத்தியிலே டாக்டர் மேத்தா ஒரு விருந்தினரா யிருப்பார்.

பச்சைவாத நோயினால் பாதிக்கப்பட்டுக் கிடந்த மேத்தா எத்தனையோ வருடங்கள் இந்தியத் தலைவர்களை உபசரிப்பதற்காக உயிரைக் கையிலே பிடித்துக்கொண்டு வாழ்ந்தார். இந்தியாவிலிருந்து பர்மாவுக்குச் செல்லும் இராஜ்ய வாதிகளுக்கெல்லாம் அவரது அரண்மனை ஒரு அன்ன சத்திரம். அவரது பணப்பெட்டி தர்ம உண்டியல்—பொதுச் சொத்து; எவ்வளவு வேண்டுமானாலும் செலவு செய்து கொள்ளலாம். காந்திஜீ பர்மா சென்றிருந்த மும்முறையும் அவரது வீட்டிலேதான் தங்கினார். சென்குப்தாவும் அங்குதான்; சரளா தேவியும் அங்குதான்; மணிலால் கோதாரியும் அங்கேதான் தங்கினர்.

பர்மா மாகாண காங்கிரஸ் தலைவராகவும், காந்திஜீயின் அன்பார்ந்த நண்பராகவும், தேசீய கர்ணனாகவும் இருந்து மறைந்த டாக்டர் மேத்தாவுக்கு எமது காணிக்கையும், அவரது ஆத்மாவுக்கு பூரண சாந்தியும், அவரது பந்து மித்திரர்களுக்கு முழு ஆறுதலும் சேருவதாக.

197882
800 003




# " பாரதி "

## சிறந்த செந்தமிழ் மாதப்பத்திரிகை

நான்காம் ஆண்டு நடைபெறுகிறது.

சுதந்திரம் கொண்டு சமத்வம்பற்றிச் சகோதரத்வம் ஏற்று
குறைந்த சந்தாவிலே நிறைந்த விஷயங்களால் உயர்ந்த
மாஸிகையாய் மத பேதமற்று ஜாதி பேதமற்றுக்
கட்சி பேதமற்று இந்தியரனைவரும் பாரத
மாதாவின் மக்களென்ற மேலான கொள்கையுடன்
தேசாபி விருத்தியை முக்கிய முதல் நோக்கமாகக்கொண்டு
தேச விடுதலைக்காக உழைக்கும்
தேசீய மணங் கமழும் செந்தமிழ் மாஸிகை

**"பாரதி" ஒன்றே யாகும்.**

உடனே சந்தாதார்களாய்ச் சேருங்கள்.
உங்கள் நண்பர்களுக்கும் இதனைப்பற்றி
அறிக்கை செய்து, சந்தாதார்களாய்ச்
சேர்த்துக் கொடுங்கள்.

**சந்தா விபரம்:**

போஷக சந்தா குறைந்தது ரூ **100/=**
உள் நாடுகளுக்கு வருடத்திற்கு ரூ **2/=** அல்லது **3** ஷிலிங்
வெளி நாடுகளுக்கு „ ரூ **3/=** „ **5** „
தனிப் பிரதி விலை அணா 4. அயல் நாடு அணா 5.
மாதிரிப் பிரதி வேண்டுவோர் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.
நகரங்கள்தோறும் ஏஜெண்டுகள் தேவை.
இலங்கை, பர்மா, மலேயா, சிங்கப்பூர் முதலிய நாடுகளிலும்
ஏஜெண்டுகளை எதிர்பார்க்கப்படுகிறது.
விபரத்திற்கு 2 அணா ஸ்டாம்புடன் எழுதவும்.

பொறுப்பாளர்,
"பாரதி" ஆலயம்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

# "பாரதி"

# பைண்ட் வால்யம்

'தமிழ் நாட்டு மாடேன் ரேவியூ'வெனப் புகழப்பெற்று, சென்ற 1929-ம் ஆண்டு முதல் வெளிவந்துகொண்டிருக்கும்

## "பாரதி"ப் பத்திரிகையின் பைண்ட் வால்யம்

உங்கள் புத்தகசாலையை அழகு செய்வதாயிருக்கின்றது.

இவைகளில் பல பெரியோர்கள் சரிதைகளும், தேசாபிமானச் செல்வர்களின் சரிதைகளும், அவர்தம் படங்களும் நிறைந்திருக்கின்றன.

தமிழ் நாட்டின் அறிஞர் சிகாமணிகளும், பண்டிதப் பெரியார்களும், ஆராய்ச்சி நிபுணர்களும் எழுதிய கட்டுரைகள் என்றும் படித்துணரத் தக்கவையாய்த் திகழுகின்றன.

விஷயங்களுக்கும் அச்சுக்கும் ஏற்ற விதம் உறுதியாக பைண்ட் செய்யப்பெற்றிருக்கிறது.

800 பக்கங்கள்; நேர்த்தியான காலிகோ; கில்ட் பிரிண்ட்.

1930-ம் வருட வால்யம் 1-க்கு விலை ரூ. 2—8—0.
1931-ம் ,, ,, ரூ. 2—8—0.

தபாற் செலவு பிரத்தியேகம்.

வெளி நாட்டிலுள்ளோர்க்குத் தபாற்செலவுடன் ரூ. 3½ அல்லது 5½ ஷிலிங்.

**'பாரதி' ஆலயம்,**

உத்தமபாளையம், மதுரை ஜில்லா.